போதைப்பொருள் கடத்தும் இடமாக மாறுகின்றது அக்கரைக் கடற்கரை பக். 07

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34°c - 26°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 126 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 18, வியாழக்கிழமை 31.03.2016


# தற்கொலை அங்கி, கிளைமோர் மறவன்புலோ வீடொன்றில் மீட்பு

## முன்னாள் போராளி உள்ளிட்ட மூவர் கைது பின்புலம் தெரியாமையால் பெரும் பரபரப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31
சாவகச்சேரி–மறவன்புலோப் பகுதியில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்கொலைத் தாக்குதல் நடத்தும் அங்கி, கிளைமோர் உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் அலைபேசி சிம் காட்டுகள் என்பவற்றை மீட்டுள்ளதாகச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன், குறித்த அதனை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் அந்த வீட்டில் வசித்த முன்னாள் போராளி என்று கூறப்படும் குடும்பஸ்தர், கிளிநொச்சி–அக்கராயனில் வாகனம் செலுத்திக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் வடக்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது மட்டுமன்றி, தெற்கு அரசியலிலும் கவனத்தை திருப்பியுள்ளது.
குறித்த வெடிபொருள்கள் எவ்வாறு அவரது வீட்டுக்குள் சென்றன? திட்டமிட்டு அங்கு வைக்கப்பட்டனவா? கைமாற்றம் செய்வதற்காக அங்கு வைக்கப்பட்டனவா? பக். 25







## தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

### சாவகச்சேரி வெடிபொருள் மீட்புக் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விளக்கம்



கொழும்பு, மார்ச் 31
சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படப்போவது இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டி பக். 25

## சாவகச்சேரி வெடிபொருள்கள் கொழும்புக்குக் குறி வைப்பா?

### கேள்வி எழுப்புகிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, மார்ச் 31
சாவகச்சேரியில் மீட்கப்பட்ட வெடிபொருள்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட இருந்திருக்கின்றன. அவை ஏன் கொழும்புக்குக் கொண்டுவரப்பட இருந்தன? இதனோடு தொடர்புடைய விடயங்கள் என்ன? இதன் உண்மையை அரசு வெளிப்படுத்த வேண்டும்.
இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பக். 26

## மீளெழுகின்றனராம் விடுதலைப் புலிகள்

### நடுக்கத்தில் நாமல் எம்.பி.

கொழும்பு, மார்ச் 31
விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் மீள எழுச்சி பெறாது என்று நினைத்தவர்கள், அது தொடர்பில் மீளச் சிந்திக்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
சாவகச்சேரியில் கண்டெடுக்கப்பட்டுள்ள வெடிபொருள்கள் தொடர்பில் தனது ருவிட்டர் தளத்தில் கருத்து வெளியிடுகையி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்,
விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைக்கப்படுகின்றார்களா? என்பதை அறிவதற்கான உரிமை மக்களுக்கு உள்ளது.
விடுதலைப் பக். 26

## திட்டமிட்டபடி யாழ். வருவார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், மார்ச் 31
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்று, ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
சாவகச்சேரி – மறவன் புலோப் பகுதியில் பக். 25



## பெருமளவு வெடிபொருள் மன்னாரிலும் கண்டுபிடிப்பு

மன்னார், மார்ச் 31
மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை கமநல சேவைகள் நிலையத்துக்குச் சொந்தமான காணியின் பின் பகுதியில் இருந்து நேற்றுப் புதன்கிழமை மாலை ஒரு தொகுதி வெடி பொருள்களை இலுப் பைக்கடவைப் பக். 25

## முன்னாள் போராளிகள் எழுவர் நேற்று விடுவிப்பு

வவுனியா, மார்ச் 31
வவுனியா - பூந்தோட்டம் முகாமில் புனர்வாழ்வு பெற்று வந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் ஏழு பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.
குறித்த விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.
பூந்தோட்டம் முகாமின் ஒருங்கிணைப்பு அதிகாரி கேணல் ஏ.ஆர். ஹம்டோன் முன்னிலையில் இந்த விடுவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.
(த-வ-5)

முச்சந்தி முரளி



என்ன பிளான் பண்றாங்களோ தெரியேல்ல....

## வடக்கு அரசின் தீர்வுத் திட்டம் இன்று இறுதியாவதற்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31
வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத் திட்டம் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை. இன்று நடைபெறும் கலந்துரையாடலில் இது இறுதிப்படுத்தப் படலாம் என்று தெரிவிக்கப்படு பக். 25

## சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்த முதியவருக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறை

### இழப்பீடாக 20 லட்சம் ரூபா வழங்குமாறும் யாழ்.மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31
சிறுமிக்கு மயக்க மருந்து கொடுத்துக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தி, அந்தச் சிறுமி குழந்தை பெற்றெடுக்கக் காரணமாக இருந்ததோடு, குழந்தை பெறக் காரணம் தான் அல்ல என்றும், வேறு ஆள்களே என்றும் சிறுமிக்குக் களங்கம் ஏற்படுமளவுக்கு நடந்து கொண்ட கரணவாய் சித்தி விநாயகத்துக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.
அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 20 லட்சம் ரூபா இழப்பீடு செலுத்த பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கேட்டு நேற்று ஆர்ப்பாட்டம்

மன்னார், மார்ச் 31

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று அக்கரைப்பற்றில் பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. காணாமல் போகச் செய்தலை இல்லாது செய்வோம், ஜெனிவா வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணிக்கு அக்கரைப்பற்று சாகாம வீதி மற்றும் அம்பாறை வீதி மற்றும் பொத்துவில் வீதி ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பமான பேரணிகள், அக்கரைப்பற்று நகர் மணிக் கூட்டுக் கோபுரத்தில் ஒன்றிணைந்தன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எமது உறவுகள் எங்கே? என்ற வாசகம் பொறிக்கப்பட்ட கறுப்புப் பட்டியை தலையில் அணிந்திருந்தனர்.



பின்னர் எமது பிள்ளைகள், கணவன், மனைவிகள். இருக்கின்றனரா? இருப்பார்களென்றால் எங்கே? கொல்லப்பட்டார்களேயானால் ஏன் கொன்றார்கள்? எவர் கொலை செய்தது? எதற்காக? எங்கே புதைத்தீர்கள்? போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கல்முனை பிரதான வீதி ஊடாக அக்கரைப்பற்று அதாவுல்லா நகர மண்டபத்தை சென்றடைந்து ஆர்ப்பாட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

அம்பாறை மாவட்ட காணாமற் போனோரின் குடும்ப ஒன்றியத்தின் தலைவி இ.செல்வராணி தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

(ந-40)

# டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு

குருநகர், மார்ச் 31

யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினரால்,குருநகர்ப் பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குருநகர் பகுதியிலுள்ள வீடுகள் தரிசிக்கப்பட்டதுடன் இந்த வீடுகள் தரிசிக்கப்பட்டமையை உறுதிப்படுத்த வீட்டு உரிமையாளர்களிடம் கையொப்பங்களும் பெறப்பட்டன.

வீடுகள் தரிசிக்கப்பட முன்னர் வீடுகளை சுத்தமாக வைத்திருக்குமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குறிப்பிட்ட பிரிவு கிராமசேவையாளர்கள், பொலிஸார், படையினரும் யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினரும் கலந்து கொண்டனர். றெக்கிளமேசன், குருநகர் கிராம சேவையாளர் பிரிவுகளில் இவை முன்னெடுக்கப்பட்டன. ஆலயச்சுற்றாடல்,பாடசாலைகள், வியாபார நிலையங்கள், வீடுகள் என்பவற்றை டெங்கு நுளம்பு உற்பத்தியாகாதவாறு துப்புரவாக வைத்திருக்குமாறும் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (ந-51)

# நிதி கையாள்கை தொடர்பான கருத்தரங்கு

கரணவாய், மார்ச் 31

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டகிராமஅபிவிருத்திச்சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் நிதி கையாள்வது தொடர்பான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதில் யாழ். மாவட்ட திணைக்களப் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கணக்காய்வுத் திணைக்கள நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டு முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடவுள்ளதால் சகல அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றின் பொருளாளர், செயலாளர் மற்றும் தலைவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (ந-108)

# ‘பாக்’ வீதி களஞ்சியத்திலிருந்து ராணுவத்தினர் வெளியேறினர்

வவுனியா. மார்ச் 31

வவுனியா ‘பாக்’ வீதியில் உள்ள இராணுவத்தினரின் விசேட அதிரடிப் படை முகாமில் இருந்து நேற்று விசேட அதிரடி படையினர் வெளியேறியுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினர் முகாமிட்டிருந்த நெற்களஞ்சியசாலையை விடுவிக்குமாறு பொது மக்கள் உட்படப் பல தரப்பினராலும் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையிலேயே இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

குறித்த நெற்களஞ்சிய சாலையிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று விவசாயிகள் பல தடவை கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக வவுனியா மாவட்ட பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஊடாக ஜனாதிபதி மற்றும் இராணுவத் தலைமையகத்துக்கும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஆயினும் ஆரம்பத்தில் பாதுகாப்பைக் கார்ரணம் காட்டி அங்கிருந்து வெளியேற மறுத்திருந்த இராணுவத்தினர் தற்போது பிரதமர், ஜனாதிபதி ஆகியோரின் தலையீட்டை அடுத்து வெயியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-21,402)



# 3ஆவது கணவனோடு சென்றவர் 2ஆவது கணவரால் கொலை!

கொழும்பு, மார்ச் 31

மூன்றாவது கணவனோடு வாழ்ந்த பெண்ணொருவரை அவரது இரண்டாவது கணவன் கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் ஒன்று உடவளவ பகுதியில் நடந்துள்ளது.

உடவளவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனமன்வில பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று உடவளவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

23 வயதான குறித்த பெண் தனது மூன்றாவது கணவனுடன் மோட்டார் வண்டியில் பயணித்த போது நபர் ஒருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் இரண்டாவது கணவனே இந்தக் கொலையை செய்துள்ளார் என்று பொலிஸார் நம்புகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை–குறித்த பெண் 17 வயதி லேயே திருமணமானவர் என்றும்–இவருக்கு முதல் திருமணத்தின் மூலம் 5 வயதில் ஆண் குழந்தை ஒன்று உள்ளது என்றும்–பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த பெண்ணின் இரண்டாவது கணவனும், மோட்டார் வண்டியை செலுத்தி வந்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று உடவளவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-5)

# வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் மகோற்சவத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

உற்சவ காலங்களில் தினமும் காலை 8 மணிக்கு அபிசேகமும் காலை 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ரி)

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி முல்லை. சுகாதாரத் தொண்டர்கள் மனு

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவில் நீண்ட காலமாகப் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான மனுவை வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனிடம் நேற்றுக் கையளித்த சுகாதாரத் தொண்டர்கள் அதனை ஜனாதிபதி, சுகாதார அமைச்சர், வடமாகாண முதலமைச்சர், வடமாகாண சுகாதார அமைச்சர் ஆகியோரிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவைச்சேர்ந்த வைத்தியசாலைகளில் சுகாதாரத்தொண்டர்களாகக்கடமையாற்றும் ஊழியர்களால் இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

போர் இடம்பெற்றபோது எங்கள் உயிர்களைப்பொருட்படுத்தாது தொண்டர்களாகப்பணியாற்றிய எங்களுக்கு இன்று வரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அதனால் மிகவும் வறுமையில் நாம் வாழ்கின்றோம். எங்களுடன் தொண்டர்களாகப் பணியாற்றிய பலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளபோதும் எமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. எமக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்று சுகாதாரத்தொண்டர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனுக்களைப்பெற்றுக்கொண்ட து.ரவிகரன் சம்பந்தப்பட்டவர்களுக்குமனுக்களைஉடனடியாக அனுப்பிவைப்பதுடன் சுகாதார தொண்டர்களுக்கு நியமனம் கிடைக்க வேண்டும் என்ப [illegible] என்றும் தெரிவித்தார். (ந-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் நடவடிக்கையை எதிர்த்து மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 31

நீர்வேலியில் அடாவடியாகச் செயற்படும் சிலர், விழிப்புக்குழுவைச் சேர்ந்தவரை கட்டி வைத்து அடித்ததோடு, வாளால் வெட்டியும் காயம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளைக் கைது செய்யாத கோப்பாய் பொலிஸார், பொய்க் குற்றச்சாட்டுக் கூறி காயப்பட்டவர்கள் வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது கைது செய்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பொலிஸாரின் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் ஒன்றுகூடி நேற்று கோப்பாய் பிரதேச செயலகத்திலும், யாழ். மாவட்டச் செயலகத்திலும் முறைப்பாடு செய்ததோடு, அவர்களது பிரதிநிதிகளால் யாழ்.மேல் நீதிமன்றிலும் தகவல் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது.

கோப்பாய் பிரதேச செயலகச் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது நீர்வேலிப் பிரதேசத்தில் விழிப்புக் குழுவில் உள்ள ஒருவர் பின்வரும் விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

இதில், நீர்வேலிப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் ஒரு குழுவினர் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் நீர்வேலியிலுள்ள ஒரு வீட்டில் இரவு வேளைகளில் கூடுகின்றனர். அங்கு மதுபானம் அருந்துகின்றனர். அத்துடன் வாள்களுடன் இருக்கின்றனர். இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிள் பயன்படுத்துகின்றனர். இந்தக் குழுவினர் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதன் பின்னர் 29 ஆம் திகதி இரவு இளைஞர்கள் வழமை போன்று விழிப்புக் குழு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது வாள்களுடன் உலாவும் குழுவினர் இரவு பத்து மணியளவில் கற்களாலும் போத்தல்களாலும் நீர்வேலியில் பூசகர் ஒருவரின் வீட்டுக்கு எறிந்துள்ளனர். இதனை ஏன் என்று விழிப்புக்குழுவினர் கேட்டுள்ளனர்.

இதன்போது பத்மசீலன் என்பவரை இழுத்துச் சென்ற குறித்த கும்பல், அவர்கள் தங்கி நிற்கும் வீட்டின் தென்னை மரத்தில் கட்டி அவரை அடித்துள்ளனர். பத்மசீலன்என்பவரே கோப்பாய் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் மேற்படி குழுவினர் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தவர்.

பத்மசீலனின் தந்தையார் இது தொடர்பில் அடிதடி குழுவினரிடம் கேட்டபோது, அவருக்கு வாளால் வெட்டியுள்ளனர். இதன் பின்னர் ஊரவர்கள் திரண்டுள்ளனர். இதனையடுத்து பத்மசீலன் மற்றும் அவரது தந்தையார் இருவரையும் ஓட்டோவில் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

திருட்டு உள்ளிட்ட குற்றச் செயல்களில் சிலர் குழுவாகச் செயற்படுவதாக முன்னரே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் அத்தகைய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குற்றச்செயல்களில் குழு ஒன்று ஈடுபடுவதாக சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதனால், அந்த அடாவடிக்குழு விழிப்புக்குழுவில் உள்ள ஒருவரை தென்னை மரத்தில் கட்டிவைத்து தாக்கியதோடு, அதனைத் தட்டிக்கேட்ட அவரது தந்தையாரை வாளால் வெட்டியுள்ளது. பின்னர் விழிப்புக் குழுவினர் தம்மைத் தாக்கியுள்ளதாகக் கூறி வைத்தியசாலைக்குச் சென்றதோடு, பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆனால் பொலிஸார் கட்டி வைத்து அடித்துப் பின்னர் வாளால் வெட்டியவர்களைக் கைது செய்யாது, பக்கச்சார்பாகச் செயற்பட்டு காயப்பட்டவர்கள் வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது அவர்களையே கைது செய்துள்ளனர் என்று இது பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கை எனக் குற்றஞ் சாட்டி எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் விழிப்புக் குழுவினர் அத்துமீறிப் புகுந்து தன் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து அடிதடி குழுவில் உள்ளவர் என்று மக்களால் அடையாளப்படுத்தப்படும் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதன்படியும் பொலிஸார், காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்ற ஆட்டோச் சாரதியையும் பத்மசீலனையும் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸாரின் கருத்தைப் பெறமுடியவில்லை.

பொலிஸாரின் குறித்த நடவடிக்கையை பக்கச் சார்பானது என்று குற்றஞ் சாட்டியுள்ள பொதுமக்கள், நேற்றைய தினம் பஸ்ஸில் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு பிரதேச செயலாளருடன் பேசினர். இதன் பின்னர், யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு வந்து அரச அதிபருடனும் பேசினர்.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த விடயம் தொடர்பில் கிராம மக்கள் நேரில் வந்து எழுத்தில் முறையிட்டுள்ளனர். இது தொடர்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தமது கண்காணிப்பும் தொடரும் என்று தெரிவித்தார்.

(த-வ-4,5,10)

## வதிரி கூட்டுறவு நகரில் திருட்டு

கட்டைவேலி – நெல்லியடி வதிரி கூட்டுறவு நகரில், திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்றைய தினம் குறித்த கிளையின் முகாமையாளர் கடையினைத் திறந்து பார்த்த போது, கடையின் கூரைப் பகுதியில் உள்ள சீற்றைக் கழற்றி அதன் கீழுள்ள மண்ணெண்ணெய் தகரத்தையும் அதன் கீழுள்ள சீற்றையும் உடைத்து உள்ளே புகுந்துள்ள திருடர்கள், பெருமளவு பொருட்களைக் களவாடியுள்ளனர்.

இதில் பெருமளவிலான தொலைபேசி மீள் நிரப்பும் அட்டைகள் மற்றும் பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாகவும், அவை தொடர்பான விபரங்கள் கணக்கெடுப்பின் பின்னரே தெரியும் எனவும் முகாமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருவதோடு, காங்கேசன்துறைப் பொலிஸார் கைவிரல் அடையாளத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.


(த-வ-422)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2755 திகதி 30.03.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
26 28 62 63 S
போனஸ் இல. 07
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 12,385,425/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
2016.04.02 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Galaxy Star
வெற்றி வாரம் 047 திகதி 30.03.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
08 03 35 39 52
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 2,764,200/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

கார் விற்பனைக்கு
KB மாருதி 800 கார் விற்பனைக்கு லீஸ் 19800+18 hand 575000
077 225 9030

விற்பனைக்கு உண்டு
தரமான சிமெந்துக் கற்கள், தூண்கள் மலிவு விலையில்! யாழ்ப்பாணத்திற்கும் ஒப்பந்தகாரருக்கும் விஷேட சலுகை!
தொடர்பு : 075 039 1980

CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி
வேலைவாய்ப்பு உத்தரவாதம் *
(*Conditions apply)
Next Beatch :- 02.04.2016
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
021-4926222,077-3013060

வேலையாள் தேவை
கனகராயன்குளம் A9 வீதியில் புதிதாக திறக்கப்பட்ட உயர்தர சைவ உணவகத்துக்கு முன்அனுபவமுள்ள ( Waiter ) உணவு பரிமாறுபவர் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 977 9240

31 ஆம் நாள் நினைவஞ்சலி
மண்ணில் 18.12.1945 விண்ணில் 01.03.2016
அமரர்
நேசமணி கிறிஸ்ததாஸ்

அம்மா! எனும் சொல்லுக்கு
அர்த்தம் கொடுத்தவளே...
அகிலத்தில் நாமெல்லாம் தழைத்தோங்க!
ஆன்ற பல பணி செய்தீர்!
இன்பமெல்லாம் எமக்களித்து — இன்று
எமைவிட்டுச் சென்றதெங்கோ....?
திங்களொன்றும் கடந்ததம்மா....
தீரவில்லை உம் சோகம்!
மறுபடியும் ஒரு முறை — அம்மாவாய்
தரிசனம் தாருமம்மா
தங்கமால், அல்வாய் தெற்கு
தொடர்புக்கு: 021 226 3921
குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரின் பாரியார்
திருமதி கேதீஸ்வரி தர்மசோதி

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
(70399) (10.17)
முன்னாள் ஆசிரியர்கள்
யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்

கண்ணீர் அஞ்சலி

எமது உயிர் நண்பன் சதீஸின் பாசமிகு தந்தை
அமரர் சின்னத்தம்பி சின்னராசா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நண்பன் ஜெனா மற்றும் நண்பர்கள்

கண்ணீர் அஞ்சலி
28.03.2016 திங்கட்கிழமை அன்று காலமாகிய
அமரர் இராசமணி நடராசா
அவர்களின் பாதங்களில் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

பாசமிகு சகோதரர்கள்
சரவணமுத்து சுப்பிரமணியம்
சரவணமுத்து இராசதுரை
சரவணமுத்து இராசநாயகம்
பரமநாதன் இரத்தினம்
தவராசா சரஸ்வதி
மற்றும் பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல கப்பல்களின் வருகைக்கான முதலடியே தற்போதைய வருகை

## அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

ஐந்து ஆண்டுகளின் பின்னர் அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்துள்ளது. இது இன்னமும் பல கப்பல்களின் வருகைக்கான முதல் பயணமாக இருக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார். கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள அமெரிக்க கடற்படைக் கப்பலில், கடந்த திங்கட்கிழமை இரவு வழங்கப்பட்ட வரவேற்பு உபசார நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமது நாடு நல்லிணக்கம், அமைதி, ஒற்றுமை, வளம்மிக்கதாக இருக்க வேண்டும் என்ற இலங்கை மக்களின் விருப்பத்தை அமெரிக்கா மதிக்கிறது. இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் உறுதிப்பாட்டுக்கும், செழிப்புக்கும் சுதந்திரமான ஜனநாயகம் முக்கியமான தூணாக இருக்க முடியும். நாங்கள் இலங்கை மக்களின் விருப்பத்தை மதிக்கிறோம். 41 ஆண்டுகளுக்குப் பின்னர், கடந்த ஆண்டு மே மாதம் இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, இலங்கை மக்களினதும், வாக்காளர்களினதும் கண்ணோட்டத்துக்கு ஆதரவாக இருப்போம் என்று கூறியிருந்தார். இந்தக் கப்பலின் வருகை மூலம், புத்தாயிரமாண்டு சவால் மூலம், பல அமெரிக்க மூத்த அதிகாரிகளின் வருகைகளின் மூலம், அதனை நாம் செய்கிறோம். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்றின் முதல் வருகை இது. இன்னும் பலவற்றின் வருகைக்கான முதல் பயணமாக இது இருக்கும் - என்றார். (ற-ஐ-5)

# விரிவாக்கப்பட்டுள்ளது சம்பூர் கடற்படைத் தளம்

சம்பூரில் பொதுமக்கள் காணியிலிருந்து அகற்றப்பட்ட கடற்படைத் தளம், அதன் அருகில் முன்னர் இருந்ததை விடப் பெரிதாக அமைக்கப்பட்டுள்ளது என்று கடற்படை அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், சம்பூர் பிரதேசம் படையினரின் வசம் வந்ததையடுத்து, 2007 ஆம் ஆண்டு, அங்கு பெரியதொரு கடற்படைத்தளத்தை கடற்படையினர் அமைத்திருந்தனர். 237 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்த இந்தத் தளம் 2013 ஆம் ஆண்டு எஸ். எல். என்.எஸ் விதுர என்று பெயரிடப்பட்டது.

பொதுமக்களின் காணியில் அமைக்கப்பட்டிருந்த இந்தத் தளத்தின் ஒரு பகுதி கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 60 ஏக்கர் காணி உரிமையாளர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கையளிக்கப்பட்டன.

எஞ்சியிருந்த 177 ஏக்கர் காணிகளும் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினரால் முழுமையாக விடுவிக்கப்பட்டு பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. இங்கிருந்த கடற்படைத் தளம், அருகில் உள்ள வேறொரு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட தளம் அருகிலேயே,புதிதாகத் தளம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் முன்னைய தளத்தை விட சற்றுப் பெரிதாகவே அமைக்கப்பட்டுள்ளது என்று கடற்படை உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கடற்படைத் தளம் இடம்மாற்றப்பட்டதால், அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமைகளில் பாதிப்பு ஏற்படாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார் என்று - அந்தக் கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ற-ஐ-5)

## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.04.2016 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 80.00 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது. பால் உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் (உ 22292) (12.17.20)

## காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் முக்கால்மைல் தூரத்தில் விநாயகர் சிலைக்கு முன் வீதியில் 30யார் தொலைவில் 9பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (60785) (17,19,20)

தொடர்புகளுக்கு: 077 149 8506/ 077 641 3739/ 077 384 9328

## விஞ்ஞான பீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2014/2015 கல்வி ஆண்டுக்கான அறிமுக நிகழ்வு 04.04.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி வெள்ளிக்கிழமை 08.04.2016 பிற்பகல் 2.30 மணிவரை நடைபெறும். இவ்வறிமுக நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு புதிய மாண வர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 25.04.2016 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

**பதிவாளர்.** (சி.22294) (13.17.19)

## விற்பனைக்கு

பெண் ஆசிரியையின் தனிப்பட்ட பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள யப்பான் தயாரிப்பு Super CUB - 90 HONDA மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் மாலை 4 மணிக்கு பின்

தொடர்புகளுக்கு: 40/3, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

## சோதிடம்

ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம், திருமணப்பொருத்தம், வீட்டுக்கு நிலையம் எடுத்தல் ஆகியவற்றுக்கு தொடர்பு கொள்ளவும். திருமண சேவையும் செய்யப்படும்.

" சிவா சோதிடம்"
100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ்/ இந்து மகளிர் கல்லூரியடி)
077 899 6281

## கோலாகல திறப்பு விழா



01.04.2016
Friday at 9 am to 10 am
அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

New Lovers Coner
மூன்றாவது ஆண்டு நிறைவில்
4 ஆவது ஆண்டில்
கால்பதிக்கும் வேளையில்
4 ஆவது Beauty Parlour இனை
கோலாகலமாக திறக்கின்[illegible]

(70393) (13.19)

## PATRICIAN INSTITUTES
## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 05.04.2016

I. Computer course
- A. Information & Communication Technology (ICT) — Duration 4 months
  (O/L மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படுகின்றன)
- B. Advanced in Computer Programming — Duration 8 months
- C. Diploma in Microsoft Office — Duration 4 months
- D. Diploma in desk top Publishing — Duration 4 months
- E. Diploma in Video Editing — Duration 4 months
- F. Diploma in Type Setting — Duration 6 months
- G. Diploma in Computerized Accounting — Duration 4 months
- H. Diploma in Software Engineering — Duration 4 months
- I. Diploma in Micro media — Duration 6 months
- J. Diploma in Web Multimedia — Duration 4 months
- K. Professional Diploma in Graphic Design — Duration 4 months
- L. Computer Hardware Technology — Duration 4 months
- M. Internet & Email — Duration 3 months
- N. General Information Technology (GIT) — Duration 4 months
  (கணினி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில தட்டெழுத்து (ENGLISH TYPING) தமிழ் தட்டெழுத்து (TAMIL TYPING) இலவசமாக கற்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

II. Short Hand Typing (English) — Duration 6 months
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.

III. Short Hand Typing (Tamil) — Duration 6 months
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்)
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்

IV. Gentral motor Mechanism
(Petrol & Diseal வாகனங்கள், மோட்டார் வாகனம் திருத்துதல்) — Duration 6 months

V. Gentral Electrician (Wiring & Re - Winding)Industrial Electrician — Duration 6 months
ஜெனரல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு
மோட்டார் றிவைண்டிங்

VI. Lathe Machine Operation (Milling & Machine, Shaping Mechine என்பன கற்றுக்கொடுக்கப்படும்)
(கடைச்சல் இயந்திரம் பயிற்சி) (On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VII. Carpentery (With use of Machinery மரவேலை
(On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VIII. Refrigeration and Air Conditioning — Duration 6 months

IX. Motor Cycle Mechanism — Duration 6 months

குறிப்பு: 1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
Registrar, Patrician Institutes
61, (59), St.Patrick's Road, Jaffna.
T.P. 021 222 6148, Fax: 021 222 6148
Email: Patricianjaffna@yahoo.com (C/15877) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் குறித்த சர்ச்சை முடிந்தது

## இந்திய ஊடகம் கூறுகின்றது

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பில் அரசுக்கும், இலங்கை கட்டுமான தொழில் துறையினருக்கும் இடையில் காணப்பட்ட மோதலுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. - இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது இந்திய ஆங்கில ஊடகமான நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ். இது தொடர்பில் அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் சர்ச்சைக்குரிய வீடுகளை அமைத்த நிறுவனத்திற்கு, தொடர்ந்தும் அந்தப்பகுதியில் வீடுகளை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு 65 ஆயி ரம் வீடுகளை அமைப்பது தொடர்பில் நிலவிவந்த முரண்பாட்டுக்கு இலங்கை அரசும் இலங்கையின் கட்டுமானத் தொழிற்துறையினரும் தீர்வு கண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து ஏற்கனவே திட்டமிட்டபடி இந்தியாவின் லக்ஸ்மி நிவாஸ் மிட்டல் நிறுவனம் வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணியை முன்னெடுக்கும். இலங்கையின் பெரியளவிலான கட்டுமான தொழிற்துறையைச் சேர்ந்தவர்களின் கூட்டமைப்பு, நாட்டின் ஏனைய பகுதிகளில் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்கும். இலங்கையில் 5 லட்சம் வீடுகள்வரை தேவைப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி இலங்கை நிதியமைச்சின் திட்டமிடல் பிரிவு, 65 ஆயிரம் வீடுகளை முன்னெடுப்பதற்கான திட்டங்களுடன் வருமாறு, இலங்கையின் பெரியளவிலான கட்டுமான தொழிற்துறையைச் சேர்ந்தவர்களின் கூட்டமைப்புக்கு அழைப்புவிடுத்திருந்தது. அவர்களும் அதற்கான யோசனைகள் மற்றும் நிதிவளங்கள் குறித்த விவரங்களுடன் அங்கு சென்று அவற்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

எனி னும் இலங்கை அரசின் உயர்மட் டத்தினருடன்நெருக்கமானதொடர்பைக்கொண்டுள்ள ஆர்ஸ்லர் மிட்டல் நிறுவனம், வடபகுதியில் குறிப்பிட்ட 65 ஆயி ரம் வீடுகளை அமைப்பதற்கான அனுமதியைப் பெற்றுள்ளது. வடக்கு மாகாண சபையும், முதலமைச்சரும், தமிழ் தேசியகூட்டமைப்பும் சூழலுக்கு உகந்த விதத்தில் வீடுகள் கட்டி முடிக்கப்பட வில்லை என குற்றச் சாட்டுகளை முன்வைத்துள்ள போதிலும் அதனையும் மீறி இந்த நிறுவனத்துக்கு அனுமதி வழங் கப் பட்டு உள்ளது என அந்தச் செய்தியில் குறிப் பிடப்பட்டுள்ளது. (ற-வ-5)

# மகிந்த கொலைமுயற்சி வழக்கு நீதிமன்றத்தால் ஒத்திவைப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக்கொலை செய்யச்சூழ்ச்சி திட்டம் தீட்டினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருவருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் மகிந்த ராஜபக்ச, கோத்த பாய ராஜபக்ச, சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்ய சூழ்ச்சித் திட்டம் தீட்டினர் என்று இரண்டு பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக் களம் வழக்குத் தொடர்ந்துள்ளது.

கனகரட்ணம் ஆதித்யன் எனப்படும் கிரிதரன் மற்றும் கந்தவனம்கோகுல் நாத் எனப்படும் இன்பன் ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பயங்கரவாதச் செயற்பாடுகள் குறித்த வழக்குகளை விசாரணை செய்யும் விசேட உயர்நீதிமன்றால் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்குவிசாரணைகளின் போது முதலாம் சந்தேக நபருக்கு எதிரான சாட்சியங்களே, இரண்டாம் சந்தேக நபருக்கும் பொருந்துமா என்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நயோமி விக்ரமசேகர தெரிவித்தார். அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் சந்தேக நபர்கள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தது. இந்த வழக்கை எதிர் வரும் மே மாதம் 4 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்தது. (ற-ஜ-5)

# கைக்குண்டுடன் இளைஞன் ஒருவர் வவுனியாவில் கைது

வவுனியா, மார்ச் 31

வவுனியா பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு கைக்குண்டுடன் வவுனியாவை சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கு வந்த இளைஞன் ஒருவரிடமிருந்தே குறித்த கைக் குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து இரவு மோட்டார்சைக்கில் ஒன்றில் சென்ற இளைஞனிடம் சோதனைகள் மேற் கொண்ட போதே மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட் டிருந்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த இளைஞன் பகல்வேளையில் வேறு இடத்திலிருந்து விட்டு இரவு வேளையில் வவுனியாவுக்கு வந்து செல்பவர் என்றும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த வவுனியா பொலிஸார் இவருடன் வேறு சில இளைஞர்களுக்கும் தொடர்புள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞன் நேற்றயதினம் காலை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது வழக்கை விசாரணை செய்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் ஏப் ரல் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-21)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015 ஆம் ஆண்டு
க.பொ.த. (சாதாரண) பரீட்சையில்
9A பெற்று வரலாற்றுச் சாதனைபடைத்து
எமது கிராமத்துக்கும், யா/மந்துவில்
ஸ்ரீ பாரதி வித்தியாலயத்துக்கும்
எமக்கும் பெருமை தேடித் தந்த
செல்வி
சாம்பவி இராஜகுலசிங்கம்
அவர்களை பாராட்டுவதுடன்
மேலும் பல சாதனைகள் படைக்க
வாழ்த்துகின்றோம்.
Best Wishes
பாஸ்கரன் (மாமா)
யோகமலர் (அத்தை)
லண்டன்.
(60786)(10.17)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிராமப்புறப் பாடசாலையிலும் சாதனை படைக்கலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக 2015 க.பொ.த சாதாரண பரீட்சையில் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் 9 A பெற்றமைக்காகவும், சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடம் பெற்றமைக்காகவும் எனது பேர்த்தி
செல்வி சாம்பவி இராஜகுலசிங்கம்
அவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பலசாதனைகளை நிலைநாட்ட வாழ்த்துக்கின்றேன்.
கனடா
செ. மகாதேவன் (தாத்தா)

சேவை நலன் பாராட்டு



இராமுப்பிள்ளை நடராசா
சுன்னாகம் தபால் அலுவலகத்திற்குட்பட்ட
மல்லாகத்திலுள்ள உபதபால்
அலுவலகத்தில் 27 வருடங்களாக
சேவையாற்றி இன்று (31.03.2016)
வியாழக்கிழமை தனது சேவையிலிருந்து
ஒய்வு பெறும் எமது இ. நடராசா
அவர்கள் சிறப்பானசேவையாற்றியமைக்கு பாராட்டு தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வு காலத்திலும் அமைதியாகவும் சீருடனும் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
அஞ்சல் சமூகம் சுன்னாகம்.

மு/மல்லாவி மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)
பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியில் கல்வி கற்று 2015ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் 8A S பெறுபேற்றை துணுக்காய் கல்வி வலயத்தில் முதல்நிலையில் பெற்ற
செல்வன்
சிவராசா வினோதன்
அவர்களையும், ஏனைய சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களான
செல்வன் இ. கஜீபன் 6A 2S
செல்வன் சி. பபீசன் 4A, 4B, S
செல்வி கே. ஸ்ரீவித்தியா 4A 4B
ஆகியோர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களுடன் பரீட்சைக்குத் தோற்றி 85 வீதமான சித்திபெற்ற மாணவர்களையும் கல்லூரிச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துவதோடு வழிபடுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)
(C2206)(10.17)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மந்துவில் ஸ்ரீ பாரதி
வித்தியாலயத்தில்
அதிபர் ஆசிரியர்களில் பற்று வைத்து
படித்து க.பொ.த. சாதாரண தரப்
பரீட்சையில் 9A பெற்று
சாதனைபடைத்த
செல்வி
சாம்பவி இராஜகுலசிங்கம்
அவர்களை பாராட்டுவதுடன்
மேலும் பல சாதனைகள் படைக்க
மனமார வாழ்த்துகின்றோம்.
Best Wishes
சி.தங்கம்மா (அப்பம்மா)
சி.சிவயோகம்(அத்தை)
சி.விநாயகமூர்த்தி
குடும்பம்
மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.
(60786)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பணியில் படைகள் வர்த்தகர்களுக்குப் பெரிதும் பாதிப்பு

## கிழக்கு வர்த்தக சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

கிழக்கு மாகாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள், பாதுகாப்புப் படையினரைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக சம்பூர் பிரதான வீதியின் நிர்மாணப் பணிகள் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் உள்ளூர் வர்த்தகர்கள் – ஒப்பந்தகாரர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

– இவ்வாறு கிழக்கு மாகாண வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே.குலதீபன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண வர்த்தக சம்மேளன அங்குரார்ப்பண நிகழ்வுக்கான ஊடகவியலாளர்களைத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல், திருகோணமலை ஜேக்கப் பார்க் விடுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த வர்த்தகர்களும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முடிவெடுத்தே கிழக்கு மாகாண வர்த்தக சம்மேளனத்தை ஆரம்பித்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில் வர்த்தகர்கள், ஒப்பந்தகாரர்கள் உள்ளிட்டோர் பல்வேறு வழிகளில் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். வெளி மாகாணத்திலிருந்து வருகை தந்து தொழில்களை மேற்கொள்வது மற்றும் வெளியாள்கள் ஒப்பந்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம்.

தற்போதைய அரசினால் பரவலாக பாதுகாப்பு படையினரைக் கொண்டு ப்லதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படுக்கின்றது. குறிப்பாக சம்பூர் பிரதான வீதியின் நிர்மாணப்பணிகள் கடற்படையினரால் முன்னெடுக்கப்படுகின்றன. இது எமக்கு மிகவும் பாதிப்பானது – என்றார்.

(ற-ஜ-5)


## இதய அஞ்சலி



தெல்லிப்பழை, துர்க்காபுரம்
டாக்டர்
செல்லப்பா சபாநடேசன் J.P

எங்கள் தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினரும் சிறந்த சமூக் சேவை யாளருமாகிய வைத்திய கலாநிதியின் பிரிவு குறித்து எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

(உ 22202)
(12.17.20)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கதிரேசு முருகேசு
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்
17.08.1937

மறைவு
12.04.2015

திதி: பங்குனித்திங்கள்
அபரபக்க அட்டமி

ஆண்டொன்று கழிந்தது ஐயா - இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்குத் தவிக்கின்றோம்.


நிலாவரை,
புத்தூர்.

(70373) (13.18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் எட்டாம் வருட நினைவஞ்சலி

அமரர் சுப்பிரமணியம்
யோசேப் பூராசா
(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் செயலாளர் புனித அந்தோனியார் ஆலயம், தெய்வக் குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குநர்)



"ஆண்டவர் பாதத்தில்,
விண்ணவர் கூட்டத்தில் தாங்கள்
மகிழ்ந்திருக்க இறைவனை
வேண்டுகின்றோம்"

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்
2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(70379) 03

பிறப்பு
20.08.1938

இறப்பு
31.03.2008

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
நாகையா
இராமலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



பிறப்பு
03.02.1944

இறப்பு
23.03.2014

(திதி:அட்டமி)

நீங்கள் இவ் உலகைவிட்டு நீங்கி
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
எம்மைவிட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

குப்பிளான்.


# சாவுத் தண்டனைக் கைதிகளை தங்க வைப்பதில் இடநெருக்கடி

கொழும்பு,மார்ச் 31

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளை தங்கவைப்பதற்குப் போதிய இடவசதிகள் இல்லாததால் சிறைச்சாலைகள் திணைக்களம் பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளது. சாவுத்தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் மூன்று பெண்கள் உட்பட ஆயிரத்து 100க்கும் மேற்பட்டவர்கள் தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலை உள்ளிட்ட பல சிறைச்சாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தகைய சிறைக் கைதிகளைத் தங்க வைப்பதற்குப் பொருத்தமான சிறைக் கூடங்கள் வெலிக்கடை மற்றும் போகம்பரை ஆகிய சிறைச்சாலைகளில் மாத்திரமே அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சிக்காலத்தில் போகம்பரை சிறைச்சாலை அரசுடைமையாக்கப்பட்டிருந்தமையும், அதற்குப் பதிலாக பல்லேகலைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட புதிய சிறைச்சாலை சகல வசதிகளையும் உள்ளடக்கி அமைத்து, முடிக்கப்படாதிருப்பதும் இந்தச் சிக்கலுக்கு பிரதானமான காரணமாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தூக்கு மரங்கள் அமைக்கப்பட்டிராத சிறைச்சாலைகளில் சாவுத் தண்டனை தீர்ப்புக்கு உள்ளாகியிருக்கும் கைதிகளைத் தங்க வைப்பது சிறைச்சாலைகளின் சட்ட விதிகளுக்கு முரணானது.

ஆனாலும், தற்போது நிலவும் இந்த இடவசதிப் பிரச்சினையின் காரணமாகவே சட்டவிதிகளை மீறி அவர்களை வேறு சிறைச்சாலைகளில் தங்க வைக்கவேண்டிய நிலை சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சிறைச்சாலைகளின் உயரதிகாரியொருவர் கருத்துத் தெரிவித்தபோது; சிறைச்சாலைகள் திணைக்களத்தில் இத்தகைய சிக்கலொன்று நிலவுகின்றது. அது சம்பந்தமாக சிறைச்சாலைகள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுடன் பேச்சுக்களை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற் கொள்வதற்குத்தீர்மானித்துள்ளோம்– என்றார்.

(ற-ஜ-22)

# புத்தரின் போதனையை மதிக்காமல் விகாரைகளுக்குச்சென்று பயனில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு


கொழும்பு, மார்ச் 31

புத்தரின் போதனைக்கு அமைய செயற்படாமல், விகாரைகளுக்குச் செல்வதில் பயனில்லை. விகாரைகளுக்குச் செல்வதால் மட்டும் பௌத்தர் ஆகிவிடவும் முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அரசமைப்பு தொடர்பான கருத்தரங்கில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பிரதமர் மேலும் கூறுகையில்;

நாம் புத்தரின் போதனைக்கு அமைய எமது நாடாளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த வாரம் எனக்கு ஞாபகமூட்டினார்.



தேசிய சட்டப் பேரவையின் நிகழ்வொன்றின்போதே அவர் இதை ஞாபகப்படுத்தினார்.

புத்தரின்போதனைக்குஅமைவான லிச்சவி ஆட்சிமுறைக்கு அமைய சமாதானமாக ஒன்று கூடி, சமாதானமாக கலந்துரையாடி, சமாதானமாக கலைந்து செல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவர் பௌத்தராக இருக்க முடியாது. அது மட்டுமல்ல, இந்துவாகவும், இஸ்லாமியராகவும், கிறிஸ்தவராகவும் இருக்க முடியாது.

புத்தரின் போதனைக்கு அமையசெயற்படமுடியாவிட்டால் விகாரைகளைக் கட்டுவதிலும், விகாரைகளுக்குச் செல்வதிலும் பயனில்லை. விகாரைகளுக்குச் செல்வதால் மட்டும் பௌத்தர் ஆகிவிட முடியாது. புத்தரின் போதனைக்கு அமைய சமாதானமாக ஒன்றுகூடி,சமாதானமாக கலந்துரையாடி,சமாதானமாக கலைந்து செல்ல வேண்டும். அவ்வாறானதொரு நாடாளுமன்றத்தை நாம் உருவாக்க வேண்டும். உண்மையான பௌத்தர்எவர் என்பதை இந்த நாடாளுமன்றத்தினூடாகத் தெரிந்து கொள்ளலாம் - என்றார்.

(து-வ-5)


## நீங்கா நினைவுகளில்

13 ஆம் ஆண்டு

18 ஆம் மாதம்

அமரர்
சோமசுந்தரம்
குலேந்திரன்

தோற்றம்
30.03.1935

மறைவு
31.03.2003



திருமதி
ஞானேஸ்வரி
குலேந்திரன்

தோற்றம்
20.02.1940

மறைவு
04.10.2014

பதின்மூன்று ஆண்டுகள் கடந்தாலும் எங்கள் அப்பாவுக்குப் பிள்ளைகளின் அன்பு நினைவுகள்...
பார்போற்ற எமை வளர்த்த எம் அன்புத் தெய்வங்களே! உங்களுக்கு என்றும் எங்களின் இதய அஞ்சலிகள்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(70324) (11,18)

என்றும் நீங்கா நினைவுடன்...
மகள், மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கடத்தும் இடமாக மாறுகின்றது அக்கரைக் கடற்கரை

## தடுத்து நிறுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பிரதேச செயலர் வேண்டுகோள்

அச்சுவேலி, மார்ச் 31

வளலாய், அக்கரைக் கடற்கரைப் பகுதி போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு உரிய அமைவிடமாக மாறி வருகின்றது. இந்தச் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி உதவ முன்வர வேண்டும்.- இவ்வாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது பிரதேசத்தில் அண்மைக் காலத்தில் நடைபெறும் சமூக விரோத செயற்பாடுகளையும் சட்டவிரோத நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவதிலும் சம்பந்தப்பட்டவர்களை சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்குவதிலும் சகல தரப்பினரும் சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். பொறுப்புக்களைத் தட்டிக்கழிப்பதிலோ அல்லது தாங்கள் இதற்குப் பொறுப்பில்லை எனக்கூறிக் கொள்வதிலோ நியாயம் இல்லை. - என்று அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சமூகவிரோதச் செயல்கள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ள வகை செய்யப்பட வேண்டும். இந்த விடயத்தில் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கப் பொதுநிறுவனங்களின் நிர்வாகிகளும் முன் வர வேண்டும். வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் அச்சுவேலி, கோப்பாய் என இரு பொலிஸ் நிலையங்கள் செயற்படுகின்றன. இந்த நிலையில் எமது பிரதேசத்தில் சட்ட விரோதச் செயற்பாடுகள் நடைபெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த விடயத்தில் பொலிஸார் தமது கடமையைமேற்கொள்வதோடு இங்கே கவனத்தில் கொண்டு வரப்படும் சம்பவங்களுக்கு மற்றும் விடயங்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அடுத்த மாதம் நடை பெறும் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் தீர்வு தொடர்பான தெளிவான பதில்களை முன்வைப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

வளலாய் அக்கரைப் பகுதி போதைப்பொருள் கடத்தல் மையமாக மாறும் நிலை காணப்படுவதாக பொலிஸ் மற்றும் புலனாய்வு அறிக்கைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தி அதனுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களையும் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்க வேண்டும். இந்த விடயத்தில் சகல தரப்பினரும்பொறுப்புணர்வுடன் நடந்து ஒத்துழைப்பு வழங்கித் தடுத்து நிறுத்துவதற்கு முன்வரவேண்டும் – என்றார்.

இந்தக் கூட்டத்தில் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக உயர் அதிகாரிகள், கிராம அலு வலர்கள், சமுர்த்திப் பொருளா தார அபிவிருத்தி அலுவலர்கள் , பொது நிறுவனங்களின் நிர்வாகிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ற-11)

> "கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் சமூக மட்டத்தில் சமாதான நல்வாழ்வுக்கான கடமைகளை மேற்கொள்பவர்கள். அவர்களுக்கு சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதில் நியாயமான கடமைப் பொறுப்புக்கள் உள்ளன. அதனை யாழ்.மேல்நீதிமன்றமும் வலியுறுத்தியுள்ளது."

## மச்சாளின் கையைப் பிடித்த மச்சானுக்கு ரூ. 30,000 தண்டம்

சாவகச்சேரி, மார்ச் 31

17 வயது மச்சாளின் கையில் பிடித்து இழுத்த மச்சானுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும், பெண்ணுக்கு நட்டஈடாக 30 ஆயிரம் ரூபாவும் வழங்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் உத்தரவிடப்பட்டது.

தென்மராட்சியைச் சேர்ந்த அக்கா, தம்பி ஆகியோரது பிள்ளைகளுக்கிடையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் வரை சென்றது. நீதிமன்றில் பாலியல் துஷ்பிரயோக வழக்காகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதையடுத்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 30 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்குமாறு உத்தரவிட்ட நீதிவான் எதிரியை எச்சரிக்கை செய்து ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையும் விதித்தார். (ற-9)

## கொழும்பில் கடந்த சனியன்று தமிழ்க் கட்சிகள் சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 31

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி தலைமையில், தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத, ஈ.பி.டி.பி. உள்ளிட்ட பல தமிழ்க் கட்சிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி தலைமையில் கடந்த ஆண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான புதிய கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது. இதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண முன்னாள் தளபதியும், முன்னாள் அமைச்சருமான கருணா என்று அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரனும் பங்குபற்றியிருந்தார்.

பின்னர் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லை. இந்த நிலையில், கொழும்பில் கடந்த சனிக்கிழமை தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது. அதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பி.யின் செயலர் டக்ளஸ் தேவானந்தா, சிறிரெலோ கட்சியின் செயலர் ப.உதயராசா, ஈரோஸ் அமைப்பின் தலைவர் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஈ.பி.டி.பி. அமைப்பின் முக்கியஸ்தரும், வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவருமான சி.தவராசாவிடம் கேட்டபோது, இந்தக் கலந்துரையாடலில் நான் பங்குபற்றவில்லை. இதில் சம கால அரசியல் விடயங்களில் ஏதாவது பொது நிலைப்பாட்டை இந்தக் கட்சிகள் எடுக்கலாமா என்பது சம்பந்தமாகவே பேசப்பட்டது என்று தெரிவித்தார். இதன் அடுத்த கட்டக் கலந்துரையாடல் ஏப்ரல் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-5)

## ஒரே நாளில் குடும்பத்தில் ஐவரை கடற்படையினர் சுட்டுக் கொன்றனர்

### தப்பியவர்கள் கடத்தப்பட்டனர் ஆணைக்குழு முன் சகோதரி சாட்சியம்

மன்னார், மார்ச் 31

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து கடல்வழியாக முல்லைத்தீவுக்குச் சென்று கொண்டிருந்தபோது கொக்குளாய் இராணுவ முகாமிலிருந்து பீரங்கிப் படகுகளில் வந்த இராணுவத்தினர் எமது படகை வழிமறித்துச் சுட்டனர். அதில் எனது குடும்பத்தில் ஒரே நாளில் ஐந்து பேரை இழந்து விட்டேன். அதிலிருந்து தப்பிய எனது அண்ணன்மார் இருவரும் பின்னர் இராணுவத்தால் வெள்ளை வானில் கடத்தப்பட்டார்கள்.- இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் சகோதரியான ஜெ.ஜெகயோதீஸ்வரி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தார்.

கடந்த திங்கட்கிழமை மன்னாரில் இடம்பெற்ற காணாமல் போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

எமது தாயின் சொந்த இடமாகிய திருகோணமலையிலிருந்து போர் காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து கடல்வழியாக முல்லைத்தீவுக்குச் சென்று கொண்டிருந்தபோது கொக்குளாய் இராணுவ முகாமிலிருந்து, பீரங்கிப் படகுகளில் வந்த இராணுவத்தினர், எமது படகை வழிமறித்துச் சுட்டார்கள். அதில் எனது குடும்பத்தில் ஒரே நாளில் 5 பேர் படகிலேயே உயிரிழந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் எனது சகோதரன் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்திருந்தார். பின்னர் நாங்கள் வன்னியில் குடியிருந்து இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ள எனது தந்தையின் ஊராகிய மன்னாருக்கு 1998ஆம் ஆண்டு வந்தோம். 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி எனது சகோதரன் செபமாலை பீரிஸ் ஜெகயோதி என்பவரும், எனது மச்சாளின் கணவராகிய விக்டர் கனிசியஸ் குலாஸ் என்பவரும் நானாட்டானுக்கு போகும் போது இருவரையும் இராணுவ முகாமுக்கு முன்பாக சோதனையின்பின்னர் விடுவிப்பதாகக் கூறி இராணுவத்தினர் கூட்டிச் சென்றனர். ஆயினும் அவர்கள் விடுவிக்கவில்லை.

8 வருடங்களாக நாங்கள் அனைத்து இடங்களிலும் தேடிப் பார்த்தோம். அவர்கள் இன்றுவரை இல்லை. ஆனால் இராணுவம் அவர்களை விடுவித்து விட்டதாகக் கூறுகிறது. ஆனால் அது உண்மையில்லை, ஏன் என்றால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தால் அவர்கள் வீட்டுக்கு வந்திருப்பார்கள் ஆனால் இன்று வரை அவர்கள் வரவில்லை. அதேவருடம் (2007) ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி எனது மூத்த அண்ணா வீட்டில் இருந்த வேளை வெள்ளை வானில் கடத்தப்பட்டார். இவர்கள் இருவரும் கடத்தப்பட்டு இன்று 8 வருடங்கள் ஆகியுள்ளன. இது வரைக்கும் எந்தத் தகவலும் இல்லை. கடைசியாக எனது இரு சகோதரர்களையும் இழந்து வேதனையுடன் வாழ்ந்து வருகின்றேன். எனது சகோதரர்களைத் தேடிக் கண்டுபிடிக்க நாங்கள் தேடாத இடம் இல்லை. போகாத கோவில் இல்லை. காணாத அதிகாரிகளும் இல்லை. எல்லோரிடமும் முறையிட்டுள்ளோம். எனது சகோதரர்களைத் தேடித்தாருங்கள்.- என்று அவர் ஆணைக்குழுவின் முன் கதறி அழுதார். (ற-ஜ-21)

## கந்தபுராண போதனை நூல் மறுபதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 31

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அமரத்துவமடைந்த முப்பதாவது ஆண்டை நினைவு கூரும் வகையில் அவரால் எழுதப்பட்ட 'கந்தபுராண போதனை' நூலின் மறுபதிப்பு வெளியிடப்படவுள்ளது. இந்த வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி பி.ப 3 மணிக்கு கலாசாலை வீதியிலுள்ள பண்டிதமணி இல்லத்தில் நடைபெறவுள் ளது.

1899ஆம் ஆண்டு மட்டுவிலில் பிறந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை கல்வித் தேர்ச்சிகளில் முதன்மையாக இருந்ததுடன், இலங்கைசாகித்தியமண்டலப் பரிசுகளையும், பண்டிதமணி, சைவ சித்தாந்த சாகரம், முதுபெரும் புலவர், மஹாவித்வான், இலக்கியக் கலாநிதி முதலான பட்டங்களையும் பெற்றுள்ளார். திருமுறைவிழா, மணிவிழா, தசகாண்ட வெளியீடு, சாகித்திய மண்டல உயர் உறுப்பினர், ஆயிரம் பிறைகண்ட அறிஞர் அணிவிழா முதலான கௌரவங்களையும் பெற்றுள்ளார். கல்வி மற்றும் எழுத்துத் துறையில் பிரகாசித்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 1986 ஆம் ஆண்டு பூவுலகை விட்டு நீங்கினார். (ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ்ஸின் சாரதி, நடத்துநரை விடுவிக்குமாறு பணிப் புறக்கணிப்பு

## குறைந்த அளவு அரச பஸ் சேவையால் மக்கள் அந்தரிப்பு



வவுனியா, மார்ச் 31

இ.போ.ச. நடத்துநரைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நேற்று வவுனியாவிலிருந்து செயற்படும் அனைத்து தனியார் பஸ்களின் உரிமையாளர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்ட நடத்துநர், சாரதி இருவரும் விடுதலை செய்யப்படாவிட்டால் இன்று வடமாகாண ரீதியில் பணிப்புறக்கணிப்பு நடத்தப்படும் எனவும் தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பணிப் புறக்கணிப்பால் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகள் சிரமங்களை எதிர் கொண்டனர்.

நேற்றுமுன்தினம் காலை வவுனியா மத்திய பஸ் தரிப்பிடத்திலிருந்து யாழ். நோக்கிச் செல்லும் அரச மற்றும் தனியார் பஸ் களின் நடத்துநர்கள் பயணிகளை போட்டி போட்டு ஏற்றினர். இதன்போது இருவருக்கிடையிலும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த முறுகல் நிலையை அடுத்து கைகலப்பு ஏற்பட்டு அரச பஸ்ஸின் நடத்துநர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அரச பஸ் நடத்தநர் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளதுடன், இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். தனியார் பஸ்ஸின் நடத்த நர் தாக்கியதாலேயே காயம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் முறைப்பாட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளது. அதையடுத்து குறித்த தனியார் பஸ் சாரதி மற் றும் நடத்துநர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் பொய்யான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சாரதி மற்றும் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்,அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி நேற்று பணிப்புறக் கணிப்பு நடத்தப்பட்டது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த தனியார் பஸ் சாரதிகளும், நடத்துநர்களும்- எமக்கு மாத அடிப்படையில் சம்பளம் கிடைப்ப தில்லை. நாள் சம்பளமே எமக்கு வழங்கப்படுகின்றது. பஸ்ஸில் பயணிகளை ஏற்றினால்தான் பஸ உரிமையாளரிடமிருந்து சம்பளம் பெற முடியும். பஸ் பயணிகள் இல்லாதிருந்தால் எமக்கான சம்பளம் குறைக்கப்பட்டு 300 தொடக்கம் 400 ரூபா வரையிலேயே கிடைக்கும். அதில்தான் எமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். பொய்யான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட நடத்துநர் மற்றும் சாரதியின் குடும்பங்களும் எம்மைப்போன்று கஷ்டத்தின் மத்தியில் வாழ்பவர்களே. அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்- என்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தலைவர் ரஞ்சனிடம் கேட்டபோது; சம்பவம் இடம்பெற்றது உண்மை. ஆனால்,தனியார் பஸ் நடத்துநர், அரச பஸ் நடத்துநரைத் தாக்கவில்லை. அவர் பிளேட்டால் தானே தனது கையை அறுத்து வைத்தியசாலையில் படுத்துள்ளார். ஏதாவது பிரச்சினை என்றால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்வதிலும், பொலிஸில் முறைப்பாடுகளை பதிவு செய்வதிலும் அவர்கள் முந்திக் கொள்கின்றனர். அக்கரைப்பற்றுக்குச்செல்லவேண்டிய அரச பஸ்,நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்துதான் செல்ல வேண்டுமா, நாங்கள் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையை மேற்கொள்கின்றோம். நேற்றுக்காலை இரு பஸ்களும் ஒரே நேரத்துக்குப் புறப்பட்டமையே இந்த முரண்பாட்டுக்குக்காரணம். அரச பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் அமைச்சரால் போடப்பட்ட நேர அட்டவணையையும் கருத்தில் கொள்வதில்லை. அவர்கள் தான் பின்னர் பிரச்சினைகளிலும் ஈடுபடுகின்றனர் - என்றார்.

இ.போ.ச. வவுனியா சாலை பிரதி முகாமையாளரிடம் இது தொடர்பாகக்கேட்பதற்காக அழைப்பை ஏற்படுத்திய போது அவர் நேர கணிப்பாளரிடம் கேட்குமாறு தெரிவித்தார். நேரக் கணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போது அவர் அழைப்பைத் துண்டித்திருந்தார்.

தனியார் பேருந்துச்சாரதிகள் பணிப் புறக் கணிப்பு காரணமாக அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப்பலரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். போக்குவரத்து இன்மை காரணமாக நீண்ட நேரம் காத்திருந்து தமது பயணத்தை அவர்கள் மேற்கொண்டதுடன் குறைந்தளவு அரச பஸ் சேவை காரணமாக பயணிகள் பஸ்களில் நெரியுண்டு தமது பயணத்தை மேற்கொண்டதை அவதானிக்க முடிந்தது. (ற-21,402)

புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு
கேள்வி அறிவித்தல் - 2016

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 02.05.2016 இலிருந்து 31.12.2016 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 31.03.2016 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 18.04.2016 நண்பகல் 12.00 மணிவரை(அலுவலக நாட்களில் மட்டும்)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 18.04.2016 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 18.04.2016 பி.ப 12.30 மணி

| இல | குத்தகை வகை | [illegible] (NBT,VAT நீங்கலாக) | [illegible] (NBT,VAT நீங்கலாக) | [illegible] (NBT,VAT நீங்கலாக) |
| --- | --- | --- | --- | --- |
| | [illegible] உப அலுவலகம் | | | |
| 02. | மாங்குளம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 150,000.00 |
| 03. | மாங்குளம் பொதுச்சந்தை கோழிஇறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 100,000.00 |

**நிபந்தனைகள்.**

- கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை **செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு** பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றிலொரு பகுதியை **25.04.2016ம்** திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் தாம் வதியும் வதிவிடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
- அறுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விலங்கினை பொதுமக்கள் பார்வைக்கும், சுகாதாரப் பரிசோதகர் பார்வைக்கும் 24 மணிநேரம் ஒட்டுசுட்டான் பிரதேசசபை உப அலுவலக வளாகத்தில் கட்டி அவற்றிற்கு உணவு நீர் வழங்குவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது சபையினால் தீர்மானிக்கப்படும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடைவாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
- ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவே இதில் பங்குபற்ற இயலாது.
- சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.கு.மிதிலைநாதன்.**
**செயலாளர், பிரதேசசபை,புதுக்குடியிருப்பு.**

(சி. 22297) (13.17.19)

## அரச, தனியார் பஸ்களின் சாரதிகளுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

பஸ் தரிப்பிடம் அல்லாத இடத்தில் பயணிகளை ஏற்றி இறக்கிய அரச மற்றும் தனியார் பஸ் சாரதிகளுக்கு யாழ். நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ்.நகர்ப் பகுதியிலிருந்து சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்தி ஒன்றின் சாரதியையும்.இலங்கைப்போக்குவரத்து சபையின் பஸ் சாரதி ஒருவரையும் இந்தக் குற்றச்சாட்டுக்காக யாழ். போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். சாரதிகள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதையடுத்து ஒவ்வொருவரையும் 10 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ற-4,103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 31
சந்நிதியும் அன்னதான மடங்களும், சந்நிதியான் அற்புதங்கள் (6ஆம் பாகம்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை, செல்வச்சந்நிதி ஆலயத்தில் அமைந்துள்ள செல்லையா ஐயர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.
முன்னாள் அதிபர் ந.அரியரட்ணம் எழுதிய இரண்டு நூல்களும், செல்வச் சந்நிதி ஆலயப் பிரதம குரு ஆ.சிவ சண்முகஐயர் தலைமையில் மாலை நான்கு மணிக்கு இடம்பெறும் வெளியீட்டு விழாவில் வெளியிட்டுவைக்கப்படவுள்ளன. வெளியீட்டு உரையை அதிபர் ஆ.சிவநாதனும், மதிப்பீட்டு உரையை கலாநிதி ஆறு.திருமுருகனும் வழங்குவர். (அ)

## வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்.31
வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி வை.குணசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தபேந்திராதேவி ஜெயராசா,கௌரவ விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக கணக்காளர் திருமதி கவிதாம்பிகை பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட சங்கத்தின் செயலாளர் க.கதிரமலை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்த பொதுக் கூட்ட நிகழ்வின் போது சபையோர் கருத்துரைகளும் பிரேரணைகள் சமர்ப்பித்தலும், நடப்பாண்டுக்கான நிர்வாகக் குழுத் தெரிவும் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி2)

## மலசலகூடங்களை துப்புரவாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 31
பொதுமக்களின் நலன் கருதி ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பொது மலசல கூடங்கள் சுகாதார சீர்கேடுகளுடன் காணப்படுகின்றன என்று கவலை தெரிவித்துள்ள பிரதேச சபைச் செயலாளர், இந்த நிலை நீடிக்குமானால் துப்புரவாக வைத்திருப்பதற்கு வசதியாக பாவனையாளர்களிடமிருந்து பணம் அறவிட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.
ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பொதுமக்களின் வசதி கருதி கண்ணகி அம்மன் துறையிலும், ஊர்காவற்றுறை பொதுச் சந்தையிலும், பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பொது மலசல கூடங்கள் பழுதடைந்து காணப்பட்டதால் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களுக்குள் உள்ளானார்கள். இதனால் சுகாதாரச் சீர்கேடுகளும் நிலவின.
பாவனையாளரின் நலன் கருதி பிரதேச சபையினர் கடந்த வருடம் பல லட்சம் ரூபா செலவில் நவீனமான முறையில் சகல வசதிகளுடனும் குறித்த மலசல கூடங்களைப் புனரமைத்துள்ளனர்.
இந்த நிலையில் மேற்படி இரு மலசல கூடங்களும் சில பாவனையாளர்களின் செயற்பாடுகளால் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்படுகின்றன. அதனால் இவற்றைப் பயன்படுத்த மக்கள் பின்னடிப்பதால் பாவனையாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடுவது பற்றி ஆலோசித்துள்ள செயலாளர், மேற்படி நிலையத்தை அசுத்தப்படுத்தாமல், சுகாதாரமான முறையில் பயன்படுத்துமாறு மக்களைக் கோரியுள்ளார். (ற-115)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான வைப்புப்பண கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உபஅலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2016 மே முதலாம் திகதி தொடக்கம் கீழ்குறிப்பிடப்படும் மாதாந்த குத்தகையின் அடிப்படையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 30.03.2016 -18.04.2016 முற்பகல் 10.00 வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 18.04.2016 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 18.04.2016 பிற்பகல் 12.30 மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 18.04.2016 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 18.04.2016 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக புதுக் குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக்கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப் படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக் கலாம்.
6. கேள்வி நிபந்தனைகள் , அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்க வும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
7. வாடகை வருடா வருடம் சபையால் நிர்ணயிக்கப்படும்கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.
8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார்.
(உதாரணம் :- மகன், மகள்)
9. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
12. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்பாவார்.
13. குத்தகைக்கு பெற்ற கடைக்கான மின்சார செலவு குத்தகைக்கு பெற்றவரையே சார்ந்ததாகும்.
14. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும்.என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத் தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
15. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
16. கேள்வி சம்பந்தமாக மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கடை இலக்கம் | மாதாந்த வாடகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT - NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | G . F - 01 | 6,000.00 | 1,000.00 | 38,000.00 | 360,000.00 |
| 2 | G . F - 02 | 3,000.00 | 1,000.00 | 19,000.00 | 180,000.00 |
| 3 | G . F - 03 | 3,000.00 | 1,000.00 | 19,000.00 | 180,000.00 |
| 4 | G . F - 04 | 5,250.00 | 1,000.00 | 33,000.00 | 315,000.00 |
| 5 | G . F - 05 | 5,250.00 | 1,000.00 | 33,000.00 | 315,000.00 |
| 6 | U . F - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 7 | U . F - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 8 | U . F - 03 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 9 | U . F - 04 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 10 | U . F - 05 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 11 | U . F - 06 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 12 | S - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 13 | S - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 14 | S - 03 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 15 | G . F - 06 | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 16 | G . F - 07 | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 17 | G . F - 08 | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 18 | G . F - 09 | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 19 | G . F - 10 | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 20 | B - 01 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 21 | B - 02 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 22 | B - 03 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 23 | B - 04 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 24 | B - 05 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 25 | B - 06 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 26 | B - 07 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 27 | B - 08 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 28 | B - 09 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |

**திரு.கு.மிதிலைநாதன்,**
**செயலாளர்,**
**பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# புதிய கல்விமுறைமை விரைவில் நடைமுறை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 31
அரசு எதிர்காலத்தில் புதிய கல்வி முறை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதத்தைக் கல்வித் துறைக்கு ஒதுக்குவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளோம். அந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மூலமாகக் கல்விக்கான செலவைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை தற்போதைய அரசுக்கு உள்ளது.
நாட்டின் கல்வி முறையில் தான் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது. அரசு முன்னர் வழங்கிய வாக்குறுதிப்படி நாட்டின் பொருளாதார நிலை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அது மட் டுமன்றி தற்போதைய அரசு, அனைத்து மாணவர்களுக்கும் 13 வருடங்கள் கல்வி புகட்டும் என்று நிச்சயம் உறுதி வழங்க முடியும்.- என்றார்.
தற்போதைய கல்வி முறையில் புதிய மாற்றம் விரைவில் கொண்டுவரப்பட வேண்டும் என்று பலராலும் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் பிரதமர் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (ற-ஐ-4)

# வெகுசன ஊடகவியலாளர்களுக்கும் மோட்டார் சைக்கிள் வழங்குங்கள்

## கல்முனை மாநகர சபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம்

அம்பாறை, மார்ச் 31
வெகுசன ஊடகவியலாளர்களுக்குத் தீர்வை வரிச் சலுகைக் கட்டணத்துக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்று கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
தற்பொழுது சலுகை அடிப்படையில், வங்கிக் கடன் மூலம் ஊடகவியலாளர்கள் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொள்வதற்கென வெகுசன ஊடக அமைச்சு அறிவித்துள்ள நிகழ்ச்சித் திட்டத்தை மறுபரிசீலனை செய் யுமாறும் குறித்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை, மாநகரமேயர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தலைமையில், மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர், வெகுசன ஊடக அமைச்சர் ஆகியோரைக் கோருவதற்கான மேற்படி தீர்மானம் தொடர்பிலான விசேட பிரேரணையை மேயர் எம்.நிஸாம் காரியப்பர் முன்மொழிந்தார்.
பிரேரணையை முன்மொழிந்து மேயர் நிஸாம் காரியப்பர் சபையில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளதாவது-
நாட்டில் இன்று மலர்ந்துள்ள நல்லாட்சியைக் கொண்டு வருவதில் ஊடகவியலாளர்கள் அளித்த பங்களிப்பை நாம் எளிதில் மறந்துவிட முடியாது.
இதன் பேறாக ஊடகவியலாளர்களுக்கு தீர்வை வரிச்சலுகைக் கட்டணத்துக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை வெகுசன ஊடக அமைச்சு அறிவித்து கொழும்பின், ஊடக அமைச்சில் நேர்முகப்பரீட்சை கூட நடத்தப்பட்டது.
இந்த வகையில் தீர்வைவரிச் சலுகைக் கட்டணத்தில் தமக்கு மோட்டார் சைக்கிள்கள் கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடனிருந்த ஊடகவியலாளர்கள் இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள சலுகை அடிப்படை நிகழ்ச்சித் திட்டம் குறித்து சலிப்பும், பெருத்த ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.
அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளன முக்கிய பிரதிநிதிகள் இது விடயமாக எனது கவனத்துக்கும் கொண்டுவந்து கலந்துரையாடினர். எனவே அர்ப்பணிப்புடன் மக்கள் சேவையாற்றும் அவர்களுக்காக நாமும் குரல் கொடுக்க வேண்டும்.
இந்த நிலையில் குறித்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் படி ஊடகவியலாளர்கள் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவரை சலுகை அடிப்படையில் கடன் தொகையொன்றை மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.
எனினும் வங்கி நடைமுறை, விதிமுறைகளுக்கமைய இந்தக் கடனைப் பெறுவதற்கு அநேகமான ஊடகவியலாளர்கள் விரும்பாத நிலைமையே உள்ளது.
எனவே இந்த விடயம் தொடர்பில் அரசும் குறிப்பாக வெகுசன ஊடக அமைச்சும் மீள் பரிசீலனை செய்வதுடன் ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரியதற்கமைய, ஊடகவியலாளர்களுக்கு தீர்வை வரிச்சலுகைக் கட்டணத்தில் மோட்டார் சைக்கிள்களை வழங்குமாறு எமது சபை மூலம் அரசைக் கோருவோம்.
தீர்மானத்தை ஜனாதிபதி, பிரதமர், வெகுசன ஊடக அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்போம்.- என்றார்
முன்மொழியப்பட்ட இந்த விசேட தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ற-ஐ-30)

# இடை நடுவில் நிறுத்தப்படும் சுதந்திரக் கட்சிக் கூட்டங்கள்

கொழும்பு, மார்ச் 31
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களின் தொடர்ச்சியான எதிர்ப்பால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டங்கள் இடை நடுவில் நிறுத்தப்படும் சம்பவங்கள் தென் பகுதியில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

### திவுலப்பிட்டிய கூட்டம்

கடந்த சனிக்கிழமை திவுலப்பிட்டிய பகுதியில் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களின் கடும் எதிர்ப்பால் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் உள்ளிட்ட சுதந்திரக் கட்சியினர் பங்கேற்ற கூட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டது. இந்தக் கூட்டமானது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தலைமையில் நடைபெறவிருந்தது. கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் கூட்டத்தில் பங்கேற்றிருந்த நிலையில் மக்கள் கூக்குரல் எழுப்பி கடும் எதிர்ப்பை வெளியிட அங்கு பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது.
சந்திரிகாவின் மெய்ப் பாதுகாப்பாளர்கள் கூட்டம் நடைபெற முன்னதாகவே அங்கு வந்திருந்த நிலையில் கடும் எதிர்ப்புக்கள் காணப்படுவது தொடர்பில் அவருக்கு அறிவித்ததையடுத்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூட்டத்தில் கலந்து கொள்வதைக் கைவிட்டார்.
இவ்வாறான நிலையில் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் உட்பட அமைச்சர்களின் தலைமையில் கூட்டம் முன்னெடுக்கப்பட்ட வேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட சில அமைச்சர்களின் பெயர்களை பேச்சாளர்கள் குறிப்பிட்ட போது காட்டிக் கொடுப்போர் தொடர்பில் கூறும் கதைகளை எம்மால் கேட்க முடியாது என்று, அதற்கும் மக்களால் கடும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன. இவ்வாறான கடும் எதிர்ப்புகளால் குறித்த கூட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டது.

### பெத்தேகம கூட்டம்

பெத்தேகம பிரதேசத்தில் பிரதி அமைச்சர் நிசாந்த முத்து ஹெட்டிகமவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றின் போது, மகிந்த அமரவீரவுக்குக் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. உரையைக் கேட்குமாறு நிசாந்த முத்துஹெட்டிகம குழுமியிருந்த மக்களிடம் கோரிய போதிலும், அதனை மக்கள் நிராகரித்திருந்தனர். இதனால் மகிந்த அமரவீர உரையாற்றாமலேயே மேடையை விட்டு வெளியேற நேரிட்டது.
அமைச்சர் மேடையை விட்டு வெளியேறி வாகனத்தில் ஏறிச் செல்லும் வரையில் கூக்குரல் எழுப்பி சிலர் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கண்டிக் கூட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, முன்னாள் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்த ஆகியோர் கண்டியில் பங்கேற்ற சுதந்திரக் கட்சியின் கூட்டங்களிலும் மகிந்த தரப்பு ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டி ருந்தனர். அமைச்சருக்கு எதிராகக் கூக்குரல் எழுப்பி கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.
இவ்வாறு கிராம மட்டங்கள் உட்பட பிரதேச மட்டங்களின் கூட்டங்களின் போது ஆளும் கட்சி யின் அமைச்சர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகிந்த ஆதரவு தரப்பினர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். (ற-ஐ-5)

# காணி மறுசீரமைப்புக் குழுவின் ஒரு ஏக்கர் காணி விலை 676 ரூபா

கொழும்பு,மார்ச் 31
காணிகள்மறுசீரமைப்புஆணைக் குழுவுக்குச் சொந்தமாக உள்ள ஒரு ஏக்கர் காணியின் மதிப் பீட்டுப் பெறுமதி 676 ரூபா வாகும்.
இது 40 ஆண்டுகளுக்கு முன்னரான 1976 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒன்றாகும் தற்போது நாடு முழுவதிலுமாக 10 லட்சம் ஏக்கர் வரையிலான காணிகள் இந்த ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் உள்ளன. அவற்றின் பெறுமதி 676 மில்லியன் ரூபா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய ஆணைக்குழுவினது ஒரு ஏக்கர் காணியின் பெறுமதி விலை 676 ரூபாவாகும்.
அண்மையில் நாடாளுமன்றத்தின் பொது நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட செயற்குழுவுக்கு காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் வரவழைக்கப்பட்டு காணிகள் பற்றிய விவரங்கள் கோரப்பட்டிருந்தபோதே இந்தத் தகவல்கள் வெளிப்பட்டிருந்தன.
காணி அமைச்சையும் சம்பந்தப்படுத்தி, செயலணிப் படையொன்றையும் உருவாக்கிக் கொண்டு நாடு முழுவதிலும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உள்ள காணிகளின் கணக்கெடுப்பொன்றை நடத்தி விரைவாக அறிக்கையொன்றை முன் வைக்குமாறு கோப்குழு காணிகள் மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் அதிகாரிகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற-ஐ-22)

# அலைபேசி பேசியவாறு வாகனம் செலுத்துவதைத் தடுக்கச் சட்டம்

கொழும்பு, மார்ச் 31
வாகனங்கள் செலுத்தும்போது அலைபேசி பாவிப்பதை முழுமையாகத் தடை செய்வதற்கான சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் கலாநிதி சிசிறி கோதாகொட தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
அலைபேசி பாவிப்பதன் ஊடாக விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. [illegible] விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே, அதிகளவில் இடம்பெறுகின்றன.
சட்டத்தரணிகள் சங்கத்துடன் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகனங்களின் வேகக் கட்டுப்பாடு தொடர்பான சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
கடந்த வாரம் இடம் பெற்ற மாநாட்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் நேற்று சட்டத்தரணிகள் சங்கத்துடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.
வீதிச் சமிக்ஞை மற்றும் அது தொடர்பான சட்டங்களை வலுப் படுத்துவது தொடர்பில் பல தீர்மானங்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் அடுத்த வாரமளவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.- என்றார். (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு இன்னமும் ஓரிரு வருடங்கள் தேவை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31
கடந்த ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது. பொலிஸ்துறை முற்றாக அழிக்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. கொலையாளிகளும், கசிப்பு முதலாளிகளும் பாதுகாக்கப்பட்டனர். அவ்வாறிருந்த நாட்டை ஒரு நாளில் சுத்தப்படுத்தி மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அதற்கு ஓரிரு வருடங்கள் எடுக்கும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காக குமாரதுங்க தெரிவித்தார்.

காலி நெலுவ பிரதேசத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கடந்த அரசின் 9 வருட ஆட்சிக் காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிகாரம் இருக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் கடந்த அரசின் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சில நபர்களின் விருப்பங்கள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டன.

எனினும் தற்போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை பாதுகாக்கும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஆட்சியில் கல்வி சீர்குலைந்து போனது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்துக் கொண்டு செல்ல முயற்சிக்கும் கோஷ்டியினர், நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன என்று கூறுகின்றனர். குற்றம் அதிகரித்துள்ளன என்று கூறும் நபர்களின் காலத்திலேயே குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன.

இப்படி இருந்த நாட்டை ஒரு நாளில் சுத்தப்படுத்தி மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. – என்றார். (ற–ஐ–5)

# சகோதரர்கள் ஆடிய ஆட்டமே மகிந்தவைக் கீழே வீழ்த்தியது

## கலாநிதி தயான் ஜயதிலக தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31
போரின் பின்னர் மகிந்தவால் அவரது சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோரைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது. அதன் பிரதிபயனே மைத்திரியின் கிளர்ச்சிக்கு வித்திட்டது.– இவ்வாறு கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராஜதந்திரியும், மகிந்தராஜபக்சவின்தற்போதைய ஆலோசகர்களில் ஒருவருமான, தயான் ஜெயதிலக இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது: போர்க் காலத்தில் மகிந்தவுக்கு பெரும் உதவியாக இருந்த சகோதரர்கள் போருக்குப் பின்னர் பலம் படைத்தவர்களாக மாறினார்கள். கோத்தபாய ராஜபக்ச திறமையானவர். ஆனால், அவர் தனது வரையறையை மீறிச் செயற்பட்டார். அதனை மகிந்த கட்டுப்படுத்தவில்லை. பசில் ராஜபக்ச அரசியல் ரீதியில் அறிவுள்ளவர். பெரும் திட் பங்களை முன்னெடுக்கக் கூடிய திறமையானவர். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளக அரசியலில் மற்றும் அரச நிர்வாக விடயங்களில் அவரது செயற்பாடுகள் தவறாக இருந்தன.

> மூத்த உறுப்பினர்கள் மதிக்கப் படவில்லை. பசில், கோத்தா ஆகியோர் தன்னிச்சையாகச் செயற் பட்டனர். இறுதியாக இதற்கான விலையை மகிந்த ராஜபக்ச செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் ஒதுக்கப்பட்டார்கள். மூத்த உறுப்பினர்கள் மதிக்கப்படவில்லை. பசில், கோத்தா ஆகியோர் தன்னிச்சையாகச் செயற்பட்டனர். இறுதியாக இதற்கான விலையை மகிந்த ராஜபக்ச செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரதமர் பதவியை வழங்குமாறு 2014ஆம் ஆண்டு நான் மகிந்த ராஜபக்சவிடம் ஆலோசனை வழங்கினேன். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. மைத்திரிக்கு பிரதமர் பதவி வழங்கினால் நிமால் சிறிபால டி சில்வா கோபித்துக் கொள்வார் என்று மகிந்த தெரிவித்தார். அதிலும் நியாயம் காணப்பட்டது.

போருக்குப் பின்னர் மகிந்தவால், தனது சகோதரர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது. இதன் பிரதிபயனே மைத்திரியின் கிளர்ச்சிக்கு வித்திட்டது.– என்றார். (ற–ஐ–5)

# ஒரே நாடு என்ற எண்ணம் அனைவர் மனங்களிலும் மேலோங்க வேண்டும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 31
இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டு ஒரே நாடு என்ற எண்ணம் அனைவரது மனங்களிலும் மேலோங்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கம்பன் விழாவின் இறுதிநாள் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–இராமாயணத்தை வால்மீகி எழுதியிருந்த நிலையில் அதனைக் கம்பன் தமிழில் மொழி பெயர்த்து எழுதியிருக்கின்றார். இராமாயணம் என்பது இரண்டு நாடுகளைத் தொடர்புபடுத்தி எழுதப்பட்டது. அத்துடன் இது இன, மத விடயங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று.

இந்து, பௌத்த மதங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

இதன் மூலம் இனங்களை இணைக்க முடியும். எமது நோக்கம் ஒரே நாடு என்ற எண்ணத்தை அனைவரது மனங்களிலும் உருவாக்குவதே ஆகும்.– என்றார். (ற–ஐ–5)

# குற்றங்கள் அனைத்தையும் தனித்துச் செய்யவில்லை

## மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 31
கடந்த அரசின் காலத்தில் அனைத்துக் குற்றங்களையும் மகிந்த ராஜபக்ச செய்யவில்லை. நடந்த குற்றங்களுக்கு முன்னைய அரசின் அமைச்சரவையில் அங்கம் வகித்த மைத்திரியும் பொறுப்பு. – இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கடந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்து தற்போதைய அரசு குற்றம் சுமத்தி வருகின்றது. அந்த அனைத்துக் குற்றங்களையும் மகிந்த ராஜபக்ச தனித்துச் செய்யவில்லை. கடந்த கால அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அப்போதைய அமைச்சரவையில் அங்கம் வகித்த மைத்திரிபால சிறிசேனவும் அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்,

தற்போதைய ஜனாதிபதி அந்தப் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. மேடைகளில் ஏறி எதிர்க்கட்சிகளைத் திட்டுவதை நிறுத்திவிட்டு நாட்டுக்கும், மக்களுக்கும் சேவையாற்றுமாறு கோருகின்றேன். நாட்டின் விவசாயிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் இணைந்து கொண்டுள்ள எம்மவர்களும் விவசாயிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. மருந்துப் பொருள்கள் இன்றித் தனியார் மருந்தகங்களில் மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நோயாளிகள் பணிக்கப்படுகின்றனர் – என்றார். (ற–ஐ–5)

# 10 ஆண்டுகளின் பின்னர் சம்பூர் ம.வி. மீள ஆரம்பம்

மூதூர், மார்ச் 31
திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் கடற்படையினரின் வசமிருந்து கடந்த வெள்ளிக் கிழமை விடுவிக்கப்பட்ட 177 ஏக்கர் காணியில் அமைந்திருந்த சம்பூர் மகா வித்தியாலயம் 10 வருடங்களின் பின்னர் கடந்த திங்கட்கிழமை முதல் மீளவும் செயற்படத் தொடங்கியுள்ளது. ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு 13 வரை கற்கின்ற 411 மாணவர்களுடன், 21 ஆசிரியர்களும் வித்தியாலயத்துக்கு சமுகமளித்துள்ளனர்.

மீள்குடியேறிய குடும்பங்களைச் சேர்ந்த புதிய மாணவர்கள் 11 பேர் வித்தியாலயத்தில் சேர்ந்துள்ளனர் என்று அதிபர் எஸ்.பாக்கியசீலன் தெரிவித்தார். (ற–ஐ–40)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லெண்ண விதை விதைத்தால்தான் நல்லிணக்கப் பயிர் முளைக்கும்

மக்களின் இறைமை என்பது, நாட்டின் பெரும்பான்மை இன மக்களின் விருப்பத்துக்கான ஒன்றல்ல. சமமான உரிமைகளை அனைத்து மக்களுக்கும் வழங்குவதே, உண்மையான யதார்த்தமான இறைமை ஆகும்.

மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருப்பவர், வெளிநாட்டவர் எவருமல்லர்; சாட்சாத், எமது நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே.

பத்தரமுல்லையில், "வாட்டேர்ஸ் எட்ஜ்" விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையிலேயே, அவர் மேற்கண்ட காத்திரமான கருத்தை ஊன்றி உரைத்திருக்கிறார்.

அமெரிக்க நாட்டின் அரசமைப்புச் சட்டமே, முதன் முதலாக வரையப்பட்டது என்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். மேலும், அரசமைப்புச் சட்ட வரைவு குறித்து ஜேர்மனியிடமும் ஆலோசனைகளைப் பெற உள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். அதற்கான பொறுப்பை, சபாநாயகர் கரு ஜெயசூரியா ஏற்றுள்ளார்--என்ற தகவலையும் பிரதமர் வெளிப்படுத்தினார்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் அரசமைப்புச் சட்டங்கள் வரையப்பட்ட (முந்தைய) வேளைகளில், அவ்வப்போது ஆட்சியில் அமர்ந்திருந்த அரச தரப்பினரின் விருப்பு வெறுப்புகளை உள்வாங்கியே, அவை தயாரிக்கப்பட்டன என்பதையும் அவர் போட்டுடைத்து உள்ளார். ஆனால், இந்தமுறை (இப்போது) அவ்வாறு இடம்பெறாது என்று அவர் அழுத்திக் கூறியுள்ளார்.

அரசமைப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டபோது, மக்களின் நலன்களை முழு அளவில் நிலை நிறுத்தாது, ஆளும் கட்சிகளின் தேவைகளுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் இசைந்தே அவை இயற்றப்பட்டன என்பதையும் பிரதமர் வெளிப்படுத்தி (போட்டுடைத்து) உள்ளார்.

நாட்டின் அரசுரிமையையும், இறையாண்மையையும் (Sovereignty), ஒரே நாடு என்ற நிலையையும் பலப்படுத்துவதாக, புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் என்றும் பிரதமர் அழுத்தி உரைத்து, உறுதி அளித்திருக்கிறார்.

அதிகாரங்களைப் பகிர்வது (Devolution of power) தொடர்பானதமது அரசின் மூலோபாயங்களையும் அவர் விரித்துக் கூறியுள்ளார்.

எனினும், மொத்தத்தில் சமஷ்டி நிலை சார்ந்த ஓர் அரசமைப்பும், அதிகாரப் பகிர்வும் மேலெழுமா என்பதற்கான விடையை பிரதமர் தொட்டுக் காட்டவில்லை. அது ஒரு வகை (சார்ந்த) விழுக் காடு எனலாம்!

மற்றொரு வகையில் கூர்ந்து நோக்கின், பிரதமரின் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் உலக நாடுகளைச் சென்றடையும். குறிப்பாக ஜெனி வாவில், ஐ.நா.மனித உரிமைகள் சபையில் வரவேற்கப்பட்டு, இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படும் வாய்ப்பும் மிக அதிகமாக உண்டு.

"வாட்டேர்ஸ் எட்ஜில்" வைத்து வெளிப்படுத்தப்பட்ட பிரதமரின் கருத்துக்கள், நிலைப்பாடுகளை, தென்னிலங்கையின் கிராமப்புறங்களில் விவரமாகவும், விரைந்தும் பெரும்பான்மை இன மக்களின் காதுகளில் போட்டால் மட்டுமே, ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மேலெழ அதிக வாய்ப்புண்டு.

இல்லையேல், ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாத நிலையே மேலுயரும்!

நல்லாட்சி அரசு, தனது நல்லெண்ணத்தை தெற்கின் கிராமப்புறங்களில் உகந்த முறையில் விதைத்தால் மட்டுமே, நல்லிணக்கத்துக்கான பயிர் முளைக்கும். இல்லையேல், யாவும் வெறும் புலுமாசாகி விடும்...!

# சிறிலங்கா அரசின் நல்லிணக்க முன்னெடுப்பும் நிலைமாறு கால நீதியும்

அருட்பணி. எழில் றஜன் யே.ச.
இணை ஊடகப் பேச்சாளர் தமிழ் சிவில் சமூக அமையம்

பின் முள்ளிவாய்க்கால் (பின் போர் என்ற பதத்துக்கு ஈடாக பின் முள்ளிவாய்க்கால் என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது) வரலாற்று இயங்குதள வெளிக்குள் பாதிக்கப்பட்டவர்களின் முன் தாராளமாக தரவிறக்கப்பட்ட அறிவியல் சொல்லாடல்களாக, நிலைமாறுகால நீதி, நல்லிணக்கம், அமைதி, சமாதானம் போன்றவை தேசிய முன்னுரிமைகளாய் நிறுத்தப்பட்டு, தேசிய நலனில் அக்கறையுள்ளவர்களினதும், ஆர்வலர்களினதும் பேசுப்பொருளாக பரிணமித்திருப்பதை பின் முள்ளிவாய்க்கால் வரலாறு எங்களுக்கு தெட்டத் தெளிவாகப் புகட்டியுள்ளது.

அறிவியல் சொல்லாடல் பயன்பாட்டின் பின்னுள்ள அரசியல் சர்வதேச ஆதிக்க நலன் சார்ந்து வடிவமைக்கப்பட்டிருப்பினும், அதனூடாக தமிழர் அரசியல் காய் நகர்த்தல்கள் எதிர்காலம் சார்ந்து எவ்வாறு இருக்க வேண்டும் என்பது அவசியமாகின்றது. விட்டுக்கொடுப்பு அரசியல் சாணக்கியம் பொய்த்துப்போன அல்லது நீர்த்துப்போன அரசியல் மூலோபாயமாக வரலாற்றினூடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்ற பட்டறிவையும் அரசியல் தலைமைகள் உற்று நோக்குவது அவசியமாகின்றது. மேற்கூறப்பட்ட அறிவியல் சொல்லாடல்கள் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து கட்டமைக்கப்படுவதான தோற்றப்பாடு மிகக் குறைவாகவே தென்படுகின்றது, அவ்வாறுபாதிக்கப்பட்ட சமூகம் சார்ந்து கட்டமைக்கப்பட்டிருப்பின் அதுஒரு வகுப்புச் சார்ந்தவர்களின் கருத்தாடல்களாகவே கட்டமைக்கப்படுவதைக் காண்கின்றோம். இதற்குப் பின்னுள்ள இருள் அரசியலையும் விளங்கிக் கொண்டே கருத்துருவாக்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது எனது வாதம். விழிப்பு நிலையில் இருந்து முன்னெடுக்கப்படும் நகர்வுகளின் பின்விளைவுகள் எதிர்வு கூறப்படலாம். இந்தவிழிப்பு நிலை நகர்வுகளின் ஒழுக்கவியல் பொறுப்புடைமையை வலியுறுத்துகின்றது. பாதிக்கப்பட்ட புவியியல் பரப்புக்கு வெளியே இருந்து திணிக்கப்படும் அறிவியல் சொல்லாடல் கருத்துருவாக்கத்தை சிக்கலுக்கு உட்படுத்தி, இருள்மயப்படுத்தி, பாதிக்கப்பட்ட மக்கள் மையப் பெறிமுறையை வடிவமைப்பதில் தற்சிந்தனை யாற்றலுடையவர்களின் வகிபாகம் கேள்விக்குட்படுகின்றது. புறத் தூண்டுதலுக்கு எதிரான [illegible] களாகத்தான் இன்று தமிழர் தரப்பில் இருக்கின்ற கல்வியுலகு இருக்கின்றதா? என்ற கேள்வியும் என்னுள் எழாமலில்லை. இவ்வாறுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் நலன் சார்ந்த விடயநோக்கு உண்மைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற

> "அறிவியல் செல்லாடல் பயன் பாட்டின் பின்னுள்ள அரசியல் சர்வதேச ஆதிக்க நலன் சார்ந்து வடிவமைக்கப்பட்டிருப்பினும் அதனூடாக தமிழர் அரசியல் காய் நகர்த்தல்கள் எதிர்காலம் சார்ந்து எவ்வாறு இருக்க வேண்டும் என்பது அவசியமாகின்றது."

கோமி பாபா குறிப்பிடுகின்ற மூன்றாம் வெளியை பாதிக்கப்பட்ட மக்களே கட்டமைக்கின்ற வரலாற்றுக் கட்டாயம் உருவாகின்றது. இந்தச் சூழமைவில், மைய மறுப்புச்சார்ந்த அடையாள விளக்கவியலை அகவயப்படுத்திய, பாதிக்கப்பட்ட மக்களின் தேசிய சொல்லாடல் அவசியமாகின்றது. முன் கருதலுடன் திட்டமிடப்பட்ட அரசின் நிகழ்ச்சித்திட்டங்கள் மூன்றாம் வெளிக்குள் கட்டுடைக்கப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் நல்லிணக்கத்துக்கான அணுகுமுறைகள் கட்டமைக்கப்பட்ட வேண்டும்.

நல்லிணக்கம், அமைதி, சமாதானம் ஆகிய அறிவியல் சொல்லாடல்கள், அரசியல், சமூகவியல், புவியியல், சூழமைவு சார்ந்து விளக்கவியலைப்பெறுகின்றது. உதாரணமாக: சிலி அரசின் வரலாற்றில் நல்லிணக்கச் சொல்லாடல் அரசியல் குற்ற மன்னிப்பை ஊக்குவிக்க பயன்படுத்தியதாகக் குறிப்பிடுகின்றார். அதே வேளை நல்லிணக்கம் நீதி சார்ந்து, எதுவுமே முன்னெடுக்கப்படக் கூடாதவர்களின் குறியீட்டு வார்த்தைகளாகப் பிரயோகிக்கப்பட்டதாக முன்னாள் ஆஜென்ரீனா ஆர்வலரும் இன்னாள் ஐ.நா. சிறப்புப் பிரதிநிதியுமான குவான் மெண்டிஸ் குறிப்பிடுகின்றார்.

நல்லிணக்கம் என்பது ஒரு கருத்தியல் சார்ந்தது மாத்திரமல்ல, அது ஒரு செயல்முறையும் கூட அந்தச் செயல்முறையில் நல்லிணக்கத்தை முதன்மைபடுத்துவோர் நீதியை இரண்டாமிடத்துக்கு நகர்த்துவதாக நீதிப் பொறிமுறை வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இது தண்டனையிலிருந்து தப்புவதற்கான சாணக்கியமாக பிரயோகிக்கப்பட்டதையும் மறுப்பதற்கில்லை. நல்லிணக்கத்துக்கும், மன்னிப்புக்குமானஉறவுநிலைஅந்நியோன்னியமானதே இந்த அணுகுமுறை. நீதியை, குறிப்பாக குற்றத்துக்கான தண்டனையைத் தவிர்த்து பாதீடு மாற்று வழிமுறையாக முன்வைக்க முயலுகின்றது. பாதீடு பொறிமுறை இழப்பீட்டை மட்டும் முன்னுரிமைப்படுத்துவதல்ல.

**பாதீடு பொறிமுறை:**

1. மீட்டழிப்பு:- பாதிக்கப்பட்ட நபரை, அல்லது அவர்களின் உறவினரை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருதல். இது தனிநபர் சுதந்திரத்தை, சமூகநிலையை குடும்பச் சூழலை, வாழ்விடத்தை, சொத்தை, வேலைவாய்ப்பை மீளளித்தல் தொடர்பானது. இந்த மீளழிப்பு இழைக்கப்பட்ட குற்றங்கள் சீரமைக்கக்கூடுமாயின் செல்லுபடியாகும். சீரமைக்க முடியாத குற்றங்களுக்கு இவை செல்லுபடியற்றதாகும் உதாரணமாக பாலியல் வன்புணர்வு, கொலை.
2. இழப்பீடு:- இழைக்கப்பட்ட குற்றங்களின் அளவீட்டின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். பொருளாதார இழப்பீட்டை மாத்திரம் கொண்டிராமல், உடல், உள ரீதியான பாதிப்புக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள், இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் குறிப்பாக கல்வி சார்ந்து, இழக்கப்பட்ட வருவாயுடனான சேமிப்பு, இழக்கப்பட்ட நன்மதிப்பு, மதிப்பு வாய்ந்த பதவி, சட்ட ஆலோசனைக்கான செலவு, மருத்துவச்செலவு போன்றவை உள்ளடங்கும்.

3.மறுவாழ்வு:- பாதிக்கப்பட்டவருக்கான, சமூக,மருத்துவ,உளவியல்,சட்ட ஆதரவைக் குறித்து நிற்கின்றது.

4.மனநிறைவளிப்பதும், மீண்டும் ஏற்படாதவாறு தடுத்தலும்:- மீண்டும் ஏற்படாதவாறு தடுத்தல் நிகழ்ச்சி நிரலுக்குள் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரல், உண்மையை சரி பார்த்தல், உத்தியோகபூர்வமான மன்னிப்புக் கோரல், நீதிசார்ந்து பாதிக்கப்பட்டவர்கள் தகுதியையும், நன்மதிப்பையும் மீள் நிறுவுதல், உண்மையை வெளிக்கொணர்தல், காணாமற் ஆக்கப்பட்டவர் இறந்திருந்தால் அதற்கான ஆதாரங்களைத் தேடிக் கண்டறிதல், குற்றவாளிக்கு சட்டத்தீர்ப்பு வழங்குதல்,நிறுவனச் சீரமைவு வேண்டும்.

மனத்திருப்தி அளிக்கும் செயற்பாட்டினுள் அடையாள நடவடிக்கைகளாக , இறுதிச்சடங்குகளை நிறைவேற்றல் இறப்பு உறுதிப்படுத்தப்பட்டிருப்பின், குற்றத்தின் பாரதூரத்தன்மையை ஏற்றுக் கொள்ளல், குற்றத்தை நிவர்த்தி செய்யக்கூடிய பொதுவேலைத் திட்டங்களை ஊக்குவித்தல், நினைவு கூரல் நாள்களை அறிமுகப்படுத்தல், அருங்காட்சியகங்களை உருவாக்கல், வீதிகளுக்கும், பொது இடங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பெயரிடல்.

இவை எல்லாமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதை மையமாகக் கொண்ட நிகழ்சிநிரலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இவை மீண்டும் நிகழாதிருக்க கட்டமைக்கப்பட்ட அநீதிகளை கட்டுடைக்க வேண்டும்.

நல்லிணக்கம் ,அமைதி என்பவை பல்வேறு நபர்களுக்கு பல்வேறு அர்த்தங்களை வழங்குகின்றது. ஒவ்வொரு தனிநபரும், சமூகமும் தத்தமது அரசியல் நிகழ்ச்சி நிர லுக்கேற்ப பொருள் விளக்கம் கொள்ள லாம்.

> நல்லிணக்கம், அமைதி என்பவை பல்வேறு நபர்களுக்கு பல்வேறு அர்த்தங்களை வழங்குகின்றன. ஒவ்வொரு தனிநபரும், சமூகமும் தத்தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப பொருள் விளக்கம் கொள்ளலாம்.

கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட உரிமை சார்ந்த குற்றங்களைக் கையாளுதல் தொடர்பில் சமாதானத்தை அல்லது அமைதியை முன்னெடுப்பதா? சமாதானத்தை அல்லது நீதியை நிலைநாட்டி அடுத்த கட்டத்துக்கு நகர்வதா? என்கின்ற விவாதம் ஆரம்பத்திலிருந்தே பல்வேறு தளங்களில் நிகழ்ந்து வந்திருக்கின்றது. இரண்டுமே நிலையான சமாதானத்துக்குத் தேவையானவை என்பதில் எவருக்குமே முரணான கருத்து இருக்க முடியாது. நல்லிணக்கம் ஒரு செயல்முறை என நம்புகின்றவர்கள், நீதிக்கு ஊடாக பயணித்தே ஆகவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகின்றார்கள்.

நிலை மாறுகாலநீதி குறிப்பிடுகின்ற எதிர்காலத்தில் மீண்டும் நடைபெறா வண்ணம் தடுத்தல் என்பதற்கான நீதிப்பொறிமுறை அவசியம்.சமாதானத்தையும் நீதியையும் எதிர்முரண்பாடாக கருதும் சிந்தனைப் பற்றுள்ளவர்கள் அதை நிரப்புத் தன்மை கொண்டதாக அணுகுதல் அவசியம்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் யூத இன அழிப்பு சார்ந்து நீதி முன்னெடுக்கப்பட்டது. அதன் பின் இன்றுவரை உருவாகிய நீதிப்பொறிமுறைகளையும் அது தொடர்பான நிறுவனங்களையும் ஒப்பு நோக்கும்போது, சமாதான நல்லிணக்கத்தின் நீடித்த தன்மைக்கு நீதிப் பொறிமுறையின் அவசியம் தெளிவாகப் புலப்படுகின்றது. ஐ.நாவைப் பொறுத்த வரையில் பின்மோதல் நீதிமன்ற விசாரணையோடு ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்த அணுகுமுறையானது, குற்றவாளிகள் தண்டனையில் இருந்து விலக்கீட்டுரிமை கொண்டிருந்தால், உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகாது என்ற எடு கோளிலிருந்து பிறந்ததாகும்.

இந்த விசாரணை நீதிப் பொறிமுறை வரலாற்றில் ஒரு திருப்புமுனை. நீதி விசாரணைகளின் 60 ஆண்டுகளை பூர்த்தி செய்த வேளை (2009)அப்போதிருந்த சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் பிரதான குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட தீர்ப்பாயங்களின் பங்களிப்பு பற்றி விளக்கும் போது, அந்தத் தீர்ப்பாயங்கள் நீடித்த சமாதானத்துக்கு ஆற்றிய பங்களிப்பை மறுக்கமுடியாது எனக் குறிப்பிடுகின்றார்.

இந்தப் பொறி முறைகள் தண்டனை விலக்கீட்டுரிமையைச் சிக்கலுக்குட்படுத்தி குற்றவாளிகள் தண்டனைக்குரியவர்கள் குறிப்பாக சர்வவேதேச சட்டவரையறைகளை மீறுவோர் தண்டனைக்குரியவர்கள் எனத் தீர்ப்பளித்தது. இந்தச் செயன்முறை, பழி தீர்ப்பது என்கின்ற தவறான தெளிவுரையிலிருந்து, மீண்டும் இவ்வாறான தவறுகள் நடைபெறாத வண்ணம் காப்பாற்றவே, என்கின்ற சரியான தெளிவுரைக்கு மக்கள் சிந்தனை நகர்த்தப்பட வேண்டும். இன நல்லிணக்கத்துக்கு முன்னுதாரணமாக அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் நாடுகளுள் தென்னாபிரிக்கா முக்கியத்துவம் பெறுகின்றது.

## இந்தியத் துணைத் தூதுவரே நீங்களாவது உதவமாட்டீர்களா?

இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாக உதயனில் வெளிவந்த கட்டுரையை வாசித்தேன். நானும் ஒரு பாதிக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டப் பயனாளி என்ற வகையில் அதைப்படித்தபோது ஆறுதலாக இருந்தது. அதில் உள்ளவாறு எமக்கு மீறிப் பணத்தை வழங்கினால் எமது துயரம் எவ்வளவோ குறைந்துவிடும்.

அதிகாரிகளின் திட்டத்தின் பிரகாரம் இந்தியன் வீடு ஒன்றை அமைக்க வேண்டுமென்றால் ஆகக்குறைந்தது 11 லட்சம் ரூபா தேவைப்படும். ஆனால், 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவே எமக்கு வழங்கப்பட்டது. இந்தத் தொகையை வழங்கிவிட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வீடுகளை அமைக்குமாறு நாம் வற்புறுத்தப்பட்டோம். வீடுகள் பறிமுதல் செய்யப்படுமென எச்சரிக்கையும் அதிகாரிகளால் விடுக்கப்பட்டது. இதற்குப் பயந்து பல்வேறு வகையில் கடன்பட்டு வீடுகளை முடித்தோம். ஆனால் நாம் பெற்ற கடன்கள் எம்மைத் தூங்கவிடாமல் துரத்துகின்றன. ஆரம்பத்தில் 8 லட்சம் ரூபாவை வீடுகள் அமைப்பதற்கு நிர்ணயம் செய்துவிட்டுப் பின்னர் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியமை மிகவும் அநீதியான செயலாகும்.

தற்போதைய இந்தியத்துணைத்தூதுவர் மனிதாபிமானம் மிக்கவர் என்பதைநாம் அறிவோம். அவர் பாதிக்கப்பட்ட எம்முடன் கலந்துரையாடி உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும். வீடுகளை அமைப்பதற்கு நிதியை வழங்கிய இந்திய அரசுக்கு பயனாளிகள் பாதிக்கப்படாத வகையில் பார்த்துக்கொள்ளும் கடமையும் உள்ளது.

ஆகவே, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதுவர் இதில் தலையிட்டு இந்திய மத்திய அரசுடன் கலந்துரையாடி எமக்குரிய மீதிப்பணத்தைப் பெற்றுக் கொடுத்தால் நாம் என்றைக்குமே அவருக்கு நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்போம்.

பாதிக்கப்பட்டவர்களின் சார்பில்
செ.மகேஸ்வரி

## இவர்களைக் கவனிக்க எவருமில்லையா?

கடந்த 19 ஆம் திகதி அன்று நான் வலிகாமத்தின் வலி.வடக்கு, சிவபூமிக்குச் செல்லும் அளவெட்டி வடக்கு ஆலடி வீதியூடாகச் செல்லும் நகுலேஸ்வரர் வீதியின் ஒவ் வொரு கிடங்கையும் தாண்டி எனது மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தேன். ஏனெனில் அந்தளவுக்கு மோசமான வீதி. இவற்றுக்கும் மேலாக மேற்படி திகதியில் உதயன் பத்திரிகையில் 'நீதி நிர்வாகமும் கட்டுப்பாடும்" என்ற தலைப்பில் வந்த கட்டுரையை சிறுபிள்ளைகள், மனனம் செய்வதுபோல, நானும் மனதில் மனனம் செய்து கொண்டே சென்றேன். எமது பெண்களின் பாதுகாப்பு அவர்களது காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. இன்று எவ்வாறு இருக்கின்றது என்று எண்ணிக்கொண்டு ஆலடி சந்தியில் ஏறியபோது, தூரத்தே சிவபூமியின் பக்கமாக இருந்து 1987ஆம் ஆண்டில் எமது மண்ணை ஆக்கிரமித்த இன்னுமொரு நாட்டினர் பயன்படுத்தியது போன்றதொரு மொட்டை ஜீப் ரக வாகனத்தில் சில இளைஞர்கள், உள்ளாடை, சேட் என்பவை அணியாமல் தலையில் சடை, காதில் தோடு என்பவற்றோடு அந்தத் திறந்த வாகனத்தில் வலம் வந்தார்கள். அதைப் பார்த்ததும் ஒருகணம் திகைப்பு அடைந்து விட்டேன். எனது அருகில் சென்ற பெண்பிள்ளை ஒருவர் என்னிடம் கேட்டது 'பார்த்தீர்களா அண்ணா! எமது கலாசாரத்தை? 'என்று. இதைத்தான் பிள்ளை நானும் நினைத்து வர நீங்களும் இவ்வாறு கேட்கிறீர்கள் என்றேன். இவர்கள் யார்? இவர்களைக் கவனிக்க எவரும் இல்லையா?

வலிகாமத்தான்

## முறைப்பாடு நிவர்த்தியாகுமா?

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள சாவகச்சேரியில் சில வீதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன. சில வீதிகள் அமைக்கப்பட்டாலும் சீராகப் புனரமைக்கப்படவில்லை. கல்வயல் மட்டுவில் வீதிகள், டச்சு வீதி என்பவை சேதமடைந்துள்ளன. தமிழ் அரசியல்வாதிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட எவர்களுடன் சரி பேசி சீராக்குவார்களா? விபத்துகள் அதிகமாக நடைபெறுவதற்கு இதுவும் ஒரு காரணம். எமது நல்லாட்சியில் எத்தனையோ திட்டங்கள் நடைபெறு [illegible] கவனத்தில் கொண்டு இந்த முறைபாட்டை நிவர்த்தி செய்யவும்.

அன்பரசன், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு மாநாட்டில் பங்கேற்காது ரஷ்யா

## நல்ல வாய்ப்பைத் தவறவிட்டதாக வெள்ளை மாளிகை அறிவிப்பு




வொஷிங்டன், மார்ச் 31
அமெரிக்காவில் உலக நாட்டுத் தலைவர்கள் பங்கேற்கும் அணுப் பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என ரஷ்யா அறிவித்துள்ளது. இதனையடுத்து இந்த அறிவிப்பின் மூலம் அந்த நாடு ஒரு வாய்ப்பை இழந்து விட்டது என்றே கருதவேண்டியுள்ளது என அமெரிக்க வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோட்ஸ் கூறியுள்ளார். அணுப் பாதுகாப்புத் தொடர்பான இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாததன் மூலம், முந்தைய காலத்தில் இருந்ததுபோன்று, தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள ரஷ்யா முயல்கிறது என்றும், அமெரிக்கா – ரஷ்யாவுக்கு இடையில் அணு ஆயுத விடயங்கள் தொடர்பில் எந்தக் கூட்டுக் கலந்துரையாடல்களும் இடம்பெறப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-ரி4)

# 2 வருடங்களில் 20 முறை முகத்தை மாற்ற முயற்சி செய்த சீனப் பெண்





ஹொங்கொங், மார்ச் 31
சீனாவில் பெண் ஒருவர் கடந்த 2 வருடங்களில் தன்னை அழகாகக் காட்ட 20 விதமான நடைமுறைகளைக் கையாண்டுள்ளார். சீனாவில் முன்னணி நடிகையான பான் பிங் பிங் போன்று தோற்றம் பெற வேண்டும் என்று வர்த்தகரான 29 வயது யூ பிங் என்பவரே இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.
தமது மகளது தொடர் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள், வேறு பல முயற்சிகளையும் பார்த்து சகிக்க முடியாத அவரது தாயார், தொலைக் காட்சி நிகழ்ச்சியில் வெளிப்படையாகத் தனது கருத்துகளை முன்வைத்துள்ளார். இன்னமும் தொடர்ந்து பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை செய்தால் உன்னை எனது மகள் என அங்கீகரிக்கமாட்டேன் எனத் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் தெரிவித்துள் ளார்.
வட கிழக்கு சீனாவில் வசிக்கும் யூ பிங், தனது சத்திர சிகிச்சைக்காக 80 ஆயிரம் ஸ்ரேலிங்பவுண்டுகளைச் செலவு செய்துள்ளார். பொதுமக்கள் கலந்து கொள்ளும் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தாயார் தனது மகளின் நிலை பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.
எனது குடும்பச் சாயலை எனது மகள் இழந்துள்ளார். குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள் அவரை வேற்று நபராகக் கணிக்க ஆரம்பித்துள்ளனர் எனத் தாயார் தெரிவித்தார். இவ்வாறான கூற்றை யூ பிங் தனது தாயாரிடம் இருந்து சற்றும் எதிர்பார்க்கவில்லை.
இந்தக் கூற்றுக்குப் பதிலளித்த யூ பிங், உலகில் அழகான பெண் நான் என உணர்கிறேன் எனத் தெரிவித்தார். மேலும் பான் பிங்பிங் நடிகையைப் போன்ற தோற்றத்தைப் பெறுவதே தனது கனவு எனவும் தெரிவித்துள்ளார்.
தன்னை அழகுபடுத்தவும், சிகிச்சை பெறவும் பெருந்தொகையான பணத்தை செலவு செய்து வருகிறார். இதுபோதாதென்று தனது நண்பர்களையும் இது போன்று முயற்சிக்கும்படி தொல்லை கொடுத்து வருகிறார்.
அழகின் மீதான இவரது மோகம், தோற் சுருக்கத்துக்கு எதிரான ஊசியை ஏற்றியதில் இருந்து ஆரம்பித்தது. பின்னர் நாடியை நீளமாக்கும் அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டார். பின்னர் மூக்கு என அவரது அறுவைச் சிகிச்சைகள் தொடர்ந்தன. இவர் தனது உயரத்தை அதிகரிக்கக் கால் எலும்புகளை வெட்டி அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். இவற்றைச் சகிக்க முடியாத அவரது தாயார் இந்த முயற்சிகளை நிறுத்தும்படியும், இவ்வாறான முயற்சியால் தாம் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (து-ரி4)



# ஐ.எஸ். அமைப்பு மீதான தீவிரமான தாக்குதலில் சிரிய அரசுப் படைகள்

டமஸ்கஸ், மார்ச் 31
சிரியாவின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் அரசு படைகளுக்கும் ஐ.எஸ். போராளிகளுக்கும் இடையில் கடும் போர் இடம்பெற்றது. புராதன நகர் பால்மைராவைக் கைப்பற்றிய பின்னர், ஐ.எஸ்க்கு எதிராக இராணுவத்தினர் தொடர் சமரில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பும் இடம்பெற்றுள்ளது. சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு ஆதரவு வழங்கும் அடிப்படையில் சிரியப் படைகளுக்கு வலுச் சேர்க்கும் முகமாக ரஷ்யா இந்தச் சமரிலும் களமிறங்கியுள்ளது என மனித உரிமைகள் ஆய்வாளர் அல் –குவார்யாட்டைன் தெரிவித்துள்ளார்.
பால் மைரா நகர், 2015 ஆம் ஆண்டு ஐ.எஸ் அமைப்பால் கைப்பற்றப்பட்டது. அதன்போது 230 பேர் ஐ.எஸ் அமைப்பால் கடத்திச் செல்லப்பட்டனர். பால்மைரா நகர் மீட்கப்பட்டதை வெற்றியின் ஆதாரம் எனச் சிரிய அரசு தெரிவித்துள்ளது.
நகர் மீட்கப்பட்டமை குறித்து ஜனாதிபதி அசாத் தெரிவிக்கையில், அரசியல் தீர்வுகளுக்குத் தடையாக இருப்பவற்றை விலக்கும் வகையில் இராணுவம் செயற்படவேண்டும். மேலும் சவுதி அரேபியா, துருக்கி, பிரிட்டன் ஆகிய நாடுகள் பேச்சில் தமது தீர்மானங்களைத் திணிப்பதற்காக எம் தோல்விகளையும், பின்னடைவுகளையும் எண்ணிக் கொண்டு இருக்கின்றனர். இவற்றைத் தவிர்க்கத் தொடர்ந் தும் இராணுவம் வினைத்திறனுடன் செயற்படவேண்டும், எமது வெற்றிகள் அரசியல் தீர்வுகளுக்கு வழிவகுக்கும் என அவர் தெரிவித்தார். (து-ரி4)

# பாதுக
# பாக். சி

## லாகூர் தீவிர

இஸ்லாமாபாத், மார்ச் 31
தமது பாதுகாப்பை உறுதிசெ
மாறு முஸ்லிம் பெரும்பான்
பாகிஸ்தான் அரசிடம், அங்கு
கிறிஸ்தவ சமூகத்தினர் கோரிக்
முன்வைத்துள்ளனர்.
கிறிஸ்தவர்களின் புனித திருநாள
ஈஸ்டர் திருநாளில் லாகூரில் இ
பெற்ற தீவிரவாதத் தாக்குதலில்
பேர் கொல்லப்பட்டதுடன், சு
300 பேர்வரை காயமடைந்த
இந்த நிலையில், பாகிஸ்தா
உள்ள கிறிஸ்தவ சமூகத்தினர்
யில் பலவீனமானதொரு உ
வளர்ந்து வருகிறது. எனவே
களது பாதுகாப்புத் தொடர்பில்
கூடுதல் கவனம் செலுத்த வே
டும் என அவர்கள் கேட்டுக் கெ
டுள்ளனர். லாகூர் தாக்குதலா
பாதுகாப்புக் குறைப்பாட்
லேயே இடம்பெற்றது எனத் தா
லில் உயிரிழந்த ஒருவரின் தா
குறிப்பிட்டார். தேவாலயங் க
போதிய பாதுகாப்பு நடவடிக்கை
முன்னெடுக்கப்பட்டிருந்த
லும், ஈஸ்டர் கொண்டாட்டங்கள்
பெற்ற பூங்காக்களில் பாதுக
பலப்படுத்தப்பட்டிருக்கவில்
என அவர் தெரிவித்தார்.




# கனடாவில் நொறுங்கியது விமா
# முன்னாள் எம்.பி. உட்பட 7பேர்

கனடாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர். ஜீன் லப் பிர்ரி எனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தமது தந்தையாரின் மரணச் சடங்கில் கலந்துகொள்ளத் தனி விமானத்தில் தனது குடும்பத்தாருடன் பறந்து சென்றார். இதன்போது ஏற்பட்ட விபத்தில் அவரது மனைவி, 3 சகோதரர்கள், விமானி என 7 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர்.
மோசமான வானிலை காரணமாக விமானம் விபத்துக்குள்ளாகியது என ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. விபத்துக் கள ஒளிப்படத்தில் விமானம் பனித் திடலில் நொறுங்கி இருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.
கனடாவின் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் விபத்துக்கான விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். மோசமான வானிலை காரணமா
கச் சம்பவம் இடம்பெ
தாமதமாக விசார
விபத்து இடம்பெ
சென்றடைந்தனர்.
விமர்சகராக ஊடக
யாற்றிய இவர், பின்
வேசித்தார். கனடா அ
நபராக வலம் வந்தா
கங்கள் சிறந்த அரசி
இழந்து விட்டோம்
லைத் தெரிவித்துள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...காப்பை உறுதி செய்யுமாறு ...கிறிஸ்தவர்கள் கோரிக்கை

## ...விரவாதத் தாக்குதலை அடுத்து

...திசெய்யு'
...பான்மை
...ங்குள்ள
...காரிக்கை

...நாளான
...ரில் இடம்
...தலில் 72
...ன், சுமார்
...டந்தனர்.
...ஸ்தானில்
...தினர் மத்தி
... உணர்வு
...எவே தங்
...பில் அரசு
...த வேண்
...க் கொண்
...தலானது
...ாட்டினா
...த்தாக்குத
...ன் தாயார்
...ங் களில்
...க்கைகள்
...த் போதி
...கள் இடம்
...ாதுகாப்பு
...வில்லை
(த)



# எகிப்து விமானத்தைக் கடத்தியவர் போலித் தற்கொலைக் குண்டுதாரி

## சைப்பிரஸ் பொலிஸார் தெரிவிப்பு

எகிப்து விமானத்தைக் கடத்திய தனிநபர் போலிக் குண்டை உடலில் அணிந்திருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அலெக்ஸாண்டிரியாவில் இருந்து கெய்ரோவுக்குப் புறப்பட்ட குறித்த விமானம் தற்கொலைக் குண்டுதாரி எனக் கருதப்பட்ட நபரால் கடத்தப்பட்டு சைப்பிரஸின் லனார்க்கா பகுதியில் தரையிறக்கப்பட்டது. 6 மணிநேரம் இடம்பெற்ற முற்றுகை பின்னர் சமாதானமாக முடிவடைந்தது.

இவரது இந்த முயற்சிக்குக் காரணம் முன்னாள் மனைவியைச் சந்திப்பது எனத் தெரிவிக்கப்பட்டபோதும், விமான அதிகாரிகளுக்கும், கடத்தியவருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், எகிப்தில் உள்ள பெண் சிறைக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதும், ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதும் அவரது குறிக்கோளாக இருந்தமை தெரிய வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


அத்துடன் சைப்பிரஸ் வெளிவிவகார அமைச்சர் இது பற்றிக் குறிப்பிடுகையில், அவர் மன நிலை பாதிக்கப்பட்டவர் எனவும், தீவிரவாதி இல்லை எனவும் தெரிவித்தார். எகிப்திய அதிகாரிகள் தெரிவிக்கையில் விமானத்தில், அமெரிக்கர்கள், பிரித்தானியர்கள், பெல்ஜியத்தினர், இத்தாலியர்கள், டச்சு நாட்டைச் சேர்ந்தவர்கள் இருந்தனர் எனவும் தெரிவித்தனர். (த-ரி4)



# ...மானம் ...ர் சாவு

...ம்பெற்ற அடுத்த தினமே ...சாரணை அதிகாரிகள் ...ம்பெற்ற இடத்தைச் ...தனர். கனேடிய அரசியல் ...ஊடகம் ஒன் றில் கடமை ..., பின்னர் அரசியலில்பிர ...டா அரசி யலில் முக்கிய ...வந்தார். அந்த நாட்டு ஊட... அரசியல் ஆய்வாளரை ...டோம் என தமது இரங்க...ித்துள்ளனர். (த-ரி4)

# ரூபா 1 பில்லியன் செலவில் ரஷ்யாவில் நடந்த திருமணம்



மொஸ்கோ, மார்ச் 31

உலகின் மிக பிரமாண்டமான திருமணம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இடம்பெற்றுள்ளது. பில்லியனர் ஒருவரின் மகனான 28 வயதான கட் செரீவுக்கும், 20 வயதான கடீஜா உள்ஹறக்கோவாக்கும் நடைபெற்ற திருமணம் 1 பில்லியன் ரூபா செலவில் இடம்பெற்றுள்ளது. மணப் பெண் அணிந்திருந்த ஆடை 25 ஆயிரம் டொலர்கள் பெறுமதியானதாகும். அது சிறப்பு ஆடை வடிவமைப்புக் கலைஞரினால் வடிவமைக்கப்பட்டதாகும். திருமணம் மொஸ்கோவில் உள்ள ஆடம்பர ஹோட்டலொன்றில் இடம்பெற்றது. திருமண நிகழ்ச்சியை மெருகேற்ற ஜெனிபர் லோபஸ், இன்னும் சில உலகப் புகழ் பெற்ற பாடகர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

மணப் பெண்ணின் நகைகள் முழுவதும் வைரம் பதிக்கப்பட்டிருந்தது. திருமண மண்டபம் இயற்கைப் பூக்களால் பிரமாண்டமாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பல அடி உயரத்தில் திருமணக் கேக் தயாரிக்கப்பட்டிருந்தது.





பெரும் எண்ணிக்கையில் தம்பதிகளின் தோழிகள், தோழர்கள் அவர்களைச் சூழ இருந்தனர். இவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான ஆடைகள் அணிவிக்கப்பட்டிருந்தன. உலகின் கோடீஸ்வரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. பிரமாண்டமான இந்தத் திரு மணம் வாண வேடிக்கையுடன் முடிவடைந்தது. (த-ரி4)

# மியன்மார் ஜனாதிபதியாக ஹிதின் கியாவ் பதவியேற்பு

யங்கூன், மார்ச் 31

மியன்மார் நாட்டின் புதிய ஜனாதிபதியாக ஆங் சான் சூகியின் ஆதரவு பெற்ற ஹிதின் கியாவ் நேற்றுப் பொறுப்பேற்றார்.

மியன்மாரில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக முறைப்படி கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சி (என்.எல்.டி.) இரு சபைகளிலும் 80 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த நிலையில் தற்போதைய அதிபரின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது.



அதைத் தொடர்ந்து புதிய அதிபர் ஏப்ரல் மாதஆரம்பத்தில் பதவி ஏற்கவேண்டும். மியன்மாரின் சட்டப்படி ஜனாதிபதியை அமைச்சர்கள் தான் தேர்ந்தெடுக்கவேண்டும்.

மியன்மார் அரசியல் சட்டப்படி வெளிநாட்டைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்தவரோ, அவரின் குழந்தைகளோ நாட்டின் உயரிய பதவியை வகிக்கமுடியாது.

இதன் அடிப்படையில் ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சி தலைவியான ஆங் சான் சூகி, இங்கிலாந்து நாட்டுக்காரரைத் திருமணம் செய்ததால் அதிபர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே அவர் தனது ஆதரவாளரும் நம்பிக்கைக்குரியவருமான ஹிதின் கியாவ் என்பவரைக் களம் இறக்கினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிகமான உறுப்பினர்களின் ஆதரவு டன் ஆங் சான் சூகியின் ஆதரவு பெற்ற ஹிதின் கியாவ் மியன்மார் நாட்டின் புதிய அதிபராகக் கடந்த வாரம் தேர்வு செய்யப்பட்டார். இதனையடுத்து நேற்று ஜனாதிபதியாக அவர் பொறுப்பேற்றுக் கொண்டார். மியன்மாரின் புதிய அதிபராக நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்ட ஹிதின் கியாவ், கடந்த வாரம் தனது புதிய அமைச்சரவைப் பட்டியலை வெளியிட்டார். அந்தப் பட்டியலில், ஆங் சான் சூகியின் பெயரும் இடம்பெற்றுள்ளது. மியன்மார் நாட்டு அரசமைப்புச் சட்டத்தின்படி வெளிநாட்டவரைத் திருமணம் செய்து கொண்டவர் அந்தநாட்டின் அதிபராகப் பதவி ஏற்கக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் அமைச்சராகச் செயலாற்ற குறிப்பிடும்படியான தடை ஏதுமில்லை எனத் தெரிகிறது. எனவே அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவரான ஆங் சான் சூகி பல முக்கிய துறைகளின் அமைச்சராக விரைவில் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்




*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் மீன ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் )*

## மீனம்

உழைப்பே ஓய்வுக்குத் திறவு கோல், சுறுசுறுப்பே செல்வத்துக்குத் திறவு கோல் என்பதை அறிந்த நீங்கள், எப்போதும் பரபரப்பாக இருந்து சாதிப்பீர்கள். ஆயிரம் புத்திமதிகளை விட ஓர் அனுபவம் தக்க பாடம் கற்பிக்கும் என்பதற்கேற்ப, அனுபவ அறிவு அதிகமுள்ளவர்களாக இருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு 8.1.2016 முதல் 25.7.2017 வரை உள்ள காலகட்டத்தில் இந்த ராகுவும், கேதுவும் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

**ராகுவின் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு ஏழாவது வீட்டில் நின்று கொண்டு எதிலும் ஒரு பிடிப்பில்லாமல் இருக்கச் செய்தாரே! உங்களைதிக்குத்திசையறியாதுதிணற வைத்ததுடன், திறமைகள் இருந்தும் சாதிக்க முடியாமல் தவித்தீர்களே! சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பில்சிக்கிக்கொண்டீர்களே! தாழ்வுமனப்பான்மையால் மனஉளைச்சலுக்கு ஆளானீர்களே! இப்படி உங்களைப் பாடாய்ப் படுத்திய ராகு பகவான், இப்போது உங்கள்ராசிக்குஆறாமிடத்தில் ஆற்றலுடன் வந்தமர்கிறார். குடும்பத்தினரையும் உங்களையும் பிரித்து வைத்தாரே! ஒட்டு உறவில்லாமல் தவித்தீர்களே! உண்மையான பாசமுள்ளவர்களைத் தேடி அலைந்தீர்களே! இப்படி நாலாவிதங்களிலும் உங்களைப் பாடாய்ப் படுத்திய ராகு பகவான்இப்போது உங்கள்ராசிக்குஆறாமிடத்தில் ஆற்றலுடன் வந்தமர்வதால் வீட்டில் உங்களை எதிரியைப்போல் பார்த்த குடும்பத்தினர்கள் இனி உங்களைச் சரியாகப் புரிந்து கொள்வார்கள்.

**ராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின்சஷ்டமாதிபதியானசூரியனின்உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் 8.1.2016 முதல் 10.3.2016 வரை ராகுபகவான் செல்வதால் இக்காலகட்டத்தில் பிற மொழியினர், வெளிமாநிலத்தவர்களால்ஆதாயமடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. பழைய கடன் பிரச்சினைகள் தீரும். ராகுபகவான் உங்கள்சேவகாதிபதியும் – அஷ்டமாதிபதியுமான சுக்கிரனின் பூரம் நட்சத்திரத்தில் 11.3.2016 முதல் 15.11.2016 வரை செல்வதால் வேலைச்சுமையால் பதற்றம், காரியத் தடைகள், ஆடம்பரச் செலவுகள் என வந்து போகும். எவரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். பணவரவு உண்டு. மனைவியுடன் ஆரோக்கியமான விவாதங்கள் வரும். கேதுவின் மகம் நட்சத்திரத்தில் 16.11.2016 முதல் 25.7.2017 வரை ராகுபகவான் செல்வதால் இந்தக் காலகட்டத்தில் அசைவ, உறைப்பு உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. பழைய கசப்பான சம்பவங்களை மறப்பது நல்லது. திடீர்ப் பயணங்களால் அலைச்சல் அதிகமாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார் என்பதைக் கண்டறிவதில் குழப்பம் வரும்.

கன்னிப் பெண்களே! சோர்வு நீங்கித் துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். நல்ல வரன் அமையும். வேலை கிடைக்கும். மாதவிடாய்க் கோளாறு, வயிற்று வலி, தூக்கமின்மை நீங்கும். பெற்றோரின் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

மாணவ–மாணவிகளே! அதிக மதிப்பெண் பெறுவீர்கள். சக மாணவர்கள் மத்தியில் பாராட்டப்படுவீர்கள். ஆசிரியர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். பெற்றோர் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள்.

அரசியல்வாதிகளே! எந்த கோஷ்டியிலும் சேராமல் நடுநிலையாக இருக்கப்பாருங்கள். பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். சகாக்கள் மத்தியில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

கலைத்துறையினரே! உங்களின் படைப்புக்கு மதிப்பு, மரியாதை கூடும். மூத்த கலைஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள். சம்பள விடயத்தில் கறாராக இருங்கள்.

(தொடரும்)

கே.எஸ்.சிவஞானராஜா

# மதச்சார்பின்மையே மண்ணுக்கு மகிமை தரும்

உலகின் அதிசயமாக இலங்கையை உருவாக்க வேண்டுமானால் கீழ்வருபவை நிறைவேற்றி வைக்கப்படுதல் வேண்டும்.

மதச்சார்பற்ற நாடாக்குதல், மதசமத்துவம் பேணுதல், மதச் சுதந்திரத்துக்கான வழிபாட்டைஅனுமதித்தல், மதக்கட்டுப்பாடுகளை மீறாதிருத்தல் , மதம் சார்ந்த உயிர்ச் சாவுக்குத் தடைவிதித்தல், புதிய ஆலயங் களையோ, விசாலப்படுத்தலையோ மேற்கொள்ளும்போது மாகாண சபையின் அனுமதி பெறப்பட ஆவன செய்யப்படுதல். மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடைசெய்தல். மத ஈடுபாடு உடையவரை அமைச்சராக்குதல்.

**மும்மொழிப் பாவனைக்கு வழி சமைத்தல்**

ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் தரம் ஒன்றில் இருந்து சகலருக்கும் கட்டாயமாக்குதல் வேண்டும். ஆங்கிலம் பாடமே இலங்கையை உலக தரத்துக்கு அழைத்துச் செல்லும். பல்கலைக்கழகம் வரை ஆங்கிலத்தில் சாதனைபுரிய வாய்ப்பளித்தல், மும்மொழியிலும் அரச, தனியார் வர்த்தக நடவடிக்கைகளையும், விளம்பரங்களையும் பேண வழி சமைத்தல், அனைத்துப் போக்குவரத்து வாகனங்களிலும் மும்மொழியை நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

**மாகாணங்களை இணைத்தலும், சுயாட்சியும்**

மொழி, கலை பண்பாட்டு விழுமியங்கள் மேலும் சிறக்க, ஏற்கனவே இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கை மீளவும் இணைத்தல். ஏனைய மாகாணங்களும் விரும்பும் பட்சத்தில் இணையலாம்., மாநில சுயாட்சி மூலமாக, காணி, கல்வி, பொலிஸ், கண்டுபிடிப்புகள், பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, தொழிற்சாலைகள், உற்பத்தி வசதிகளை மேம்பட இடமளித்தல் வேண்டும். மத்திய அரசின் அனுமதியோடு வெளிநாடுகளின் தொழில் வள முதலீடுகளுக்கு மாகா ணங்கள் முனைப்புடன் செயற்பட வாய்ப்பாகினால் இலங்கை ஓர் அதிசயமாகும்.

மாகாணங்களுக்கான நிதிகள் குடிசனப் பரம்பலுக்கமைவாகப் பகிரப்படுதல் வேண்டும். வெளியார் உதவிகளுக்கு இடமளித்தல் வேண்டும். தமிழ் மக்களையோ, முஸ்லிம் மக்களையோ, கிறிஸ்தவ மக்களையோ சந்தேகக் கண்கொண்டு பார்த்து வாழ்ந்தால், இலங்கையின் சந்தோசம் மறைந்துவிடும். சகல இனமக்களுக்கும் வலுச்சேர்க்கும் அடிப்படையில் கட்சிகளின் பரிந்துரை களுக்கு அமைவாக ஒரு சுழற்சி அடிப் படை யில் மாகாண முதல்வர்கள், சனத்தொகையின் பிரகாரம் ஒழுங்காகத் தெரிவு செய்தல். தேவையேற்படும் பட்சத்தில் மலையகத் தமிழர்களுக்கும் வடக்கு- கிழக்கில் வேலை வாய்ப்பை வழங்குவதற்கு ஆவன செய்தல். கல்விப் பரிமாற்றத்துக்கும் ஆவன புரிதல். காங்கேசன்துறை, பரந்தன், ஆனையிறவு தொழிற்சாலைகளை மீளவும் இயங்க வழிசமைத்தல், நிதி ஒதுக்கீடு செய்தல். மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான துறைமுக மேம்பாட்டுக்கு வழிசமைத்தல் வேண்டும்.

**கல்விப் புனரமைப்பு**

தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்து தரம்8 இற்கு மாற்றுதல். தரம் 1தொடக்கம் தரம் 4 வரை பிற்பகல், மாலை நேர பிரத்தியேக தனியார் வகுப்புக்களைத் தடை செய்தல். தரம் 11 இல் பாடங்களைக் குறைத்தல். தாய்மொழி, ஆங்கிலம் (சிங்களம் அல்லது தமிழ்) விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் இலத்திரனியல் ஆகிய பாடங்களை மட்டும் அனுமதித்தல் என்பவை முக்கியமாகும்.

ஏனைய பாடங்களான சமயம், கலைகள், வரலாறு ஆகியவற்றின் ஆற்றுகை கருதியும், சுகாதார தேவைகளைக் கருத்தில் கொண்டும், வெள்ளிக்கிழமையை முழுமையாகப் பாவித்தல் வேண்டும்.அன்றைய தினம் தனியார் வகுப்புக்களை நாடு முழுவதும் இரத்துச் செய்தல், ஞாயிறன்று குடும்ப ஒற்றுமைக்கு வழி சமைத்தல், விடுமுறையளித்தல். நாடு முழுவதும், உன்னதமான தூய நடையுடை பாவனையைச் சீராக்குதல். ஒரு வகுப்பில் இருக்கக் கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கையை இருபத்தைந்தாகக் குறைத்தல் . கடமை நேரத்தில், கல்வி உட்பட சகல நிர்வாகக் கட்டமைப்பிலும் தனிப்பட்ட தொலைபேசிப் பாவனையைக் கட்டுப்படுத்தல். அலுவலகத்துக்கான தொலைபேசியைப் பாவிக்க வழிபுரிதல். கழிப்பறை, தண்ணீர் வசதிகளுக்கு முன்னுரிமை, முக்கியத்துவம் அளித்தல். பாலியல் போதனைக்கு இடமளித்தல். ஆபாச பாவனைகளை அறவே ஒழித்தல். பிரத்தியேக வகுப்புக்களுக்குப் பெற்றோரைச் சம்பந்தப்படுத்தல். மருத்துவப் பரிசோதனையைச் செவ் வனவே நடத்துதல் (விளையாட்டுப் போட் டிக்கு முன்னதாக) கட்டாயக் கல்வி மற்றும் இடை விலகலைக் கண்காணித்தல் என் பனவும் முக்கியமான நடவடிக்கைகளாகும்.

**சிறுவர் பெண்கள் பாதுகாப்பு**

தனியான பொலிஸ் பிரிவு ஸ்தாபித்தல்.கிராம அலுவலர்களுக்குச் கூடிய அதிகாரமளித்தல். தீண்டுவோரையும், துஷ்பிரயோகம் செய்வோரையும் அதி கூடிய தண்டனைக்கு ஆளாக்குதல் அவர்களது வேலை வாய்ப்பை இரத்துச் செய்தல். பயணங்களின்போது, சிறுவர்களுக்கு உரிய நடைமுறைகளை மேம்படுத்தல். சிறுவர்களுக்கான ஓய்வு நேரம் பேணப்படுதல், சுகாதாரப் பயிற்சி அளித்தல். விதவைகளுக்கு வேலைவாய்ப்பளித்தல், ஓய்வூதிய திட்டத்துக்கு வழி சமைத்தல். நாடாளுமன்றில் பெண்களுக்கு 25சதவீதம் ஒதுக்குதல் (மாகாண சபைகள் உட்பட) தனியான நீதிமன்றம் அமைத்து வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துதல். தீர்ப்பு வழங்குதல். தாமதத்தைத் தவிர்த்தல். ஆபாசக் காட்சிகளின் சந்தைப்பிரியர்களுக்கு அதி உச்ச தண்ட னைக்கு வழி சமைத்தல். பண்பாட்டு உள வியலை நேர்த்தியாக நடைமுறைப்படுத்தல்.(நடை உடை பாவனை) மது, போதை, விபச்சாரம், களவு, கொள்ளை, கொலைகளுக்கான தண்டனைகளை காலம் தாழ்த்தாது அதி உச்சமாக வழங்குதல்என்பவைகட்டாயப்படுத்தப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசு தயாளன்



# பாடசாலை அதிபரும் சக்திமிகு பாடசாலை உருவாக்கமும்

பாடசாலையும் பாடசாலைச் செயன்முறையும், நியமங்கள் பலவற்றின் சேர்க்கையாகும். இத்தகைய நியமங்கள் பாடசாலை முகாமைத்துவத்தைச் செழுமைப்படுத்துவதாக உள்ளன. பாடசாலையின் முகாமைத்துவச் செயன்முறையானது, தெளிவான இலக்கைத் தீர்மானித்து, பொருத்தமான செயலொழுங்குகளூடாக நகர்ந்து செல்வதன் மூலம் சிறப்பான நிலையை அடைந்து கொள்ள முடியும். அத்தகைய சிறப்பான அடைவு நிலைகள் அந்தப் பாடசாலையைச் சக்திமிகு பாடசாலையாகச் சமூகத்துக்குக் காட்சிப்படுத்துவதாக இருக்கும்.

கற்றல் அபிவிருத்தி, பௌதிகவள அபிவிருத்தி, முகாமைத்துவத்திறன் விருத்தி, புதிய அபிவிருத்திக்கான முயற்சிகள், ஆசிரியர்அபிவிருத்தி, மாணவர் அபிவிருத்திச்சமூக இடைவினையுறவு என்பவற்றில் சிறப்பான ஆற்றுகை நிலையை வெளிப்படுத்தும் பாடசாலை சக்திமிகு பாடசாலை, யாகத் தோற்றம் பெறுகின்றது.

சக்திமிகு பாடசாலையானது, தனது அளவுக்கேற்ப தனக்குள்ளேயே அபிவிருத்திக்கானவாய்ப்புக்களைக் கொண்டதாக இருக்கும். இத்தகைய பாடசாலையானது, தனது இலக்கு நோக்கிய நகர்வுக்காகத் தொடர்ந்து முயற்சிப்பதாக இருக்கும். இந்தப் பாடசாலைக்கு சமூகத்தினது பங்குபற்றுதலும் ஆதரவும் அதிகமாகக் காணப்படும். சமூக அணி திரட்டலினூடாக அதுதனது வளர்ச்சிநிலையை வேகமாக நகர்த்திச் செல்வதாகவும் இருக்கும்.

இத்தகைய பாடசாலைகளில் கல்விச் செயன்முறையானது, முன்னோக்கியதாக இருக்கும். சக்திமிகு பாடசாலையின் அதிபரானவர், இணைப்பாக்கம், ஊக்குவிப்பு செயற்பாடு என்பவற்றினூடாக நிலைத்திருக்கும் நிலையை அடைவதற்கான விருப்புடையவராக இருப்பார். அதிபரானவர் கல்வியின் குறிக்கோளையும் இலக்கையும் தெரிந்தவராக இருக்க வேண்டியது அவசியமானதாகும். தனது செயன்முறை தொடர்பான விளக்கத்தைச் சமூகத்துக்கும், பெற்றோருக்கும், மாணவருக்கும் தெரியப்படுத்தக் கூடியவராக இருப்பது மிகவும் அவசியமானதாகும்.

அதிபரானவர், புதிய முறைகளையும், உத்திகளையும் கையாள்வதனூடாக பாடசாலையை முன்னேற்ற முனைய வேண்டும். சக்திமிகு பாடசாலையொன்றின் உருவாக்கமானது, பல்வேறு செயன்முறைகளூடாகப் பெற்றுக் கொள்ளப்படலாம். இங்கு பாடசாலையின் அதிபரானவர், தரிசன நோக்குடைய முதன்நிலை முகாமையாளராக விளங்குதல் மிக அவசியமானதாகும். தற்போது பாடசாலையில் காணப்படும் களநிலைமைகளைக் கற்றறிந்து பொருத்தமான முன்நோக்கிய நகர்வுகளை மேற்கொள்வதற்கு அவர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனடிப்படையில் இலக்குகளைத் திட்டமிடுபவராகவும், அதனை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளுடன் செயற்படுபவராகவும் விளங்குதல் வேண்டும். இதற்காக விமர்சனப் பாங்கான பகுப்பாய்வை மேற்கொள்ளும் திறன் இலக்கை அடைவதனூடாக எத்தகைய விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படும் என்பதோடு உயர்ந்த மட்டத்திலான இலக்குக் கண்காணிப்புச் செயன்முறைக்கும் அவர் தன்னைத்தயார்ப்படுத்துதலும் அவசியமானதாகும்.

பாடசாலை அதிபரானவர், பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவராவார். இதன் காரணமாக அவர் ஒரு பல்திறன் ஆற்றல் கொண்டவராக விளங்க வேண்டியது அவசியமாகும். பாடசாலையின் அதிபரானவர், அங்கு இடம்பெறும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் வகை கூறுபவராவார் என்பதோடு, தலைமைத்துவ வகிபாகத்தையும் ஆற்ற வேண்டியவராகவுள்ளார். அதிபர் தனது தலைமைத்துவ வகிபாகத்தினூடாகத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்துதல், கண்காணித்தல் ஆகிய கடமைகளை ஆற்றுதல் இன்றியமையாததாகவுள்ளது.

பாடசாலைத் திட்டமிடல் என்பது எதிர்காலத்தில் எத்தகைய நிலையை பாடசாலை அடைய வேண்டும் என்பதோடு, அதனை எவ்வாறு அடைந்து கொள்ள வேண்டும் என்பதாகவுமுள்ளது. பாடசாலையொன்றைப் பொறுத்தவரையில் திட்டமிடல் என்பது அவசியமானதாகும். பாடசாலைச் சமூகமானது செயற்பட வேண்டிய திசை ஒழுங்கைக் காட்டுவதாக இது உள்ளது. இந்தத் திட்டமிடலானது, கண்காணிப்பினூடாக அடைய எதிர்பார்க்கும் தரக் குறிகாட்டி தொடர்பிலும் கவனம் செலுத்துவதாயுள்ளது. திட்டமிடல், செயற்படுத்துதல் என்ற செயற்பாடுகள் இடம் பெற்ற போதிலும், அதனை தலைமை தாங்கி வழிநடத்த வேண்டிய பொறுப்பு மிக்கவராக அதிபர் விளங்குதல் அவசியமானதாகும். திட்டமிடலானது அதிபருக்கு எதனைச் செய்ய வேண்டும் எனக்கூறுவதாகவும், ஒழுங்கமைப்பானது, எப்படிச் செய்ய வேண்டும் என்பதை விளக்குவதாகவும், உள்ளது. தலைமை தாங்குதலானது, பாடசாலை ஆளணி அங்கத்தவர்கள் ஏன் அதைச் செய்வது அவசியமானது என்பதையும் உணர்த்துவதாகவுமுள்ளது.

சக்திமிகு பாடசாலையொன்றின் அதிபரானவர், பாடசாலைச் சமூகத்தினர் மீது எந்தச் சந்தர்ப்பத்திலும் தொடர்பு கொள்ளக் கூடிய திறனுடையவராகவும், விளைதிறன் மிக்க இணைப்பாக்கத் திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும். இதன்மூலமே பாடசாலையின்பால் அனைவரையும் அணிதிரட்ட முடியும். அதிபரானவர், தனித்துச் செயற்பட முடியாதுள்ள நிலையில், தன்னோடு இணைந்து பணியாற்றக் கூடிய அணியுருவாக்கத்தில் அதிக கவனம் செலுத்துதல் மிக அவசியமானதாகும். தெளிவான இலக்கை தனது அணிக்கு வெளிப்படுத்துபவராகவும் ஏனையோரால் அணுகக் கூடியவராகவும் இருத்தல், ஆசிரியர்களை சமூகத்தை தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் உள்வாங்கும் திறன் அடைவுநிலை சார்பான செயற் பாடுகளுக்கு ஆசிரியர்களை வழிப்படுத்துதல், பொருத்தமான தலைமைத்துவ வடிவங்களை தமது நிர்வாகச் செயன்முறையில் உட்படுத்தும் திறன் என்பவை அவரிடம் காணப்படுதல் அவசியமானதாகும்.

சக்திமிகு பாடசாலை உருவாக்கமானது பாடசாலை அதிபரின் செயன்முறையிலேயே தங்கியுள்ளது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இந்த உருவாக்கத்தில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவையாவன, சிறப்பான கலைத்திட்ட நடைமுறை, சிறந்த தரமான கற்பித்தல், வலிமையானதும் உயர் வாண்மைத்துவம் மிக்கதுமான பாடசாலைக் கலாசாரச் செயன்முறைகள், சிறப்பார்ந்த முகாமைத்துவச் செயன்முறைகள் என்றவாறாகவுள்ளன. இவற்றை உருவாக்கக் கூடியவகையில் பாடசாலை அதிபர் பின்வரும் திறன்களை உடையவராக விளங்குதல் வேண்டும்.

1.தூரநோக்கையும், பணிக்கூற்றையும் வடிவமைக்கும் திறன்.

2.அறிவுறுத்தல் தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய திறன்.

3. பல்வேறுபட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய திறன்.

4. பாடசாலைக் கலாசாரத்தையும், கவின் நிலையையும் புது வடிவமைப்புக்குள் கொண்டுவரக்கூடிய திறன்.

5. நேரான தொடர்புக் கோலத்தைக் கட்டியெழுப்பக் கூடிய இயல்பு.

6. புதிய எண்ணங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கக் கூடிய திறன்.


பாடசாலையானது, பிள்ளையின் திறன்களைத் தேர்ச்சிகளாக மாற்றுதல், பிள்ளையிடம் ஆக்கத்திறனைக் கட்டியெழுப்புதல், பாடசாலையில் நிகழும் கற்றலை மகிழ்ச்சிக்குரியதாக்குதல், பிள்ளையின் சிந்தனைத் திறன் விருத்திக்குப் பங்காற்றுதல் என்பவை தொடர்பில் சிறப்பார்ந்த செயற்பாடுகளைக் கொண்டதாக விளங்குதல் அவசியமானதாகும். சமூகத்துக்குச் சுமையற்ற, தனித்துவாழக் கூடிய சிறப்பார்ந்த ஆளுமைத் திறன் கொண்ட சமூக உறுப்பினரை உருவாக்குதல் என்பது இன்றைய காலத்தின் தேவையாகவுள்ள நிலையில், அதற்கான அடித்தளத்தை இடும் அமைப்பாகத் தன்னால் வழி நடத்தப்படும் பாடசாலை விளங்க வேண்டும் என்பது தொடர்பில் பாடசாலை அதிபரது பார்வைப் புலமும், சிந்தனா திறனும் வளர்க்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.



கட்டுரையாளர், அதிபர்
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானமே தெய்வம்!



மாலை என்னும் சிறுபொழுது, ஆறிலிருந்து பத்து மணி வரையான நேரம். அந்த மாலை நேரத்தில் ஒரு குன்றின் உச்சியில் அமர்ந்திருந்தார்கள் பசுமைப் பாடசாலையின் குழந்தைகள். கடைசிப் பாடமாக வானம் பற்றிய பாடம். அப்போது அவர்களுடைய தலைக்கு மேலே பறந்த பறவைகள் கூட்டத்தைக் கண்டு குதூகலமாகிப் பாடினார்கள்.

மடையான் மடையான் பூப்போடு...
மடைக்கு ரெண்டு பூப்போடு...

பறவைக் கூட்டம் தம்மைக் கடந்தவுடன் தங்கள் நகங்களில் ஏதும் வெள்ளைத் திட்டுக்கள் இருக் கின்றனவா எனப் பார்த்தார்கள். ஐயோ... மடையான் எனக்குப் பூப்போட்டது எனக் குதித்தான் விழியன்.

அப்போது, "குழந்தைகளே! மடையான் பூப்போடுவது என்பது, அது எச்சமிடுவதைக் குறிக்கும். வானில் பறக்கும் பறவைகள் எச்சமிட்டால் அது வயலுக்கு உரம். வானத்தால் எவ்வளவு நன்மை பார்த்தீர்களா?" என்றவாறு குழந்தைகளுக்கு அருகில் வந்தது மேகம் எனும் முகில்.

முகிலுக்கு வணக்கம் சொன்ன விழியன், "வெண்மை யாக இருக்கும் நீ அங்கு மட்டும் எப்படிச் செவ்வானமா கக் காட்சியளிக்கிறாய்?'' என்று தொலைவில் சுட்டிக்காட்டினான். அங்கு நகரத்துக்கு மேல் வானம் செந்நிறத்தில் காட்சியளித்தது.

"அது செவ்வானம் இல்லை. மாசுப் படலம். உலகின் சில பெரிய நகரங்களில் இரவில்கூட வானம் இப்படிச் செந்நிறத்தில் காட்சியளிக்கிறது. அந்த அளவுக்கு வானத்தை மாசுபடுத்தி விட்டார்கள்."

இரவிலும் செந்நிற வானம் என்கிற தகவல் குழந் தைகளுக்கு வியப்பை அளித்தது. அப்போது சரியாக நகரம் விளக்கொளியில் ஒளிரத் தொடங்கியது.

''மின்சாரம் இல்லாத இரவை இனி உங்களால் கற்பனைச் செய்துகூடப் பார்க்க முடியாது. ஆனால், மின்சாரத்தை உருவாக்க, நிலத் தடி யில் உள்ள கார்பனைக் கொண்ட கரிமப் பொருள்களான பெற்றோலியம், நிலக்கரி முதலியவற்றைத் தோண்டி எடுப்பதால் பசுங்குடில் வளிகள் (வாயுக்கள்) வெளியாகி, வளிமண்டலத்தில் என்ன நடந்திருக்கிறது தெரியுமா?" என்று கேட்டது முகில்.

"தெரியுமே, ஓசோன் படலம் மெலிந்து விட்டது."

"ஆம், புவி வெப்பமடைவதற்கு அளவுக்கதிக மான இந்தக் கரிம வெளியேற்றமே காரணம். இதனால் வானத்துக்கு மட்டும் தீங்கில்லை. வானம் தனது வளிமண்டலத்தால் புவியை ஒரு போர்வையைப் போல் மூடிப் பாதுகாத்து வருகிறது. எனவே, வானம் கெட்டால் புவி தான் முதலில் கெடும்."

"ஆனால், மின்சாரமும் தொழிற்சாலைகளும் அவசியம்தானே?" என்றான் விழியன்.

"அவசியம்தான். ஆனால், பெற்றோலும் நிலக்கரியும் தீர்ந்துவிட்டபிறகு என்ன செய்வீர்கள்? மாற்றுவழி கண்டுப்பிடித் துத்தானே ஆகவேண்டும்? அந்த வழியை இப்போதே கண்டுபிடியுங்கள். புவியைப் பாதிக்காதவகையில் அதைக் கண்டுபிடி யுங்கள். உயிரினங்களிலேயே அதிக அறிவாற்றல் மனிதருக்குத்தான் எனப் பெருமைப்படும் நீங்கள், அந்த அறிவுத்திறனை இதில் காட்டலாமே!"

"நாங்கள் பெரியவர்களானதும் கட்டாயம் இதைச் செய்வோம்" என்றனர் குழந்தைகள்.

"உடனடியாகப் பெரியவர்களுக்கும் நினைவூட்டுங்கள். மனிதர்கள் வாழ இந்த ஒரு புவிக்கோளம் மட்டும்தான் இருக்கிறது" என்றது முகில்.

''மிகச் சரி. நாம் அனைவருமே என்றும் இதை நினைவில் வைத்துக்கொள்வோம்!'"

குழந்தைகளே! இத்துடன் பசுமைப் பாடசாலையின் வகுப்புகள் முடிவடைகின்றன. உங்களுக்கு விடுமுறை ஆரம்பமாகப் போகிறதல்லவா? அதேபோல பசுமைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் விடுதலை விட்டா யிற்று.

## பட்டணம் போன பூனை



"பட்டணம் போன பூனையாரே
பார்த்து வந்த காட்சியென்ன?"
"ஏழுநிலைமாடிகளில்
எதற்குமே கூரையில்லை
வாழுமெலி ஒன்றில்லை
வயிறொட்டி வந்தேனையா
அடுக்களையிற் பாலில்லை
அங்கங்கே போத்தலிலே
அடைத்திருப்பார் நக்கவுமோர்
அரைச் சொட்டுக் கிடைக்கவில்லை
சட்டியிலே மீனில்லை
சாத்தி வைப்பார் குளிரூட்டும்
பெட்டியிலே பிறகென்ன
பிடிக்கவில்லை பட்டணந்தான்
அரணாகக் கோட்டைகளாம்
அதற்குள்ளே விசிறிகளாம்
பரணொன்று கிடைக்கவில்லை
பாழ்பட்ட பட்டணத்தில்
பையன்களும் துரத்துகிறார்
பட்டணத்தில் இருந்து
பையவே ஓடி வந்தேன்
படுத்திருந்த பரணுக்கே"

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....







## வரலாற்றில் இன்றைய தினம்

1866 - சிலி வல்பறைஸோ துறைமுகத்தின் மீது, ஸ்பானிஷ் கடற்படை குண்டு வீசித் தாக்குதல்

1889 - ஈபிள்கோபுரம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

1909 - பொஸ்னியா மற்றும் ஹெஷெகோவினா மீதான ஒஸ்ரியாவின் கட்டுப்பாட்டை சேர்பியா ஏற்றுக்கொண்டது.

1909 - டைட்டானிக் கப்பலைக் கட்டும் பணி தொடங்கப்பட்டது.

1917 - டானிஷ் மேற்கு இந்தியாவை 25 மில்லியன் டொலர் கொடுத்து டென்மார்க்கிடமிருந்து அமெரிக்கா கொள்வனவு செய்து, ஐக்கிய அமெரிக்க வேர்ஜின் தீவு என அதற்குப் பெயரிட்டது.

1918 - ஆஸ்திரேலியா றோயல் விமானப் படை உருவாக்கப்பட்டது.

1930 - அடுத்துவரும் 30 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகுமாறு சலனப்படங்களில் பாலியல் குற்றச் செயல், மதம் மற்றும் வன்செயல்கள் இடம்பெறுவதை கட்டுப்படுத்தும் கடுமையான வழிகாட்டல்கள் கொண்ட சலனப்படம் தயாரிப்பு நெறிமுறை நிறுவனமயப்படுத்தப்பட்டது.

1931 - மனகுவா நிக்காரகுவாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2,000 பேர்வரை சாவு.

1942 - இரண்டாம் உலக மகாயுத்தம். ஜப்பானிய படைகள் கிறிஸ்மஸ் தீவினுள் புகுந்தன. பின்னர் அது பிரிட்டிஷ் வசமானது.

1959 - 14ஆவது தலாய்லாமா எல்லை கடந்து இந்தியாவுக்குச் சென்றார். அங்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டது.

1970 - விண்சுற்றுப் பாதையில் 12 ஆண்டுகள் கழித்தபின் எக்ஸ்புளோறர் -1, புவிக்குத் திரும்பியது.

1985 - டபிள்யூ. டபிள்யூ. ஈயின் பிரமாண்டமான மல்யுத்த நிகழ்வு 'றெஸ்ரில் மேனியா' நியூயோர்க் மடிசன் சதுக்க பூங்காவில் முதன்முதலாக நடைபெற்றது.

1991 - சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கு ஜோர்ஜியாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் 99 சதவீதத்தினர் சுதந்திரத்துக்குச் சார்பாக வாக்களித்தனர்.

1995 - மோதல் தவிர்ப்பு, நடைமுறையில் இருந்த நிலையில் மண்டூரில் பொலிஸார் போராளி ஒருவரைத் தாக்கியதில் அவர் வீரச்சாவு.

1995 - அடுத்த கட்டப் பேச்சின்போது அரசியல் தீர்வு குறித்தும் பேசப்படும் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றான்

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

இறைவன் என்ற சொல் இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். இனி எல்லாம் அவனிடத்தில் இருக்க, அவன் அவைகளுக்கெல்லாம் உறைவிடமாக இருக்கிறான். இது இறைவனுடைய விள்)வரூபம். எல்லாப் பொருள்களிலும் தங்க வேண்டுமானால் சிறிய, மிகச்சிறிய பொருளாக இருக்கின்றான். மேருகிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலே தங்கும்படி அந்தப் பெருமான் மிகப் பெரிய பொருளாக விளங்குகின்றார். அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் விளங்குபவன் இறைவன். இது பற்றி ஒரு பழங்கதை உண்டு.



திருக்கைலாய மலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். விநாயகப் பெருமானும், முருகப் பெருமானும் தாய், தந்தையரை வணங்கி வழிபடும் பொருட்டுச் சென்றார்கள்.

முன்னைய காலத்தில் மைந்தர்கள் தந்தை, தாயாரைத் தினம்தோறும் வழிபடுகின்ற வழக்கம் இருந்தது. வைகறை யாமம் துயில் எழுந்து, தான் செய்யும் நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில் தந்தையும் தாயும் தொழுது எழுத என்பதே முந்தையோர் கண்டமுறை என்று ஆசாரக் கோவை கூறுகின்றது. முருகப்பெருமான் மயில் மீதேறி அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வந்தார். எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம் என்று கூறி யதை மதியால் சிந்தித்து, ஆனைமுக அண்ணல் அம்மையப்பரை வலமாக வந்து கனியை பெற்றார்.

> விறகிலே நெருப்பு இருக்கின்றது, பாலிலே நெய் இருக்கின்றது. ஆனால் கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லையே! விறகிலே தீயும், பாலில் நெய்யும் கண்ணுக்குத் தெரியாமையால் அவை இல்லையென்றால் எமக்கு அறிவு இல்லையென்று உலகம் சிரிக்காதா?

இந்தப் பழைய கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்துகின்றது. தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.

எல்லா உலகங்களையும் சர்வவல்லமையுடைய வல்லமை விநாயகரால் வலம் வர இயலாதா?. இயலும்.

சிவபெருமான் இருமைந்தர்களும் கனி கேட்ட பொழுது, உள்ள கனியை உடைத்துப் பகிர்ந்து தரக் கூடாதா?

அல்லது ஒரு புதிய கனியை உண்டாக்கித் தரக் கூடாதா?

வீதியில் விளையாடுகின்றவன்கூட ஏதேதோ பொருளைத் தருவிக்கின்றானே, தம்பிக்கே தந்து விடுங்கள், எனக்கு வேண்டாம் என்று விட்டுக் கொடுக்கின்ற குணம் விநாயகரிடம் இல்லையா? அப்பா!, அண்ணாவுக்கே கொடுங்கள், நான் பிறகு வாங்கிக்கொள்கிறேன் என்று ஒதுங்கிப் போகின்ற தியாகபுத்தி, வேலவன்பால் இல்லையா? ஒரு சிறிய கனி காரணமாக உலகத்தை வலம் வந்தால் கூலி கிடைக்குமா? பழம் காரணமாக திருக்கைலாய மலையில் முருகனும் விநாயகரும் போட்டியிடலாமா? பழத்தின்மீது ஞானமே வடிவான விநாயகருக்கும், ஞான பண்டிதனுக்கும் அத்தனை ஆசையா? என்ற வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன. இத்தனை வினாக்களுக்கும் உரிய விடையைக் காணுகின்றபோது, இறைவனைப் பற்றி நாம் முன்னர் என்ன சிந்தித்தோம், எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கி இருக்கிறான், அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன என்று இருவிதமாக நினைத்தோம் அல்லவா? இவற்றுள் எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி. எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைப் பார்த்தார் முருகன். இந்தப் பெரிய அரிய உண்மையை உணர்த்துகின்றது அந்தப் பழைய கதை. இறைவன் எங்கும் நீக்கமற்று நிறைந்திருக்கிறானோ? உலக மாயை அவனைப் பற்றாதோ? என்ற வினா எழும்.

உப்பு விளைகின்ற இடம் கடல். கடலில் உவர் நீரில் பிறந்து, உவர் நீரைப் பருகி, உவர் நீரில் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. மீன் உண்போர் கடல் மீனுக்கும் உப்பிட்டுத்தான் சமைத்து உண்பார்கள். அது போல், இறைவன் யாண்டும் உறைகினும், உலக மாயை அவனைப் பற்றாதென உணர்க. எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால், ஏன் அது எமது கண்ணுக்குத் தெரியவில்லை? என்பாரும் உளர். விறகிலே நெருப்பு இருக்கின்றது, பாலிலே நெய் இருக்கின்றது. ஆனால் கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லையே! விறகிலே தீயும், பாலில் நெய்யும் கண்ணுக்குத் தெரியாமையால் அவை இல்லையென்றால் எமக்கு அறிவு இல்லையென்று உலகம் சிரிக்காதா?

விறகை எரித்தால் தீ வெளிப்படும், பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும். அது போல, தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும் மூவரும் காண மாட்டாத சிவம் தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கையை உதாசீனம் செய்ததா பெல்ஜியம்

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் இடம்பெற்ற தாக்குதல்களில், விமான நிலையத்தில் தாக்குதல்களை மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் சகோதரர்களில் ஒருவர் தொடர்பாக, தங்களால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையை, பெல்ஜியம் உதாசீனம் செய்ததாக, துருக்கி அறிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபரைத் தடுத்து வைத்து, அவரை நாட்டிலிருந்து வெளியேற்றியதாகத் தெரிவித்துள்ள துருக்கி, அவர் ஒரு "வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளி" என்ற எச்சரிக்கையையே விடுத்ததாகத் தெரிவித்துள்ளது.

பிரஸல்ஸில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் முதலாவது தாக்குதல், விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது. அங்கு தற்கொலைத் தாக்குதலே மேற்கொள்ளப்பட்ட நிலையில், அதை மேற்கொண்டவர்கள், நஜிம் லாச்ரோவோய், பிராஹிம் எல்-பக்ரோவோய் என இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள துருக்கிய ஜனாதிபதி றெசெப் தய்யிப் ஏர்டோகன், துருக்கியின் அதிகாரிகள், பிராஹிம் எல்-பக்ரோவோயை, சிரிய எல்லைக்கு அருகில் கடந்தாண்டு தடுத்து வைத்திருந்ததாகவும், பின்னர் அவரது கோரிக்கையின் பேரில், அவரை நெதர்லாந்துக்கு நாடு கடத்தியதாகவும் தெரிவித்துள்ளார். அவர் நாடு கடத்தப்பட்டமை தொடர்பாக, அங்காரகாவிலுள்ள பெல்ஜியத் தூதரகத்துக்கு, கடந்த ஆண்டு ஜூலை 14 ஆம் திகதியன்று அறிவித்தோம். ஆனால், அதன் பின்னர் அவர் சுதந்திரமாக விடுவிக்கப்பட்டார். குறித்த நபர், வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளி என்ற எங்களது எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும், பயங்கரவாதம் தொடர்பான அவரது தொடர்பை, பெல்ஜிய அதிகாரிகளால் கண்டு பிடித்திருக்க முடியவில்லை எனத் தெரிவித்தார்.

அவரது கருத்தின்போது, நெதர்லாந்துக்கு நாடு கடத்தப்பட்ட குறித்த நபர், எவ்வாறு பெல்ஜியத்துக்கு அனுப்பப்பட்டார் என்பது தொடர்பான விவரங்களை அவர் வெளியிட்டிருக்கவில்லை. முன்னர் வெளியிடப்பட்ட தகவல்களின்படி, பிராஹிம் எல்-பக்ரோவோயின் சகோதரரே, வெளியிடப்பட்ட புகைப்படத்தில் காணப்படும் நபர் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பிராஹிம்மின் சகோதரரான காலிட் எல்-பக்ரோவோய், மெட்ரோ ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை மேற்கொண்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெளியிடப்பட்ட புகைப்படத்தில் காணப்படும் மூன்றாவது நபரான, வெள்ளை அங்கி அணிந்தவர், கைது செய்யப்பட்டிருக்கலாம் என நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட போதிலும், அவர் இன்னமும் கைது செய்யப்படவில்லை எனவும், கைது செய்யப்பட்டவர் வேறொருவர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களில், குறைந்தது 34 பேர் உயிரிழந்ததோடு, 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போது மேற்கு நாடுகள் பெரும் அச்சத்தில் மூழ்கிப்போயுள்ளன. ஐ.எஸ். தீவிரவாதிகளின் அதிரடித் தாக்குதல்களே இதற்குக் காரணம்.

உலகுக்குப் பெரும் அச்சுறுத்தலான சக்தியொன்றாக ஐ.எஸ் அமைப்பு இப்போது உருவெடுத்துள்ளது. இது விடயத்தில் உலக நாடுகளின் போக்கு இனி எப்படி அமையப் போகின்றது என்பது அடுத்துள்ள எதிர்பார்ப்பு.









**நகைச்சுவை மட்டும்**

''கல்யாணம் செஞ்சா உன்னைத்தான் கல்யாணம் செய்வேன்...!''
''அது நடக்கலேன்னா?''
''என் மனைவியோட காலத்த ஓட்ட வேண்டியது தான்...!''

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | | | 1 | 5 |
| | | 5 | 7 | | | | 3 | |
| | 2 | | | | 8 | 7 | | |
| 2 | | | | 4 | | 6 | 5 | |
| | | 6 | 9 | 8 | | | | 4 |
| | | | | | 6 | | 8 | |
| | | 3 | | | 1 | | | 9 |
| | 6 | 2 | | | | | | |
| | | | 8 | 2 | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 9 | 8 | 6 | 2 | 1 | 7 | 4 |
| 2 | 8 | 6 | 7 | 1 | 4 | 5 | 3 | 9 |
| 1 | 4 | 7 | 9 | 3 | 5 | 2 | 8 | 6 |
| 8 | 1 | 2 | 4 | 9 | 6 | 7 | 5 | 3 |
| 5 | 7 | 4 | 1 | 8 | 3 | 9 | 6 | 2 |
| 6 | 9 | 3 | 2 | 5 | 7 | 4 | 1 | 8 |
| 4 | 6 | 5 | 3 | 7 | 9 | 8 | 2 | 1 |
| 9 | 3 | 1 | 5 | 2 | 8 | 6 | 4 | 7 |
| 7 | 2 | 8 | 6 | 4 | 1 | 3 | 9 | 5 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவேநிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில்ஏனையவற்றைநிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

அமெரிக்கர்கள் பூமிக்குக் கீழே தோண்டிக்கொண்டு போனார்கள். 500 அடி ஆழத்தில் மின்சார வயர்கள் கிடைத்தன. உடனே அவர்கள் அறிவித்தார்கள், “எங்களது முன்னோர்கள் மின்சாரத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பயன்படுத்தி உள்ளார்கள்.”

இதைப்பார்த்த ரஷ்யர்கள், பூமிக்குக் கீழே தோண்ட ஆரம்பித்தனர். 500 அடி ஆழத்தில் ரெலிபோன் கேபிள்கள் கிடைத்தன.

அவர்கள் சொன்னார்கள்,

“எங்களது முன்னோர்கள் அந்தக் காலத்திலேயே ரெலிபோனை பயன்படுத்தியுள்ளார்கள்” என.

பொறுத்துப்பார்த்த இலங்கையர்களும் தோண்டினார்கள். 1000 அடி தாண்டியும் ஒன்றும் கிடைக்கவில்லை.

உடனே அறிவித்தார்கள்;

“எங்களது முன்னோர்கள் அந்தக் காலத்திலேயே வயர்லெஸ் (கேபிள்கள் அற்ற) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளார்கள்” – என்று.

# மீண்டும் தேசிய விருது

இந்தியாவின் மிகச்சிறந்த திரைப்படங்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான தேசிய திரைப்பட விருதுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் பிரமாண்டமாக வெளிவந்து வெற்றிநடை போட்ட “பாகுபலி” படம் சிறந்த திரைப்படத்துக்கான தேசிய விருதுக்குத் தெரிவாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அறிவிக்கப்பட்ட 63 ஆவது தேசிய திரைப்பட விருதுகளில் ‘விசாரணை’ படத்துக்கு 3 விருதுகளும், இளையராஜாவுக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் வெளியான “விசாரணை” சிறந்த தமிழ்ப் படத்துக்கான விருதைப் வென்றுள்ளது. அண்மையில் மறைந்த கிஷோருக்கு சிறந்த எடிட்டிங்குக்கான விருதும், சிறந்த உறு துணை நடிகருக்கான விருது சமுத்திரக்கனிக்கும் கிடைத்துள்ளன.

சிறந்த பின்னணி இசைக்கான விருது “தாரை தப்பட்டை” படத்துக்கு இளையராஜாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இளையராஜா இசையமைத்த இசையில் உருவான 1000 ஆவது படம் “தாரை தப்பட்டை” என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் சிறப்பு தேசிய விருது இறுதிச்சுற்று படத்தில் நடித்த ரித்திகாசிங்குக்கும் வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாதோழி® Retweeted
பரட்டை @iamparattai

இளைய தலைமுறையிடம் நவீனத்தையும், பழைய தலைமுறையிடம் அனுபவத்தையும் கேட்டுத் தெரிந்து கொள்வதில் வெட்கமோ? தவறோ இல்லை...!

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சுய கௌரவத்தைப் பாதுகாக்க முயல்வீர்கள். தொழிலில், மீதமிருந்த பணியை நிறைவேற்றுவீர்கள். வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள், நகை, பணத்தை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**இடபம்:** லட்சியங்களை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் முன்னேற, கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**மிதுனம்:** மன உறுதியுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில் அபிவிருத்திக்கான, பண வசதி கிடைக்கும். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**கடகம்:** நண்பரின் உதவியால், நன்மை பெறுவீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை, அதிகரிக்கும். ஆதாயம் பெருகும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** பொறுமை இருந்தால், நற்பெயரைப் பாதுகாக்கலாம். தொழிலில், கூடுதல் நேரம் பணிபுரிய வேண்டியிருக்கும். பணவரவு சுமாராக இருக்கும். சீரான ஓய்வு, உடல் நலத்துக்குத் துணை நிற்கும்.

**கன்னி:** மாறுபட்ட சூழலைச் சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** திட்டமிட்ட பணியை, ஆர்வத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழிலில், வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். உபரி பண வருமானம் கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** பொது இடங்களில் நிதானத்துடன் பேசவும். தொழில், வியாபார நடைமுறை, தாமத கதியில் இயங்கும். இலாபம் சுமார். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல் நலனில் கவனம் தேவை.

**தனுசு:** சவால்களை திறமையுடன் எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், அக்கறை செலுத்துவீர்கள். இலாபம் படிப்படியாக உயரும். புத்திரரின் நற்செயல், மனதை மகிழ்விக்கும்.


**கும்பம்:** உறவினர்களின் உதவி கிடைக்கும். முக்கிய பணி ஒன்றை நிறைவேற்றுவீர்கள். தொழிலில், விற்பனை அதிகரிக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு இடம்பெறும்.


**மீனம்:** மதி நுட்பத்துடன் பணி புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள வருமானம் கிடைக்கும். பெண்களின் நீண்டநாள் விருப்பம் நிறைவேறும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 600 |
| நண்டு | 200 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 400 | 500 | 500 | 600 | 500 | 500 | 430 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 500 | – | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 450 | 500 | 400 |
| விளை | 500 | 350 | 400 | 500 | 450 | 500 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | 350 |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 150 | 300 |
| நகரை | 150 | 250 | – | 300 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 250 | 200 | 130 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | 250 | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 300 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | 400 | – |



## குஜராத் ஆபரணங்கள்

குஜராத் ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. வட இந்திய வடிவமைப்பில், புராதன வடிவமைப்புள்ள நகைகள் தற்போதைய நாகரிகமாகும். கனதியான பகட்டான நகைகள் 6,000 ரூபாவில் இருந்து 30,000 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளை வாங்கும்போது...

- தேங்காயைக் காதருகே வைத்துத் தட்டிப் பார்ப்பது போல, மாங்காயையும் தட்டிப் பார்க்கவும். சத்தம் வரும். அத்தகைய மாங்காயில் கொட்டை சிறிதாக இருக்கும்.
- பீர்க்கங்காய் ( நார்ச்சத்து உள்ள மிக நல்ல காய் இது.) அடிப் பகுதி குண்டாக இல்லாமல் காய் முழுதும் ஒரே அளவில் இருக்குமாறு பார்த்து வாங்குவது நல்லது.
- பரங்கிக்காய்: கொட்டைகள் முற்றியதாக வாங்கவும்.
- புடலங்காய் : கெட்டியாக வாங்கவும். அப்போதுதான் விதைப்பகுதி குறைவாகவும், சதை பகுதி அதிகமாகவும் இருக்கும்.
- உருளைக்கிழங்கு: முளை விடாமல், பச்சை நரம்பு ஓடாமல், கீறினாலே தோல் உதிர்ந்து பெயர்ந்து வர வேண்டும்.
- கருணைக்கிழங்கு: முழுதாக வாங்கும்போது பெரியதாகப் பார்த்து வாங்குவது நல்லது. வெட்டிய கிழங்கை வாங்கினால், உள்புறம் இளம் சிவப்பு நிறத்தில் இருக்குமாறு பார்த்து வாங்கவும்.
- பெரிய வெங்காயம்: மேற் (குடுமி) பகுதியில் தண்டு பெரிதாக இல்லாமல் பார்த்து வாங்கவும்.

## நாளை

பங்குனி -19
வெள்ளிக்கிழமை 01.04.2016
திதி: நவமி பி.இ.04.06 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப.10.10 வரை
ராகுகாலம்: 10.41-12.11 வரை
சுபநேரம்: 06.11-07.41 வரை



# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 50 | 40 | 30 | 40 | 25 | 30 |
| கத்தரி | 60 | 60 | 70 | 60 | 60 | 120 | 40 | 70 |
| கரட் | 80 | 100 | 80–160 | 100 | 80 | 200 | 80 | 170 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 60 | 50 | 80 | 70 | 60 | 120 | 30 | 60 |
| பாகல் | 100 | 100 | 100 | 120 | 100 | 160 | 110 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 50 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 80 | 80 | 70 | 80 | 65 | 60 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 40 | 60 | 20 | 20 |
| தக்காளி | 40 | 30 | 30 | 40 | 30 | 80 | 25 | 30 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 30 | 40 | 60 | 35 | 40 |
| கீரை | 30 | 50 | 30 | 20 | 30 | 40 | 20 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 100 | 100 | 80 | 120 | 80 | 80 |
| புடோல் | 40 | 60 | 50 | 50 | 60 | 60 | 30 | 40 |
| கோவா | 40 | 60 | 50 | 80 | 50 | 80 | 90 | 60 |
| வெண்டி | 50 | 80 | 50 | 160 | 80 | 60 | 60 | 60 |
| போஞ்சி | 140 | 100 | 120 | 160 | 100 | 120 | 70 | 130 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 150 | 120 | 160 | 75 | 120 |
| தேங்காய் | 40 | 38 | 50 | 35–40 | 40 | 30 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 120 | 70 | 80 | 65 | 120 |
| தேசிக்காய் | 100 | 160 | 120 | 120 | 180 | 160 | 120 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 120 | 100 | 160 | 50 | 100 |
| இராசவள்ளி | 150 | 150 | 130 | 160 | 120 | – | 110 | 70 |
| முருங்கைக்காய் | 600 | 350 | 500 | 400 | 600 | – | 350 | 300 |
| பனங்கிழங்கு | 05 | 0.25 | – | – | 05 | [illegible] | – | – |

## தேவையானவை:

பூசணிக்காய் - 2 கிலோ
சீனி - 2 கிலோ
படிகாரம் - 40 கிராம்
ரோஸ் வாட்டர் - 2 தேக்கரண்டி

## செய்முறை:

- பூசணிக்காயை நீளமான துண்டுகளாக வெட்டி உள்ளிருக்கும் விதை நாறை அகற்றவும்.
- பின்னர் தோலைச் சீவி சாப்பிடப் போதுமான அளவு மிட்டாய் வடிவத் துண்களாக நறுக்கிக்கொள்ளவும்.
- ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் விட்டு அதில் படிகாரத்தைத் தூளாக்கிப் போடவும்.
- பின்னர் அதில் பூசணித் துண்டுகளைப் போட்டு அடுப்பிலேற்றி வேக வைக்கவும்.
- வெந்த பின்னர் பூசணித் துண்டுகளை தண்ணீர் விட்டு நன்கு கழுவவும்.
- அதன்பின்னர் சீனிப் பாகு காய்ச்சி அதில் கழுவிய பூசணித்துண்டுகளைப் போடவும்.
- பின்னர் மீண்டும் அடுப்பில் வைத்து பாகு கெட்டியானதும் இறக்கி ரோஸ் வாட்டர் தெளிக்கவும்.
- குழந்தை களுக்குப் பிடித்த சுவையான பூசணி மிட்டாய் இப்போது தயார்.



## பூசணி மிட்டாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் காட்சியறையை திறந்து வைத்துள்ளது ஹூவாவி



இலங்கையில் மிக விரைவாக வளர்ச்சிகண்டு வருகின்ற ஸ்மார்ட் போன் வர்த்தகநாமமான ஹூவாவி, கொழும்பு நகரின் மையத்தில், மஜெஸ்டிக் சிட்டி கட்டடத்தின் 2 ஆவது மாடியில், தனது புதிய அனுபவ காட்சியறையொன்றை திறந்து வைத்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது. இது நாட்டின் மீதான அதன் அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டையும் காண்பிக்கின்றது. ஹூவாவி சிறிலங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரியான இன்லி வாங், ஹூவாவி டிவைஸ் சிறிலங்காவின் வதிவிட தலைமை அதிகாரியான ஹென்றி லியூ மற்றும் சிங்கர் சிறிலங்கா பீஎல்சி நிறுவனத்தின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து இந்த அனுபவக் காட்சியறையை திறந்து வைத்துள்ளனர்.

இந்த புதிய அனுபவக் காட்சியறையில் ஹூவாவி வழங்கும் அனைத்துப் புதிய தொழில்நுட்பங்களும் இடம்பெற்றுள்ளன. ஈடுஇணையற்ற விலைப் பெறுமதி, அதியுயர் தரம் மற்றும் சிங்கர் சிறிலங்கா பீஎல்சி வழங்கும் விற்பனைக்குப் பின்னரான அதி சிறந்த சேவை ஆகியவற்றுடன், தமது கனவு ஹூவாவி ஸ்மார்ட் போன் மற்றும் சாதனங்களை ஹூவாவி வாடிக்கையாளர்கள் இங்கு நேரடியாக அனுபவித்து, அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு மிகச் சிறந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இலங்கையில் 19 ஹூவாவி முகவர் வலையமைப்புக்களும், சேவை மையங் களும் உள்ள நிலையில் இந்தப் புதிய அனுபவக் காட்சியறையின் மூலம், நிறுவனம் உள்நாட்டில் தனது விநியோக மற்றும் அடைவு மார்க்கங்களை இன்னும் ஆழமாக விஸ்தரிக்க உதவும். மேலும், உள் நாட்டுச் சந்தையில் 2014 ஆம் ஆண்டு 200 வீதத்தினாலும், 2015 முதல் அரையாண்டில் 300 வீதத்துக்கு அதிகமாகவும் சாதனை மிக்க வகையில் விற்பனையில் வளர்ச்சி கண்டுள்ளதாகவும் நிறு வனம் அறிவித்துள்ளது.

அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் தொடர்பில் ஹூவாவி டிவைஸ் வதிவிட தலைமை அதிகாரியான ஹென்றி லியூ கருத்துத் தெரிவிக்கையில்; 2016 நிதியாண்டின் 4 ஆவது காலாண்டின் முடிவில் எமது ஒட்டுமொத்த சந்தைப் பங்கை 30 வீதமாக அதிகரிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இலங்கை மீது நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டைக் கொண்டுள்ளதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு நம்ப முடியாத விலைகளில் நவீன தொழில்நுட்ப மேம்பாடுகளைக் கிடைக்கச் செய்து, மிகச் சிறந்த தரத்திலான சேவையை வழங்க வேண்டும் என்ற எமது நோக்கத்தை ஹூவாவி அனுபவக் காட்சியறையை கொழும்பில் திறந்து வைத்துள்ளமை தெளிவாகப் புலப்படுத்துகின்றது–என்றார்.

(கு)

## வணிகம்






## யாழ்ப்பாணத்தில் ஒப்போ மொபைல்

ஒப்போ கையடக்கத் தொலைபேசிகளின் அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது. ஜே.ஏ.ரி ரெக்னொ லொஜிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அறிமுக நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் கையடக்கத் தொலைபேசி வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் பலர் பங்கேற்றனர். ஒப்போ கையடக்கத் தொலைபேசிகளின் பல மொடல்கள் இதன்போது அறிமுகம் செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியைக்

வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

எனினும் குறித்த இழப்பீட்டை ஏற்கப் போவதில்லை என்று பாதிக்கப்பட்ட மாணவி தரப்பினர் தெரிவித்துள்ளதோடு, சித்தி விநாயகம்தான் குற்றவாளி என்பது நிரூபிக்கப்பட்டுச் சமூகத்துக்குத் தெரியப் படுத்த வேண்டும் என்பதே நோக்காக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் மூன்றாவது தடவையாக நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

2009 ஆம் ஆண்டு நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பதின்ம வயதுச் சிறுமி மாலை கட்டுவதற்குப் பூ எடுப்பதற்காக சென்றபோதே, வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். வயிராவத்தை தோட்டம் கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா சித்திவிநாயகம் என்பவரே வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த சிறுமியான மாணவிக்குக் கட்டாயப்படுத்தி பிளாஸ்ரிக் கோப்பை ஒன்றினுள் மயக்க மருந்து கலந்த மென்பானம் வழங்கிக் குடிக்குமாறு வற்புறுத்தியுள்ளார். அதனைக் குடித்த பின்னரும் சுமார் அரைமணி நேரமாக சிறுமியை வீடு செல்லவிடாது கதைத்துக்கொண்டிருந்த நிலையில், சிறுமி மயங்கியபோது, சிறுமியின் கையைச் சித்திவிநாயகம் பிடித்துள்ளார்.

அதன் பின்னர் என்ன நடந்தது என்பது சிறுமிக்குத் தெரியவில்லை. சில மணி நேரம்சென்ற பின்னர் மயக்கம் தெளிந்த சிறுமி, தனது ஆடைகள் நீக்கப்பட்டதோடு, காயங்களுடன் இரத்தக் கறைகளும் காணப்பட்டுள்ளதைக் கண்டுள்ளார்.

இதனால் அச்சமடைந்த சிறுமி, சித்தி விநாயகத்திடம் சென்று, கையைப் பிடித்திருந்தீர்கள், அதன் பின்னர் தனக்கு என்ன நடந்தது என்று கேட்டுள்ளார். அதனால் சிறுமியின் கழுத்தைப் பிடித்த நெரித்த சித்திவிநாயகம், நடந்த சம்பவம் பற்றி வீட்டுக்குக் கூறினால் வீட்டிலுள்ள அனைவரையும் கொன்று விடுவேன் என்றும் அச்சுறுத்தியுள்ளார்.

பின்னர் சிறுமி பாடசாலை சென்றுவந்த நிலையில், சிறுமியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த ஆசிரியர் ஒருவர், அவரின் தாயைப் பாடசாலைக்கு அழைத்து மகளின் உடல் மாற்றம் பற்றிக்கூறி, மருத்துவரைச் சந்திக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். ஏற்கனவே சிறுமிக்கு மண்ணீரல் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சிறுமியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே, அவர் 7 மாதங்கள் கர்ப்பிணியாக உள்ளார் என்ற அதிர்ச்சித் தகவல் சிறுமிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தெரிய வந்தது. அதன் பின்னரே நடந்த சம்பவங்களை வைத்து சித்திவிநாயகம் கைது செய்யப்பட்டார். அவர் மீதான மரபணுப் பரிசோதனை அறிக்கையும் ஜீன் ரெக் நிறுவனத்தால் 99.99 வீதம் உறுதிப்படுத்தப்பட்டு சித்திவிநாயகமே சிறுமியின் வயிற்றில் உருவான குழந்தைக்குத் தந்தை என்பதை மரபணு காட்டிக் கொடுத்தது.

ஏனைய விசாரணைகளின் மூலமாகவும் சித்திவிநாயகமே குற்றவாளி என்பது நீதிமன்றில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டது. அது பற்றிய வழக்கின் தீர்ப்பு கடந்த 14 ஆம் திகதி வழங்கப்படவிருந்த நிலையில் சித்திவிநாயகம் (தற்போது வயது 79) அன்றையதினம் நஞ்சருந்தி உயிரை மாய்க்க முற்பட்டுள்ளார்.

வன்புணர்வுத் தீர்ப்புக்குப் பயந்து அவர் அவ்வாறு நஞ்சருந்தியிருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதனால் அவர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இதனால் தீர்ப்பு வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டுவந்து நேற்றையதினம் தீர்ப்பு வழங்குவது என்று கடந்த 16 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுவிட்டது. அன்றையதினம் சித்தி விநாயகத்தை மன்றில் முற்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

எனினும் குறித்த வழக்கின் எதிரி இன்னும் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்றும், அவர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்றும் மேல் நீதிமன்றில் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் ச.ஸ்ரீபவானந்தராஜா அறிவித்தார். அத்துடன், சித்திவிநாயகம் பற்றிய மருத்துவ அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் வழக்கில் குறிப்பிடத்தக்க விடயமாக முன்னர் சித்திவிநாயகம் கைது செய்யப்பட்டபோது, சிறுமியைத் தான் வன்புணரவில்லை என்றும் சிறுமி வேறு யாருடனோ தொடர்பு வைத்திருந்துதான் குழந்தையைப் பெற்றுள்ளார் என்றும் சிறுமியைத் தரக்குறைவாகவும் நீதிமன்றச் சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் விசாரணை முடிவில் சிறுமி பிறருடன் தொடர்பு என்றெல்லாம் கூறியமை பொய்ச் சாட்சியம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தீர்ப்பு விசாரணையில் தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய நிலையில், தண்டிக்கப்படவேண்டிய சித்திவிநாயகம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதனால் இப்போது தண்டனை வழங்கப்படவேண்டுமா என்பது கேள்வியாக எழுந்தது. ஆனால் வழக்கு விசாரணை முடிந்த பின்னர் 10 நாள்களுக்குள் அதற்கான தண்டனை வழங்க வேண்டும் என்று சட்டவிதிமுறை கூறுகிறது. அவர் நஞ்சருந்தியுள்ளதால் அந்த நாள் இன்னும் அதிகமாகிவிட்டது. மேலும், சித்திவிநாயகம் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் உள்ளதனால் அவர் மீண்டுவராது போனால் பாதிக்கப்பட்ட சிறுமி மீதான குற்றச்செயலுக்கான தண்டனையை யாருக்கு வழங்குவது? அவ்வாறு அவர் வராதுவிட்டால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படாதுவிட்டால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கும் அவரது குழந்தைக்கும் குடும்பத்தினருக்கும் நீதி கிடைக்காது போய்விடுமா? சிறுமிகள் பெண்கள் மீதான வன்புணர்வுகள் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தற்போது அதிகரித்த நிலையில் தண்டனை வழங்கப்படாது விடுவது ஏற்புடையதாக இருக்காது என்று கூறிய மேல்நீதிமன்ற நீதிபதி, சட்டத்துக்குட்பட்ட வகையில் சித்திவிநாயகம் இல்லாமலேயே அவருக்குத் தண்டனை விதித்தார்.

இதனடிப்படையில் சிறுமியைக் கடத்திய குற்றத்துக்காக 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் வன்புணர்ந்த குற்றத்துக்காக 10 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. தவிர இரண்டுக்குமாக 20 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சிறுமிக்கும் அவர் பெற்ற குழந்தைக்குமென 20 லட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.


வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமியும் எதிரி தரப்பில் சட்டத்தரணி த.விக்னராஜாவும் முன்னிலையாகியிருந்தனர்.

எனினும் எதிரியால் வழங்கப்படும் இழப்பீடான 20 லட்சம் ரூபா தமக்குத் தேவையில்லை என்று பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் தெரிவிக்கின்றனர். சிறுமியை வன்புணர்ந்ததோடு, அவர் வேறு ஆள்களுடன் தொடர்பு வைத்திருந்துள்ளார் என்றும் சமூகத்தில் குற்றஞ்சாட்டுக் கூறப்பட்டு வந்ததனால், அது பற்றிய உண்மைத்தன்மை தீர்ப்பின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டு குற்றவாளி யார் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதுபோதும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தண்டனை வழங்கப்பட்ட சித்தி விநாயகத்தின் பெயரில் உள்ள வங்கிக் கணக்குகளின் விபரத்தை மேல் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்குமாறு நீதிபதி கட்டளையிட்டார். (த-வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி குருகுலசிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி குருகுலசிங்கம் 29.03.2016 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் குருகுலசிங்கம் (குலம்- சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியும் பாமினி(சுவிஸ்), பிருந்தினி(கனடா), தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாளகுமார், ஜெயகாந், ஆதவன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திரிஷா,திலக்ஷன், தமிழவன், ஓவியா, அருண், கவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கனடாவைச் சேர்ந்த இரத்தினபூபதி, மகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் சண்முகராசா (வவுனியா) காலஞ்சென்ற இராசபூபதி ஆகியோரின் சகோதரியும் நவரத்தினசிங்கம், மனோரஞ்சிதம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சி.குருகுலசிங்கம் (குலம்) கனடா.

சிங்கம் வீதி,
உடுவில்.

(70391)
(12.17.18)

077 833 1449, 077 579 3194

## மரண அறிவித்தல்கள்

### அப்புப்பிள்ளை இராசம்மா



நீர்வேலி தெற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புப்பிள்ளை இராசம்மா 29.03.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும் செல்வஞானம் (பராசக்தி), சிவபாதம், மகாதேவன்(சிறி), மகாராசா(அசோ), பவளராணி, மல்லிகாதேவி (தேவி), சிவராசா(சிவா), நவலட்சுமி(நவம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம், லட்சுமி, ருக்மணிதேவி, மங்களாதேவி, சிவலோகநாதன், தர்மகுமார், அனுசா, ராஜ்குமார் ஆகியோரின் மாமியாரும் வாசுகி, கஸ்தூரி, தயானி, தாரணி, தர்சிகா, வசிகரன், மீனலோஜினி, பிரவீனா, சுருதீனா, மதூசன், நிறோசன், சிவசங்கர், சிவதர்சனா, சிவப்பிரகாஸ், லாவண்யா, சிவராம், சரணியா, சந்துசன், விதுசன், சதுசன், அபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துசானி, அஸ்வின், பிரதிகா, தாருண், ஆருத்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

(70388)
(14.17.19)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு : 077 580 3931

### திருமதி கேதீஸ்வரி தர்மசோதி

(இளைப்பாறிய சங்கீத ஆசிரியை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)



கட்டுடையைச் சேர்ந்த இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி கேதீஸ்வரி தர்மசோதி 27.03.2016 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் கட்டுடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனர் தாமோதரம்பிள்ளை கணேசையா நடராசா - தெய்வநாயகி தம்பதியரின் ஏகபுத்திரியும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா - இரத்தினம் தம்பதியரின் மருமகளும் தம்பையா தர்மசோதி (ஓய்வு பெற்ற அதிபர் - சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் குகராஜா(கொழும்பு) காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் சிவராஜா(லண்டன்), தாமோதரன்(கனடா), ராஜேந்திரன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விமலா(கொழும்பு), சீத்தா (லண்டன்), யோகேஸ்வரி(கனடா), மைதிலி(இந்தியா) மற்றும் இணுவிலைச் சேர்ந்த வாலம்பிகை - பஞ்சாட்சரம், சிவயோகவல்லி சுப்ரமணியம், முருகையா, சண்முகநாதன், ராஜேந்திரம் (கனடா), சத்தியபாமா வைரவநாதன், கைலாயநாயகி நவரட்ணசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரோஜினி(லண்டன்), ஷாளினி(கனடா), சுரேஷ்(கொழும்பு), லீனா(கனடா), கங்கா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் இணுவிலைச் சேர்ந்த கோகுலன், கஸ்தூரி, புராதனி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் சிவகஜனி, பீஷ்மன், சுகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியும் அநபாயன், அநுருத்தன், அட்சயன், ரமணிஜா ஆகியோரின் அருமைப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2016) வியாழக்கிழமை கட்டுடையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று அவரின் பூதவுடல் காலை 9.30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பஹாங் ஹவுஸ்,
கட்டுடை, மானிப்பாய்.

தகவல்:
தர்மசோதி (கணவர்)

021 225 6491

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto **26.04.2016** from the qualified persons for the under mentioned posts.

### FACULTY OF TECHNOLOGY

- Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II /Lecturer (Probationary) in **Engineering Technology**

**Note:** Special consideration will be given to those who have degrees in Technology or Engineering in one or more of the following fields:
- Building Construction /Civil Engineering
- Automobile Technology/Mechanical Engineering
- Electro technology/Electrical & Electronic Engineering

- Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in **Bio system Technology**

**Note:** Special consideration will be given to those who have degrees in Bio system Technology specialized in one or more of the following fields
- Food Production Technology
- Commercial Green farming Technology

## SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs. 45,545 – 7 x 1050 – 52,895/- p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 39,755 – 11 x 790 – 48,445/-p.m. |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |

**Note**:
In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance –Senior Lecturer Gr.I/Gr.II – 136% of the basic salary
ii) Academic allowance –Lecturer (Probationary) – 100% of the basic salary
iii) Special allowance -20% of the basic salary
iv) Additional monthly allowance – 20% of the basic salary
v) Cost of living allowance of Rs.7,800/-p.m.
vi) Interim allowance of Rs.10,000/- p.m.
Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Grade I and Senior Lecturer Grade II
(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
(iii) Gratuity payments
(iv) Employees' Trust Fund benefits.
(v) Free Medical Services.

Applications for the above posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self – addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**30.03.2016**

# கண்ணீர் அஞ்சலி

## திருநாவுக்கரசு திலீபன்

( முன்னாள் விற்பனை மேற்பார்வையாளர் LIC )



எமது ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தின் வவுனியா மற்றும் யாழ் கிளைகளில் விற்பனை மேற்பார்வையாளராக பணியாற்றிய எம் இனிய நண்பன் தி. திலீபன் கடந்த 28.03.2016 அன்று மலேசியாவில் அகால மரணமடைந்த செய்தி எமக்கு மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நண்பர்கள் LIC**

(70397) (10.17)

## கடலில் மூழ்கி குடும்பஸ்தர் சாவு

காரைநகர் கசூரினா **கடலில் நீரில் மூழ்கி** உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அரியாலையைச் சேர்ந்த சி.தங்கராசா (வயது - 57) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணையைமேற்கொண்டுள்ளனர். குறித்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## வீதி மின்விளக்கு பொருத்துவதற்குரிய பொருள்களிற்கான கூறு விலை கோரல் நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கான மின்சாரப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலைக்கான படிவத்தை எமது தலைமை அலுவலகத்தில் 08.04.2016 வெள்ளிக்கிழமைக்கு முன் பெற்று, கூறுவிலைகளில் உத்தரவாதகாலம் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையினுள் உள்ளடக்கி உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'வீதி மின் விளக்கு பொருத்துவதற்குரிய பொருள்களிற்கான கூறுவிலை'** எனக் குறிப்பிட்டு 11.04.2016 திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்,**
**31.03.2016**

**திருமதி.தி.அன்னலிங்கம்**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 03 03 1987



உதிர்வு 29 03 2016

Parththeepan Arts - Kilinochchi

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்.

அமரர்

## செல்வராசா கதிர்ச்செல்வன்

(கரப்புக்குத்தி, கனகராயன்குளம்.)

நேற்றுவரை எங்களுடன் இன்முகம் காட்டி நேசமுடன் பழகியதை எம்மால் மறக்க முடியுமா? இன்று முதல் எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு பரமனின் பாதங்களை பற்றிய உன்போல் அன்புள்ளங் கொண்ட இனியவரை எங்கு நாம் தேடுவோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
அங்கத்தவர்கள், பணியாளர்கள்.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
நெடுங்கேணி.

(C/22403)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்கொலை

என்பது உள்ளிட்ட எந்தக் கேள்விக்கும் தற்போது பதில் கூறமுடியவில்லை என்று குறிப்பிட்டுள்ள பொலிஸார் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறுகின்றனர்.
மறவன்புலோ, வல்லக்குளம் பகுதியில் உள்ள குறித்த வீட்டில், அலுமாரியினுள் உரப்பையில் கட்டப்பட்டிருந்த நிலையில், தற்கொலைத் தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்படும் அங்கி, கிளைமோர்கள் - 4, அதற்கான பற்றரிகள் 2, கைத்துப்பாக்கி ரவைகள் 200, சி 4 ரக வெடிமருந்து 12 கிலோகிராம், அலைபேசிக்குப் பயன்படுத்தும் சிம் காா்ட்டுக்கள் - 4, என்பனவே அங்கு மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறுகின்றனர்.
இது தொடர்பில் விஷேட அதிரடிப்படையினரின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வவுனியாவிலிருந்து சாவகச்சேரிக்குச் சென்று பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டிருந்தார்.
மேலும் குறித்த வீட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரும், அவரது மனைவியும் தந்தையாரும் தங்கியிருந்துள்ளனர். சந்தேக நபருக்கு ஒரு குழந்தை உள்ளது. குறித்த சந்தேகநபர் மன்னாரைச் சேர்ந்தவர் என்றும், அதனால் குறித்த வீட்டை வாடகைக்குப் பெற்றிருந்தார் என்றும் கூறப்படுகிறது.
அத்துடன், சந்தேகநபரது மனைவியும் தந்தையாரும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு மனைவி மயங்கி விழுந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தந்தையார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான விசாரணையின்போது, குறித்த வீட்டில் வசித்த சந்தேகநபர் வெளியே சென்று வீடு திரும்பவில்லை என்று கூறப்பட்டுள்ளது. விசாரணை மூலமாகக் குறித்த நபர் கிளிநொச்சி அக்கராயனில் உள்ளார் என்பதைக் கண்டறிந்து, தகவல் வழங்கப்பட்டதன்படி அக்கராயன் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் சந்தேகநபர் வாகனத்தைச் செலுத்திக் கொண்டு சென்றபோது கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.
இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் எட்வேர்ட் ஜூலியஸ் என்றும் அவர் குறிப்பிட்டார்.
சந்தேகநபரைச் சாவகச்சேரிப் பொலிஸார் பொறுப்பெடுத்த நிலையில், பின்னர் பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதில் குறிப்பிடத்தக்க விடயமாக, தற்கொலை அங்கியானது 2008 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்ட சிங்களப் பத்திரிகை ஒன்றில் பொதிசெய்யப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. அது பற்றிய பல கேள்விகளும் முன்வைக்கப்படுகின்றன.
குறித்த வீட்டில் கஞ்சா போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அங்கு பொலிஸார் சுற்றிவளைத்து உள்ளே சென்று சோதனையிட்டபோது, குறித்த வெடிபொருள்கள் இருக்கின்றமை தெரியவந்ததாகக் கூறப்படுகின்றது. எனினும் கஞ்சா என்ற அடிப்படையில்தான் அங்கு சென்று தேடுதல் நடத்தப்பட்டதா என்பதில் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. அது பற்றிய விளக்கமும் கூறப்படவில்லை.
குறித்த வீட்டில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டதையடுத்து, அங்கு பொலிஸார் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். யாரும் உள்நுழைய அனுமதிக்கப்படவில்லை. விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். வீட்டின் உரிமையாளர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.
குறித்த சம்பவத்தின் பின்புலம் தொடர்பில் உத்தியோகபூர்வத் தகவல்கள் வெளியாகவில்லை.

(த-வ-4-101-106-9-ரி4)

## வடக்கு

கின்றது.
நாட்டின் புதிய அரசமைப்பு தயா ரிக்கும் நடவடிக் கைகள் இடம் பெற்று வருகின்றன. இதற்கு வடக்கு மாகாண சபையும் தனது தீர்வுத்திட்ட யோசனையை வழங்கவுள்ளது. இந்தத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக் கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழு மூன்று பிரிவுகளாகத் தீர்வுத் திட்டத் தயாரிப்பில் ஈடுபட்டது. மூன்று குழுக்களினாலும் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
இதனை இறுதி செய்யும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. ஆனாலும் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்வுத் திட்ட வரைவு இறுதி செய்யப்படவில்லை.
ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாகாண சபைகளில் கடந்த காலங்களில் தனது பிரேரணைகளில் குறிப்பிட்ட சில முக்கிய விடயங்களையும் தீர்வுத் திட்ட வரைவில் உள்ளடக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பில் எந்த முடி வும் எடுக்கப்படாமலேயே, நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் நிறைவடைந் துள்ளது.
இந்த நிலையில் இன்றைய தினம் மாலை 5 மணிக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இதன்போது தீர்வுத் திட்ட வரைவு இறுதி செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(த-வ-5)

## பெருமளவு

பொலிஸார் மீட்டுள்ளனர்.
கடந்த 2008 ஆம் ஆண்டுமுதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான சுமார் 7 வருடங்களாகக் குறித்த கமநல சேவைகள் நிலையத்திற்கு சொந்தமான காணியில், இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையம் அமைந்திருந்தது.
எனினும் பொலிஸ் நிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட நிலையில் மீண்டும் கமநல சேவைகள் நிலையம் இயங்கி வந்தது.
இந்த நிலையில் குறித்த இலுப்பைக்கடவை கமநல சேவைகள் நிலையத்துக்குச் சொந்தமான காணியின் பின் பகுதியில், பெருந்தொகையான ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக இலுப்பைக்கடவை பொலிஸாரினால் மன்னார் நீதிவானின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.
இது தொடர்பில் குறித்த பகுதிக்கு நேற்று பிற்பகல் 2 மணியளவில் மன்னார் நீதிவான் சென்றிருந்தார். இதன்போது புதைக்கப்பட்ட நிலையில் பெருந்தொகையான வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது.
குறித்த குழியில் இருந்து எம்.ஜீ.எல்.40 மில்லி மீற்றர் குண்டுகள்-02, ஆகஸ் கைக்குண்டு-01, ரி.82 தரம் ஒன்று வகை குண்டு-02, ரி.82 வகை இரண்டு குண்டுகள்-05, ஜே.ஆர்.குண்டுகள்-02, கே.400 தர குண்டுகள்-03, சிங்கப்பூர் குண்டு-01, கிளைமோர்-06, ரங்கன் 99 தர நிலக்கண்ணி வெடிகள்-16 மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் பியூஸ்கள்-16, பாகிஸ்தான் நிலக்கண்ணி வெடிகள்-02, அதற்கான பியூஸ்-01, மின்சார பலகை வெடிபொருள்-01, அருள் செல்கள்-03, 6 மில்லி மீற்றர் மோட்டார் செல்-01, மற்றும் தோண்டப்பட்ட பெரிய குழியில் இருந்து உக்கிய நிலையில் பெரிய இரும்பு பெட்டகம் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
குறித்த வெடிபொருள்களை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.
மேலும் குறித்த பகுதிக்குள் வரும் மக்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படாத வகையில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். குறித்த ஆயுதங்கள் அகழ்வு செய்யப்பட்டபோது, பொலிஸார், கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-56)

## தேசிய

டியாராச்சி தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.
இதன்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனது பதிலில்,
தேசிய பாதுகாப்புக்கும் சில இடங்களில் கண்டு பிடிக்கப்படும் பொருள்களுக்கும் நிறைய இடைவெளி காணப்படுகின்றது. இதற்கு முன்னரும் இவ்வாறான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
கடந்த பல வருடங்களாகத் தினமும் இவ்வாறான பொருள்கள் கண்டெடுக்கப்படுவதுடன், சிலர் கைது செய்யப்படுவது தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப் பெறுகின்றன. அது தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கான முழுப் பொறுப்பும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் அறிவித்ததன் பின்னர் அது பாரதூரமான விடயமாக இருக்கும் பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சு அது தொடர்பில் கவனம் செலுத்தும் - என்றார்.

(த-வ-5)

## திட்டமிட்டபடி

தினம் பல்வேறு வெடிபொருள்கள் மீட்கப்பட்டிருந்தன. குறிப்பாகத் தற்கொலை அங்கி மீட்கப்பட்டிருந்தது.
மைத்திரிபாலவின் யாழ்ப்பாணப் பயணத்தை இலக்கு வைத்தே இவை வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தால், ஜனாதிபதியின் யாழ்ப்பாணம் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நேற்றைய தினம் கொழும்பு இணைய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.
இந்த நிலையில் ஜனாதிபதி செயலக வட்டாரங்களிடம் இது தொடர்பில் கேட்டபோது, ஜனாதிபதி மைத்திரிபாலவின் யாழ்ப்பாணப் பயணம் திட்டமிட்டபடி இடம்பெறும் என்று தெரிவித்துள்ளன.
யாழ்.நகரில் அமைந்துள்ள ஜெட்விங் விடுதியைத் திறப்பதற்காக எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)


### மரண அறிவித்தல்
(நேரம் மாற்றப்பட்டுள்ளது)

### Dr. செல்லப்பா சபாநடேசன்



8ஆம் கட்டை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.செல்லப்பா சபாநடேசன்( நிர்வாக சபை உறுப்பினர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்) 28.03.2016 அன்று கொழும்பில் காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2016) பிற்பகல் 2.30மணியளவில் 8 ஆம் கட்டை துர்க்காபுரத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
8ஆம் கட்டை, துர்க்காபுரம்.
தொ. இல 077 340 5962
பி. பிரதீபா (மகள்)
க. பிரதீப்குமார் (மருமகன்)

### மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பாலச்சந்திரன்



பிறப்பு 31.05.1953
இறப்பு 30.03.2016

தட்டுவன் கொட்டி, ஆனையிறவைப் பிறப்பிடமாகவும் கண்ணகி நகர்.புன்னைநீராவி, விசுவமடுவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலச்சந்திரன் நேற்று (30.03.2016) புதன்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைக்கள் இன்று (31.03.2016) வியாழக்கிழமை அன்னாரின் தற்போதைய வதிவிடத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் 12 ஆம் கட்டை விசுவமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்ணகி நகர்,
புன்னை நீராவி.

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி சின்னராசா

தோற்றம்
10 . 03 . 1940



மறைவு
30 . 03 . 2016

ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் ஸ்ரேசன், பழம் றோட் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னராசா 30.03.2016 இறைவனடி எய்திவிட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31.03.2016 முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆனைக்கோட்டை.

### சூசைப்பிள்ளை தேவசகாயம் (பூராசா)

(இளைப்பாறிய ஆசிரியர், முன்னாள் பட்டின சபை தலைவர் - ஊர்காவற் துறை)

பிறப்பு 17.12.1930
இறப்பு 29.03.2016



ஊர்காவற்துறை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை தேவசகாயம் கடந்த 29.03.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - மரியமாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான பிலிப்பையா - மேரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கிறிஸ்ரீனம்மாவின் அன்புக் கணவரும் சாள்சினி, எல்மோ அன்ரனி, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யேசுதாசன், றொசிற்றா, யேசுரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் டர்மிஷன், டனோஷன், டிறோஷன், தர்சிக்கா, நிரோசிக்கா, சர்மிளா, சாளின் ஆகியோரின் அன்புப் பேரனும் டிவோண், வேனியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்ற றெஜினோல்ட் மற்றும் அனற், ராஜசேகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்ரனி அம்மா காலஞ்சென்ற அல்வின் மற்றும் பிறேமளா காலஞ்சென்றவர் களான மரியநாயகம், ராணி, யோசேப்பின், விக்டோரியா மற்றும் பிலோமினா ஆகியோரின் மைத்துனருமாவார்.
அன்னாரின் நல்லடக்கம் 01.04.2016 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பொறளை கனத்தையில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

B3/F9, புளுமெண்டல்
தொடர்மாடி, கொட்டாஞ்சேனை

தகவல்:
மருமகன் யேசுதாசன்

தொடர்பு: 077 6164020, 011 4615709



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நாமகள் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும்



ஆட்டத்தில் புத்தூர் விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா அணி மோதவுள்ளது.
தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை கலையொளி அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதவுள்ளது. (ம-23)





# யாழ். பளுதூக்கல் தொடரின் முடிவுகள்

கரணவாய், மார்ச் 31
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். செயலக விளையாட்டுப் பிரிவினர் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய இருபாலாருக்குமான பளுதூக்கல் தொடர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெற்றது. குறித்த தொடரில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விவரம் வருமாறு :-
56 கிலோவுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் உ.சுஜந்தன் (நல்லூர்) முதலாமிடத்தையும், எஸ்.அபிநயன் (ஊர்காவற்றுறை) இரண்டாம் இடத்தையும், ஏ.பிறேமன் (யாழ்ப்பாணம்) மூன்றாமிடத் தையும் கைப்பற்றினர்.
56-62 கிலோ எடைப்பிரிவில் எஸ்.சிவப்பிரியன் (கோப்பாய்) முதலாமிடத்தையும், கே.குகிந்தகுமார் (தெல்லிப்பழை) இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.
62-69 கிலோ எடைப்பிரிவில் ஏ.எட்வின்வூட் (நல்லூர்) முதலாம் இடத்தையும், ஆர்.சபாஸ்கரன் (கோப்பாய்) இரண்டாம் இடத்தையும், எஸ்.திவாகர் (சங்கானை) மூன்றாமிடத்தையும் பெற்றனர்.
69-77 கிலோ எடைப் பிரிவில் எஸ்.விஸ்காந் (கோப்பாய்) முதலாமிடத்தையும், எஸ்.சுபாயனன் (உடுவில்) இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.
77-85 கிலோ எடைப்பிரிவில் எஸ்.மிதூன் (சண்டிலிப்பாய்) முதலாம் இடத்தையும், ஆர்.பிரகலாதன் (நல்லூர்) இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.
85-94 கிலோ எடைப்பிரிவில் கே.ஸ்ரீசன் (கோப்பாய்) முதலாம் இடத்தையும், கே.திசானந் (நல்லூர்) இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.
94-105 கிலோ எடைப் பிரிவில் என்.டிலகஸ்குமார் (கோப்பாய்) முதலாம் இடத்தைப் பெற்றார்.
105 கிலோவுக்கு மேற்பட்ட பிரிவில் எஸ்.சபிதன் (சாவகச்சேரி) முதலாமிடத்தையும், எஸ்.மைத்திரசர்மா (உடுவில்) இரண்டாம் இடத்தையும், ரி.கிரிசன் (சாவகச்சேரி) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.
48 கிலோவுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் ஜே.பவித்திரா (உடுவில்) முதலாம் இடத்தையும், எஸ்.வக்சனா (உடுவில்) இரண்டாம் இடத்தையும், ரி.லோயன்சிகா (உடுவில்) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.
48-53 கிலோ எடைப்பிரிவில் பி.குயனி (உடுவில்) முதலாம் இடத்தைக் கைப்பற்றினார்.
53-58 கிலோ எடைப் பிரிவில் ஜே.நிலக்சா (உடுவில்) முதலாம் இடத்தைக் கைப்பற்றினார்.
58-63 கிலோ எடைப்பிரிவில் வி.ஆசிகா (யாழ்ப்பாணம்) முதலாம் இடத்தைக் கைப்பற்றினார். (ம-108)

## வென்றது மன்னார் கில்லறி வி.கழகம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
எவ்.ஏ. கிண்ணத்துக்காக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் கில்லறி அணி வெற்றிபெற்றுள்ளது.
தாழ்வுப்பாடு ஆயர் ஜோசெப் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து திருகோணமலை ஒலிம்பிக் அணி மோதிக் கொண்டது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. இதில் மன்னார் கில்லறி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## நாமகள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இதுவரையில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதிக் கொண்டது. இதில் யங்கம்பன்ஸ் அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண் டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து திருமகள் அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி யுத் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில், முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். ஐக்கிய அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதிக் கொண்டது. இதில் சமரபாகு நியூட்டன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில், முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிறிஅம்பாள் அணி மோதிக் கொண்டது. இதில் நவாலி சென்.பீற்றர்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து அராலி சில்வெஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் அராலி சில்வெஸ்ரார் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில், முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதிக் கொண்டது. இதில் மானிப் பாய் றெட்றேஞ்சர்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது.
திங்கட்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதிர்த்து பெரியவிளான் சென்.அன்ரனிஸ் அணி மோதிக் கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணி களும் தலா மூன்று கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதில் சிவானந்தா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணி மோதியது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் அணி மோதிக் கொண்டது. இதில் உரும்பிராய் சரஸ்வதி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உரும் பிராய் திருக்குமரன் அணியை எதிர்த்து சண்ஸ்ரார் அணிமோதிக் கொண்டது. இதில் உரும்பிராய் திருக் குமரன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

### தொடர்ச்சிகள்

## மீளெழுகின்றனராம்

புலிகளின் பயங்கரவாதம் மீள் எழுச்சி பெறாது என்று நினைத்தவர்கள், அது தொடர்பில் மீளச் சிந்திக்கவேண்டும்.
பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு மாத்திரமன்றி, நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளமைக்கு அரசே கட்டாயம் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.
எனினும் சாவகச்சேரிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தற்கொலை அங்கிகள் மீட்கப்பட்டமை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான ஒன்று அல்ல என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்திருந்தார்.
இது குறித்தும் நாமல் ராஜபக்ச தனது ருவிட்டர் வலைத்தளத்தில் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.
தற்கொலை அங்கிகள் மீட்கப்பட்டமை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயம் அல்ல என்றால், யார் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றார்கள் என்று கேள்வி எழுப்பியுள்ள நாமல் ராஜபக்ச, அவர்களின் நோக்கம் என்னவெனவும் கேட்டுள்ளார். (து-வ-5)

## சாவகச்சேரி

தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுக் காலை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது அவர் கூறுகையில்,
சாவகச்சேரிப் பகுதியில் இன்று (நேற்று) வீடொன்றிலிருந்து தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு ஏதுவான சில வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கஞ்சா இருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில், குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனைச் சாதாரணமாகக் கருதிவிட முடியாது.
எமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், குறித்த வெடிபொருள்களைக் கொழும்புக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.
நிலைமை இப்படி இருக்கையில், சம்பூர் உட்பட ஏனைய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அரசு அகற்றி வருகிறது. அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் நீக்கவுள்ளது. விடுதலைப் புலி உறுப்பினர்களையும் விடுதலை செய்து வருகின்றது.
இவ்வாறானதொரு நிலையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு ஏதுவான பொருள்கள் வட பகுதியில் வீடொன்றிலிருந்து மீட்கப்படுவது நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு சமிக்ஞையாக விளங்குகின்றது - என்றார். (து-வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இறுதிக்குச் சென்றது இங்கிலாந்து நியூசி.யை நேற்றுப் புரட்டியெடுத்து

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான அரையிறுதியில் 7 இலக்குகளால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது இங்கிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. நியூசிலாந்தின் ஆரம்பம் நம்பிக்கை தரும் வகையிலேயே அமைந்தது. குப்தில் ஆட்டமிழந்தாலும் அணித்தலைவரான வில்லியம்சன், முன்றோ இணைந்து இங்கிலாந்தின் பந்துப்பரிமாற்றங்களை முறையாகக் கவனித்தனர். 32 ஓட்டங்களுடன் வில்லியம்சனும், 46 ஓட்டங்களுடன் முன்றோவும் ஆட்டமிழக்க அந்த அணியின் பின்வரிசையில் சடுதியான தடுமாற்றம் ஏற்பட்டது. இறுதி நம்பிக்கையான ரெயிலர், எலியாட் இருவரும் மத்திய வரிசையில் கைவிட முடிவில் நியூசிலாந்து 153-8.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஸ்ரோக்ஸ் 3 இலக்குகளையும்,மொயின்அலி,வில்லி, ஜோர்தான், புனேகட் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்ப இணையே அதிரடியான தொடக்கம் அமைத்துக் கொடுத்தனர். குறிப்பாக அந்த அணியின் றோய் பவுண்டரிகளையும் சிக்சர்களையுமே தனது இலக்காகக் கொண்டிருக்க 5 பந்துப்பரிமாற்றங்களில் 60 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. கேல்ஸை வெளியேற்றினார் சான்நெர். 78 ஓட்டங்களுடன் றோய் ஆட்டமிழந்ததுதான் தாமதம் அடுத்த பந்திலேயே வெளியேறினார் மோர்கன். திடீர் சரிவு கண்டது சராசரி. 36 பந்துகளில் 36 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தபோது பட்லரின் அதிரடி ஆரம்பமானது. அடுத்தடுத்து பவுண்டரிகள், சிக்சர்கள் என விளாசி 17 பந்துகள் மீதமிருக்க ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தார். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சொட்கி இரு இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக றோய் தெரிவானார். (ம)

# இறுதிக்குத் தகுதி பெற்றது ஆஸ்திரேலியா பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத்தில்

பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் இங்கிலாந்தை 5 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது ஆஸ்திரேலியா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியில் உள்ள முன்னணி வீராங்கனைகளின் சிறப்பான செயற்பாட்டால், 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகள்ளை இழந்து 132 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அணித்தலைவியான லன்னிங் 55 ஓட்டங்களையும், ஹேலி 25 ஓட்டங்களையும், விலனி 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து சார் பாக ஸ்கைவர் 2 இலக்குகளையும், மார்ஷ், குன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்துக்கும் ஆரம்பம் கச்சிதமாக அமைந்தது. இலக்குகள் இலகுவில் பறிபோகவில்லையென்றாலும் மத்திய வரிசை வீராங்கனைகளின் அளவுக்கு அதிக நிதானத்தினால் அந்த அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும், 7 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக பியமொன்ட் 32 ஓட்டங்களையும், எட்வாட்ஸ் 31ஓட்டங்களையும், ரெயிலர் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்கெச்ல்ட் 2 இலக்குகளையும், பெர்ரி, பர்ரெல், பீம்ஸ், ஒஸ்பேர்ண் நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்டநாயகியாக லன்னிங் தெரிவானார். (ம)



## அரையிறுதிக்கு தகுதியில்லை

### மத்தியூஸ் வேதனை

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குச் செல்ல இலங்கை அணிக்கு தகுதியில்லை என்றுமத்தியூஸ்வேதனையாகத் தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில் - தற்போதுஅணியில் அனுபவ வீரர்கள் கிடையாது தான். ஆனால் அதைக் காரணமாகச் சொல்வது சரியானது அல்ல. இது உலகக்கிண்ணத் தொடர். இங்குஅனைவரும் சிறப் பாகச் செயற்பட்டுத்தான் ஆகவேண்டும். ஆனால் அது முடியாமல் போய் விட்டது. இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 15 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தோம். இதைத்தவிர இழக்கஒன்றுமில்லை என்றாகிவிட்டதுஎன்றார். (ம)

## நியூசி. - தீவுகள் இன்று அரையிறுதி

பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்தை எதிர்த்து மேற்கிந்தியத் தீவுகள் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளது. இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா ஏற்கனவே இறுதிக்கு தகுதி பெற்றுவிட்ட நிலையில் ஆஸ்திரேலியாவுடன் இறுதியில் பலப்பரீட்சை செய்யவுள்ள அணி எது என்பது இன்று தீர்மானமாகும்.




# தவான், ரோகித் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்ய மாட்டோம்

## சமியின் வேடிக்கைக் கருத்து



ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் இந்தியாவை வீழ்த்துவதற்கும், கோக்லியைக் கட்டுப்படுத்துவதற்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமி வைத்துள்ள திட்டம் அனைவரையும் சிரிக்கவைத்துள்ளது. இந்திய அணியின் தொடக்க வீரர்களான ரோகித், தவான் இருவரதும் ஆட்டம் மிகவும் மோசமாக உள்ளது. ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கு முன் அதிரடியில் மிரட்டிக் கொண்டிருந்த தொடக்க வீரர்கள் தற்பொழுது தடுமாறி வருகிறார்கள். அனைத்து ஆட்டங்களையும் கோக்லி, யுவராஜ், டோனிதான் கடைசியில் போராடி வெற்றி பெற வைக்கின்றனர். இதனாலேயே டோனி, கோக்லி மட்டுமே எல்லா ஆட்டங்களையும் வென்று கொடுக்க மாட்டார் என்று ரோகித், தவானுக்கு மறைமுகமாகக் குட்டு வைத்தார். இந்நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமியும் தன் பங்கிற்கு ரோகித், தவானைக் கலாய்த்துத் தள்ளியுள்ளார்.

செய்தியாளர்கள் சந்திப்பின் போது கோக்லியைத் தடுக்க ஏதும் திட்டம் வைத்திருக்கிறீர்களா என்று சமியிடம் கேட்ட போது, தொடக்க வீரர்கள் ரோகித், தவான் இலக்கை வீழ்த்த மாட்டோம். இது தான் எங்கள் திட்டம். அவர்களில் ஒருவரை வீழ்த்தினால்தானே கோக்லி களமிறங்க வேண்டிவரும் என்று கிண்டலாகப் பதிலளித்துள்ளார். (ம)

# "இந்தியாவை மிரட்டுவேன்" கிறிஸ் கெயிலின் சபதம்

இந்தியாவுக்கு எதிராக இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் அதிரடியில் கலக்கத் தயாராக இருப்பதாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வீரர் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஆட்டம் தொடர்பாக கெயில் மேலும் தெரிவிக்கையில் - இந்திய அணியில் பல திறமையான வீரர்கள் உள்ளனர். இங்கு அவர்களை தோற்கடிப்பது கடினமான காரியம். எங்களது இலக்கு விராட் கோக்லி மட்டும் இல்லை. குறிப்பிட்ட நாள் சாதகமாக அமைந்தால், எந்த ஒரு வீரராலும் அதிரடியில் கலக்க முடியும். இந்தத் தருணத்தில் விராட் கோக்லிதான் கவனிக்கத்தக்க வீரராக இருக்கிறார். எங்களுக்கு எதிராக அவரை ஓட்டங்கள் குவிக்க விடாமல் தடுப்போம். மேலும், எனக்கு எதிராக அஸ்வினையோ அல்லது வேறு யாரை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். அணித் தலைவர் டோனி என்ன செய்வார் என்பதைக் கணிக்க முடியாது. அதே சமயம் கெயிலால் என்ன செய்ய முடியும் என்பதைக் காட்ட நான் தயாராக உள்ளேன். யார் பந்து வீசினாலும் நான் அவர்களின் பந்துகளை விளாசித் தள்ள முயற்சிப்பேன் - என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rotary JAFFNA யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்

**உதவும் கரங்கள் செயற்றிட்டம் – 2016**



ஆஸ்திரேலிய றோட்டறிக் கழகங்களின் அனுசரணையுடன் யாழ். றோட்டறிக் கழகத்தினால் இரண்டாவது தடவையாகவும் இயங்கும் திறன் கொண்ட செயற்கைக் கைகள் பொருத்தும் செயற்றிட்டம் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி யாழ்ப்பாணம், கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. தேவையுடையவர்கள் மேலதிக விபரங்களுக்காகவும், பதிவு செய்வதற்காகவும் 03.04.2016 க்கு முன்னதாகத் தொடர்பு கொள்ளலாம்.

றோட்டறிச் செயலகம் – யாழ். றோட்டறிக் கழகம்
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண் : 071 869 7697

## விக்ரோறியின் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31 மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் கரப்பந்தாட்டத் தொடர் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. கிருபா லேணர்ஸ் அனுசரணையில் நடத்தப்படவுள்ள குறித்த தொடரில், பங்குபற்ற விரும்பும் கழகங்கள் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதிக்கு முன் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம)

**பணியாளர்கள் தேவை**

பிரபல தனியார் கல்வி நிறுவனத்துக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

1. எழுதுவினைஞர் (பெண்கள்)
2. வகுப்பறை மேற்பார்வையாளர்கள் (ஆண்கள்)

**நேர்முகத்தேர்வு 01.04.2016**
**மாலை 4 மணிக்கு**

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY ROAD, JAFFNA.

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
K.K.S றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)

**A/L 2018**
**பொருளியல்**
**S. மகேந்திரன்**
[BA, PGDE, MA(Eco,spl)]

**பிரிவு II சனி, ஞாயிறு**
யாழ் நகரில் : 10.00 am
இணுவிலில் : 4.00 pm

**A/L Day Class**
- யாழ்நகரில் செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
- வாரத்தில் 8 மணித்தியால வகுப்புக்கள் அலகு ரீதியான துரித மீட்டலும், வினா விடை வகுப்பும் நடைபெறுகின்றன.

Note: BARATHY சித்தன்கேணியில் A/L 2018 வியாழன். 4.00 pm

உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்

இந்தியன் றெறாசோ சிப்ஸ் விற்பனை ரூபா 1200/=

றெறாசோ வேலைகள் செய்து தரப்படும்
**"மாபிள்ஸ்"**
சுழிபுரம் பத்திரகாளி கோயில் சந்தி, கண்டாவளை, தொல்புரம்.
077 9541877, 077 355 3372

**BARATHY**
சித்தன்கேணி

**O/L Day Class**

ஆரம்பம்:- 04.04.2016
திங்கள் :- 8.00 am

எமது வழமையான அதி திறமை கொண்ட ஆசிரிய குழுவினால் வழமைபோல் 80 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

**உங்கள் அனுமதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்**

இயக்குநர் ஆசிரியர்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்**

**அமரர் கு.சந்திரகாசன் (B.A (Hons)**
(சமாதான நீதவான் அபிவிருத்தி உத்தியோகத்தர்
காணி அபிவிருத்தி நிறுவகம் கிளிநொச்சி)



தாயின் மடியில்
02.10.1982

ஆண்டவன் அடியில்
21.10.2014

**22 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்**

**த.குமாரசூரிய இராஜவடிவேல்**
(அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம் - செயலாளர்
கிராமிய வங்கி முகாமையாளர்)

தாயின் மடியில்
05.04.1934

ஆண்டவன் அடியில்
12.04.2015

திதி: அட்டமி (31.03.2016)

**திருமதி மனோரஞ்சிதம்குமாரசூரிய இராஜவடிவேல்**

தாயின் மடியில்
13.11.1939

ஆண்டவன் அடியில்
31.01.1994



தாய் தந்தை தமை இழந்து தம்பியையும் தானிழந்து
ஆண்டுகள் தாம் ஓடியதோ ஆன துயர் மாறலையே!
காலன் வைத்த கணக்கினிலே கண்ணீரில் தாமுழன்று
ஆவலுடன் தவிக்கின்றோம் அம்மா அப்பா தம்பிக்காய்......
துடித்தழுதோம் துயர் சுமந்தோம் துன்பமதில் வாடுகின்றோம்
இறைஞ்சுகின்றோம் மறு வாழ்வு இருள் நீங்கி சாந்திபெற......
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !

இன்று (31.03.2016) வியாழக்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டு
திதி பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்
(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
**சிவசக்தி கோயிலடி,**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.